# உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 ஐப்பசி 18 வெள்ளிக்கிழமை (04.11.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 343




14

எங்களுக்கேன் இந்த நிலை



21

ஐரோப்பிய யூனியன் செழிப்பை இந்தியா விரும்புகிறது



25

இலங்கை வலுவான நிலையில்

நாளை முதல் உங்கள் உதயனில் சனிப் பெயர்ச்சி

# இலங்கை மனித உரிமை மீறல் குறித்து ஆராய ஜெனிவாவில் விசேட மாநாடு

## எதிர்வரும் 8 ஆம், 9 ஆம் திகதிகளில் நடைபெறும்

கொழும்பு, நவம்பர் 4

இலங்கையின் மனித உரிமை மீறல்கள் குறித்து சர்வதேச நாடுகள் கடுமையான தொடர் விமர்சனங்களை முன்வைத்துவரும் தற்போதைய சூழ்நிலையில், அது குறித்து ஆராய்வதற்காக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஓர் அமைப்பான சித்திரவதைகளுக்கெதிரான குழு (Committee Against Torture) எதிர்வரும் 8 மற்றும் 9ஆம் திகதிகளில் ஜெனிவாவில் அவசரமாகக் கூடவிருக்கின்றது.

இலங்கை மனித உரிமை மீறல்கள் குறித்து ஏற்கனவே ஆராய்ந்திருக்கும் இந்தக் குழு, அது குறித்தான சிபார்சுகளைக் கடந்த காலங்களில் இலங்கையிடம் கொடுத்திருந்தது. இப்போது அந்தச் சிபார்சுகள் இலங்கை அரசால் கிரமமாக அமுல்படுத்தப்பட்டுள்ளதா என்பது பற்றி இந்தக் குழு ஆராயுமென எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கையில் மனித உரிமைகள் மேம்பாட்டில் ஆரோக்கியமான நிலைமை இல்லையென உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மனித உரிமை ஆர்வலர்களும், அமைப்புகளும் செய்துள்ள முறைப்பாடுகளையும் சித்திரவதைகளுக்கெதிரான குழு இந்த முறை விரிவாக ஆராயவிருக்கிறது.

அதேவேளை, மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து இலங்கை அரசு, ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு அளித்திருக்கும் விளக்கமும் இந்தக் கூட்டத்தின்போது தீவிரமாக ஆராயப்படவிருக்கிறது.

இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் குறித்து சர்வதேச மன்னிப்புச் சபை, ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு, சர்வதேச ஜூரர்களுக்கான ஆணைக்குழு, இலங்கை அரச சார்பற்ற அமைப்புகளின் கூட்டமைப்பு உட்பட்ட நிறுவகங்கள் செய்திருக்கும் விமர்சனங்களும் இந்தக் கூட்டத்தின்போது விரிவாக ஆராயப்படவுள்ளன. (த-சி)

# முன்னாள் பிரதம நீதியரசரையும் சிறைக்குள் தள்ள அரசு முயற்சி

## சரத் பொன்சேகா குற்றச்சாட்டு

கொழும்பு, நவ.4

முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என்.சில்வாவையும் தன்னைப் போன்று கூண்டுக்குள் தள்ள அரசு சூழ்ச்சி செய்துவருகிறது என வெலிக்கடை சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா குற்றஞ்சாட்டியுள்ளார்.

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பாலித ரங்கே பண்டார நேற்றுமுன்தினம் வெலிக்கடை சிறைச்சாலைக்குச் சென்று பார்வையிட்டார். இதன்போதே சரத் பொன்சேகா மேற்கண்ட குற்றச்சாட்டை முன்வைத்தார் என பாலித ரங்கே பண்டார எம்.பி. நேற்று 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

நீதிமன்றம் எந்தவித தலையீடும் இன்றி சுதந்திரமாக செயற்படும் என்றால் வெள்ளைக்கொடி வழக்குத் தீர்ப்பு வழங்கப்படும் தினமான எதிர்வரும் 18ஆம்

பக் 25

# குடாநாட்டில் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் கட்டுப்படுத்தப்படும்

## பதில் பிரதிப் பொலிஸ்மா அதிபர் உறுதிமொழி

யாழ்ப்பாணம், நவ.,4

யாழ். மாவட்டத்தில் பெண்களுக்கு எதிராக இடம்பெறும் வன்முறைகளை ஒரு மாதகாலத்துக்குள் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என யாழ். மாவட்ட பதில் பிரதிப் பொலிஸ் மா அதிபர் ரி.இந்திரன் தெரிவித்ததாக அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட அரச அதிபருக்கும் யாழ்.. மாவட்டத்துக்குப் புதிதாக வந்துள்ள பதில் பிரதிப் பொலிஸ் மா அதிபர் ரி.இந்திரனுக்குமிடையிலான சந்திப்பு ஒன்று நேற்று மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றது. இதன்போதே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

கலந்துரையாடல் தொடர்பாக அரச அதிபர் தெரிவித்தவை வருமாறு:

பெண்கள் மீதான வன்முறைகள் தொடர்பில் கூடிய நேரம் கலந்துரையாடப்பட்டது. பெண்கள் மீதான வன்முறைகள் தொடர்பில் எனக்குக் கிடைத்துள்ள முறைப்பாடுகளைப் பொலிஸாரிடம் வழங்கியுள்ளேன். இது தொடர்பில் மிக விரைவில் நடவடிக்கை எடுப்பதாகப் பதில் பிரதிப் பொலிஸ் மா அதிபர் தெரிவித்துள்ளார்.

மேலும் யாழ். குடாநாட்டு மக்கள் அமைதியான சூழ்நிலையில் வாழ்வதற்குரிய சகல வழிவகைகளையும் மேற்கொள்வதாகவும் பிரதிப் பொலிஸ் மா

பக் 25

# புலிகளின் சொத்துக்களை கைப்பற்றச் சட்டம் தேவை

## ரணில் கோரிக்கை

விடுதலைப் புலிகளுக்குச் சொந்தமான சொத்துகளைக் கைப்பற்றுவதற்கான சட்டமொன்றைக் கொண்டுவர வேண்டும் - என்று அரசிடம் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கோரிக்கை விடுத்துள்ளார்.

ஐ.தே.கவுடன் இணைந்த ஐக்கிய லக் வனித்தாவினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஓட்டோ உரிமையாளர்களின் மனைவிமார்களுக்கான செயலமர்வொன்று

பக் 04

# ரஞ்சன் மாத்தாய், சிவ்சங்கர் மேனன் ஆகியோருக்கு எதிராக வழக்கு

கொழும்பு, நவ.4

இந்திய மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் தாக்குதல் நடத்துவது தொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறு நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவினை மத்திய அரசாங்கத்தின் உயர் அதிகாரிகள் உதாசீனம் செய்துள்ளதாக குற்றம் சுமத்தி மீண்டும் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சென்னை மேல் நீதிமன்றில் இந்த வழக்குத் தொடரப்பட்டுள்ளது.இந்திய மீனவர்களுக்கு போதியளவு பாதுகாப்பு வழங்கப்பட வேண்டுமென சென்னை மேல் நீதிமன்றம் கடந்த 14ஆம் திகதி

பக் 04

# லஞ்சம் பெற்ற கிராம அலுவலர் துணுக்காயில் கைதானார்

கிளிநொச்சி, நவ.4

முல்லைத்தீவு, துணுக்காய் பகுதியில் இலஞ்சம்பெற்ற கிராம சேவையாளர் ஒருவரை இலஞ்ச ஊழல் தடுப்புப் பிரிவினர் கைது செய்து கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நிதிமன்றில் நேற்று ஆஜர் படுத்தியுள்ளனர்.

வன்னிப் பிரதேசத்தில் இவ்வாறான ஒரு சம்பவம் முதன்முறையாக இடம் பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது:-

முல்லைத்தீவு துணுக்காய் உதவி அரசாங்க அதிபர் பிரதேசத்தில் தென்னியன்குளம் கிராம அலுவலராகக் கடமையாற்றிவரே இவ்வாறு கைது செய்யப்பட்டவராவார்.

பக் 25

# தேச வழமைச் சட்டத்தை உடன் இரத்துச் செய்யுங்கள்

## மேதானந்த தேரர் கோரிக்கை

கொழும்பு, நவ.4

தற்போது நடைமுறையிலிருக்கும் தேசவழமைச் சட்டத்தை உடன் இரத்துச் செய்யவேண்டும் எனத் தெரிவித்த ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் எல்லாவல மேதானந்த தேரர், வடக்கில் இன்று ஏற்பட்டுள்ள காணிப் பிரச்சினைக்கு இந்தச் சட்டமே மூலக் காரணம் என்றும் கூறினார்.

இந்தச் சட்டத்தை இரத்துச் செய்வதன் மூலம் இலங்கை நாட்டிலுள்ள நம் அனைவரதும் காணிப் பிரச்சினைகளும் தீர்ந்துவிடும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

அவர் இதுதொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

இந்த நாட்டில் தமிழ், முஸ்லிம் மக்கள் செறிந்து வாழ்ந்தாலும், சிங்கள மக்களே பெரும்பான்மையின மக்களாக உள்ளனர். நம் அனைவரும் இலங்கைப் பிரஜைகளே.

வடக்கு மாகாணத்தில் தமிழ் மக்களே செறிந்து வாழ்கின்றனர். இதனால் அந்த மாகாணத்திலுள்ள காணிகள் அனைத்தும் வடக்கு மக்களுக்கே சொந்தம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட சிலர் நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். இது தவறாகும்.

ஏனென்றால், எனது பகுதியில் தமிழ் மக்களும் வாழ்கின்றனர். அங்கு சிங்களவர்களின் காணிகளைப் பிடித்துக்கொண்டு தமிழர்களும், தமிழர்களது காணிகளைச் [illegible] நுக்கொண்டு சிங்களவர்களும்


பக் 25

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உதயன்

தொடர்புகளுக்கு
ஆசிரியர் பீடம்: 021-2229933
தொலைநகல்: 021-2229941
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021 5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




அனைத்து மாவட்டங்களிலும் இடியுடன் கூடிய காலநிலை காணப்படலாம்.

# மனோ கணேசனின் ஆதரவை நாடுகிறது ஐக்கிய தேசியக் கட்சி

## கொழும்பு மாநகர முதல்வர் கடிதம்

கொழும்பு, நவ.2

மக்களால் தெரிவுசெய்யப்பட்ட கொழும்பு மாநகரசபை நிர்வாகத்தை குழப்பத் தோற்கடிப்பதற்காக அரச அதிகாரங்களையும் முறையற்ற செயற்பாடுகளையும் பிரயோகித்து பல்வேறு சதித் தந்திரோபாயங்களில் அரசு ஈடுபட்டு வருகின்றது.

இந்த இக்கட்டான காலகட்டத்தில், மக்களின் தீர்ப்பைக் காப்பாற்றி அவர்கள் அளித்த வெற்றியை உறுதிப்படுத்தி இந்த மாநகரசபை நிர்வாகத்தின் மூலம் சகல மக்களுக்கும் சீரான, நீதியான பரிபாலனத்தை முன்னெடுப்பதற்கு உங்களினதும் உங்கள் கட்சி உறுப்பினர்களினதும் பூரண ஒத்துழைப்பு எனக்கு மிகவும் அத்தியாவசியமானது என கொழும்பு மாநகர மேயர் ஏ.ஜே.எம்.முஸம்மில், ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவரும் கொழும்பு மாநகரசபை உறுப்பினருமான மனோ கணேசனுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு அவரால் அனுப்பவைக்கப்பட்டுள்ள கடிதத்தின் முழு விவரம் பின்வருமாறு...,

இந்தத் தேர்தலில் தலைநகர மக்கள் இரண்டு முக்கிய விடயங்களைத் தமது தீர்ப்பாக வெளிப்படுத்தியிருக்கின்றார்கள் என்பதை நீங்களும் ஒப்புக்கொள்வீர்கள் என நம்புகின்றேன்.

கொழும்பு மாநகரில் வாழும் பெரும்பான்மை இனத்தவர்கள் மட்டுமல்லாமல் தமிழர், முஸ்லிம்கள் ஆகிய சிறுபான்மை இனத்தவர்களும் இணைந்து இந்த நம்பிக்கையை ஐக்கிய தேசிய கட்சி மீது வைத்து இந்தத் தீர்ப்பை வழங்கியுள்ளனர்.

அதேசமயம், தலைநகரத் தமிழர்களில் மிகக் கணிசமானோர் உங்கள் தலைமைத்துவத்தின் கீழான ஜனநாயக மக்கள் முன்னணி மீது நம்பிக்கை வைத்து, தமது பரதிநிதித்துவத்தில் பெரும்பங்கை உங்களுக்கு வழங்கி, உங்கள் கரத்தைப் பலப்படுத்தியிருக்கின்றார்கள் என்பதும் தெளிவு.

இந்தச் சூழ்நிலையில் தமது தோல்வியை சகித்துக்கொள்ள முடியாத ஆளும் தரப்பினர், மக்களால் தெரிவுசெய்யப்பட்ட இந்த மாநகரசபை நிர்வாகத்தை குழப்பித் தோற்கடிப்பதற்காக அரச அதிகாரங்களையும் முறையற்ற செயற்பாடுகளையும் பிரயோகித்து பல்வேறு சதித் தந்திரோபாயங்களில் ஈடுபட்டு வருகின்றனர் என்பதை நீங்களும் அறிந்திருப்பீர்கள்.

இந்த நேரத்தில், இந்த இக்கட்டானகாலகட்டத்தில், மக்களின் தீர்ப்பைக் காப்பாற்றி அவர்கள் அளித்த வெற்றியை உறுதிப்படுத்தி இந்த மாநகரசபை நிர்வாகத்தின் மூலம் சகல மக்களுக்கும் சீரான, நீதியான பரிபாலனத்தை முன்னெடுப்பதற்கு உங்களினதும் உங்கள் கட்சி உறுப்பினர்களினதும் பூரண ஒத்துழைப்பு எனக்கு மிகவும் அத்தியாவசியமானது என நம்புகின்றேன் - என்றுள்ளது. (த-10)

# நவம்பர் 15 இல் மரம் நடுகை தேசிய ரீதியில் ஆரம்பமாகிறது

தென்மராட்சி, நவ.4

தேசிய ரீதியிலான மரம் நடுகைத் திட்டம் எதிர்வரும் 15 ஆம் திகதி காலை 9.01 மணிக்கு நாடளாவிய ரீதியில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் இந்தத் திட்டத்துக்கான ஐந்து வகையான மரக்கன்றுகள் நல்லூரில் உள்ள பிராந்திய மரக் கூட்டுத்தாபனத்தின் மரக்கன்றுகள் விற்பனைப் பிரிவில் விநியோகிக்கப்படவுள்ளது.

பிரதேச செயலர் பிரிவுகள் ரீதியாகத் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகள் மூலம் இந்த மரக் கன்றுகள் நாட்டப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம- 207)

# இளவயதினருக்கான ஆங்கில புலமைப் பரிசில் திட்டம்

யாழ்ப்பாணம், நவ.4

'கேற்வே' நிறுவனத்தினால் நடத்தப்படவுள்ள இளவயதினருக்கான 'ஜோன் கீல்ஸ்' ஆங்கில புலமைப் பரிசில் திட்டத்துக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பாடசாலையில் கல்வி பயிலும் தரம் 7 - 9 வரையான மாணவர்கள் இந்தக் கற்கை நெறிக்காக விண்ணப்பிக்க முடியும். சுமார் மூன்று கால எல்லையைக் கொண்ட இந்த இடைநிலை ஆங்கிலக் கல்வி முற்றிலும் இலவசமாக நடத்தப்படவுள்ளது.

ஆர்வமுடைய மாணவர்கள் இன்றும், நாளையும் 347 கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள 'கேற்வே' பயிற்சி நிலையத்துடன் தொடர்பு கொள்ளுமாறு இணைப்பாளர் அறிவித்துள்ளார். (த)

# குடாநாட்டில் பொலிஸ் நிலையங்களுக்கு அடுத்த வருடம் மோட்டார் சைக்கிள்கள்

## சேவையை விஸ்தரிக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், நவ.4

குடாநாட்டில் உள்ள 23 பொலிஸ் நிலையங்களில் போக்குவரத்துக்கான வசதிகள் குறைவாக உள்ளதால் அடுத்த ஆண்டில் ஒவ்வொரு பொலிஸ் நிலையங்களுக்கும் ஒவ்வொரு மோட்டார்சைக்கிள்களை வழங்க ஏற்பாடு செய்வது என முடிவு செய்யப்பட்டுள்ளது.

நேற்று நடைபெற்ற யாழ். பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தின் போது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இதனைக் கூறினார்.

பொலிஸார் உடன் சென்று முறைப்பாடுகளை விசாரிக்க தங்களிடம் வாகனவசதிகள் இல்லை எனவும் குடாநாட்டில் உள்ள பொலிஸ் நிலையங்களுக்கு மோட்டார் சைக்கிள் வழங்க வேண்டும் எனவும் கேட்டுள்ளனர். இந்த ஆண்டில் அதை நிறைவேற்றக்கூடியதாக இல்லை எனினும் அடுத்த ஆண்டில் அவர்களின் கோரிக்கையை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின், யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா யாழ்.பிரதேசசெயலாளர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரன், மாநகர சபை ஆணையாளர் மு.செ.சரவணபவ, மாநகரசபை உறுப்பினர்கள் உட்பட திணைக்களத் தலைவர்கள் உத்தியோகத்தர்கள் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். (ம-7)

# மாநாட்டு மண்டபம் இருந்தும் வேறு இடத்தில் செயலமர்வுகள்

தென்மராட்சி, நவ.4

தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகத்துக்கு நிர்மாணிக்கப்பட்ட புதிய கட்டடத்தில் மாநாட்டு மண்டபம் அமைக்கப்பட்ட போதிலும் இங்கு நடைபெறவிருந்த செயலமர்வுகள் வேறு இடங்களுக்கு மாற்ற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

மழை பெய்யும் வேளையில் இந்த மண்டபத்தின் மேல் மாடிக் கட்டடத்தில் இருந்து மழை நீர் ஒழுகி மண்டபம் வெள்ளக்காடாக காணப்படுவதால் செயலமர்வுகள் வேறு இடங்களுக்கு மாற்றப்பட வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இரு மாடி கட்டடமாக அமைக்கத் திட்டமிடப்பட்டு தரைமாடிக் கட்டடம் நிர்மாணிக்கப்பட்டு மூன்று மாதங்களுக்கு முன்னரே இந்த அலுவலகம் இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது. (த-207)

# பரிசளிப்பு

மானிப்பாய், நவ.4

மானிப்பாய் இந்துக் கல்லூ முன்னாள் தமிழ் ஆசிரியை அமரர் திருமதி கிருபாநிதிபவசிங்கம் ஞாபகார்த்த தமிழ்ப் பேச்சுப் போட்டி மற்றும் பரிசளிப்பு விழா இன்று காலை 9.30 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வு மானிப்பாய் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத் தலைவர் நா.விவேகானந்தராஜா தலைமையில் இடம்பெறவுள்ளது. (த-323)

# நிகழ்வுகள்

### சிறுவர் தின விழா

தென்மராட்சிப் பிரதேச செயலகப் பிரிவின் ஏற்பாட்டில் சர்வதேச சிறுவர் தினவிழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தென்மராட்சிப் பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக சாவகச்சேரி மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா கலந்துகொள்வார். (ம-207)

### தமிழர் ஆசிரியர் சங்க மாநாடு

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் 37 ஆவது தேசிய மாநாடும் பிரதிநிதிகள் சபைக் கூட்டமும் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சங்கத் தலைவர் வி.ரி.சகாதேவராஜா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கல்வி அமைச்சின் செயலாளர் எச்.கே.குணசேகர, அமைச்சின் மேலதிக செயலாளர் கே.மொகமட்தம்பி, ILO இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி திருமதி பெற்றீனா மேஜர் ஆகியோர் கலந்து கொள்வர். (ம-313)

### செயலமர்வு

சிந்தனைக்கூடம்-யாழ்ப்பாணம் எனும் அபிவிருத்திக்கான நிறுவனமும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையமும், நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலுக்கான இயக்கமும் இணைந்து உள்ளூராட்சி மன்றங்களின் உறுப் பினர்களுக்கு உள்ளூராட்சி முறைமை பற்றிய அறிவூட்டல் செயலமர்வை இன்று வெள்ளிக்கிழமையும் நாளை சனிக்கிழமையும் தியாகிகள் அறக்கொடை நிலையத்தில் நடத்தவுள்ளன. இந்தச் செயலமர்வில் நகரசபை, பிரதேச சபை ஆகியவற்றின் தலைவர்கள், துணைத்தலைவர்கள், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கலந்துகொள்வர். (ம-313)

### ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்

வடமாரட்சி கிழக்கு பிரதேச செயலகத்தின் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு மருதங்கேணி உதவி அரச அதிபர் பணிமனை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ம-319)

* * *

பருத்தித்துறை, வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகத்தின் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ம-236)

* * *

சாவகச்சேரி நகரசபையின் தேசிய வாசிப்பு மாத நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை சாவகச்சேரி சிவன்கோயில் வீதியில் உள்ள தென்மராட்சி கலை மன்ற கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நகரசபை தவிசாளர் இ.தேவசகாயம்பிள்ளை தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் உதவிச் செயலாளர் திருமதி நா.இன் பராஜ் முதன்மை விருந்தினராகக் கலந்துகொள்வார்.

தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றிபெற்றோருக்கான பரிசில் வழங்கலும் மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறும். (ம-207)

* * *

பருத்தித்துறை பிரதேச செயலக பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை பி.ப. 2 மணிக்கு இடம்பெறும் என்று பிரதேச செயலர் ஆர்.வரதீஸ்வரன் அறிவித்துள்ளார். நாடாளுமன்ற உறுப்பினர் சி.அலன்ரின் தலைமையில் கூட்டம் இடம்பெறும். இதில் 23 துறைகள் தொடர்பாக ஆராயப்படவுள்ளது. (ம-302)

### விவசாய, கடற்றொழில் கூட்டம்

விவசாயக் குழுக் கூட்டம் மற்றும் கடற்றொழில் குழுக்கூட்டம் ஆகியன இன்று வெள்ளிக்கிழமை யாழ்.மாவட்ட செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

முற்பகல் 10 மணிக்கு விவசாயக் குழுக்கூட்டமும் 11 மணிக்கு கடற்றொழில் குழுக்கூட்டமும் இடம்பெறவுள்ளன. யாழ்.மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்ட சுகுமார் தலைமையில் இந்தக் கூட்டங்கள் இடம்பெறவுள்ளன. (ம-14)

### நாட் பாடசாலை ஆரம்பம்

இலங்கைத் திறந்த பல்கலைக்கழக யாழ்ப்பாணப்பிராந்திய நிலையத்தில் பட்டமேற்கல்வி டிப்ளோமா கற்கைநெறி ஆசிரிய மாணவர்களுக்கான மீட்டல் நாட்பாடசாலைகள் நாளை சனிக்கிழமை, நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமைகளில் இடம்பெறவுள்ளது. மேற்படி ஆசிரிய மாணவர்கள் இதில் தவறாது கலந்துகொள்ளுமாறும், நாட்பாடசாலைகளுக்கான நேரசூசியை பிராந்திய நிலையத்தின் அறிவித்தல் பலகையில் பார்வையிடலாம் எனவும் இலங்கை திறந்த பல்கலைக்கழகயாழ்ப்பாண பிராந்திய நிலைய இணைப்பாளர் அறிவித்துள்ளார். (த-323)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தில் குடும்பப் பதிவு மீண்டும் பொலிஸாரால் முன்னெடுப்பு

## பொதுமக்கள் தரப்பில் விசனம்

யாழ்ப்பாணம், நவ.4

குடாநாட்டில் மீண்டும் குடும்பங்களைப் பதிவு செய்யும் நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

பதிவு நடவடிக்கைகள் இப்போது கோப்பாய், தெல்லிப்பழை ஆகிய பொலிஸ் பிரிவுகளில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தப் பதிவுகளில் மக்களின் வீடுகளுக்குச் செல்லும் பொலிஸார் படிவங்களைக் கொடுத்துப் பதிவுகளை மேற்கொண்டு வருவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

பொலிஸாரின் இந்தச் செயற்பாடு மக்கள் மத்தியில் பல்வேறு சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளதாகவும் அறிய முடிகின்றது.

கடந்த காலங்களில் பதிவு நடவடிக்கைகள் கிராம சேவகர் ஊடாக மேற்கொள்ளப்பட்டதாகவும் பதிவு குறித்து முற்கூட்டியே அறிவிக்கப்பட்டதாகவும் மக்கள் கூறுகின்றனர்.

ஆனால் இப்போது பொலிஸாரே நேரடியாக வீடுகளுக்குச் வந்து பதிவு நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். இது குறித்து கிராம சேவையாளரிடம் கேட்டால் தமக்கு எதுவும் தெரியாது என்கின்றனர் எனவும் மக்கள் தரப்பில் விசனம் வெளியிடப்பட்டுள்ளது.

பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டுவிட்டது. அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டுவிட்டது என அரசு சர்வதேச ரீதியில் பிரசாரங்களை முன்னெடுத்து வரும் நிலையில் பொலிஸார் ஏன் இந்தக் குடும்பப் பதிவு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

இதுகுறித்து உரிய தரப்பினர் விளக்கமளிக்க வேண்டும் எனவும் பொதுமக்கள் கேட்டுள்ளனர். (த-10-68)

# அதிகாலை கடை உடைத்த திருடர் பொலிஸாரைக் கண்டதும் தப்பினர்

தென்மராட்சி, நவ.4

சாவகச்சேரி நகரப் பகுதியில் உள்ள சைக்கிள் உதிரிப்பாக விற்பனை நிலையத்தில் மேற்கொள்ளப்படவிருந்த திருட்டு, நிலையத்துக்கு முன்பாக நிர்மாணிக்கப்பட்டுவரும் நீதிமன்ற வளாகத்தில் கடமையில் இருந்த காவலாளியின் முயற்சியானால் முறியடிக்கப்பட்டது.

நேற்று அதிகாலை 2 மணியளவில் மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் இரும்புக் கம்பிகளால் நிலையக் கதவின் பூட்டினை அடித்து உடைத்துள்ளனர். சத்தம் கேட்ட காவலாளி இரவு ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட பொலிஸாருக்குத் தொலைபேசியில் தகவல் கொடுத்தார்.

நகர்ப்பகுதியில் நின்ற பொலிஸார் சம்பவ இடத்துக்கு வருவதை அவதானித்த திருடர்கள் திருட்டு முயற்சியைக் கை விட்டு மோட்டார் சைக்கிள்களில் ஏறித் தப்பிச் சென்றுள்ளனர்.

சாவகச்சேரி பொலிஸாரின் ஏற்பாட்டில் கைரேகை நிபுணர்கள் பரிசோதனைகளை மேற்கொண்டனர். (த-207)

# மந்துவில் வாசியைக் கேபிளால் தாக்கிய நபருக்கு மூன்று வருடங்கள் சிறை

தென்மராட்சி, நவ.4

கடந்த 2007 ஆம் ஆண்டு மந்துவில் பகுதியில் இடம்பெற்ற மோதல் சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி நீதிமன்றில் வழக்கின் தீர்ப்பு நேற்று வியாழக்கிழமை வழங்கப்பட்டது.

வழக்கின் முதலாவது எதிரி மீது சாட்டப்பட்ட மூன்று குற்றச்சாட்டுக்களுக்கும் தலா ஒரு வருடம் வீதம் மூன்று ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டதுடன் இரண்டாம், மூன்றாம், நான்காம் எதிரிகள் சுற்றவாளிகளாக காணப்பட்டதால் மூவரும் விடுதலை செய்யப்பட்டனர்.

கொடிகாமம் பொலிஸாரால் இந்த நால்வரும் மந்துவில் பகுதியைச் சேர்ந்த ஒருவரை கைகளாலும் கால்களாலும், கேபிளாலும், பொல்லாலும் தாக்கியதுடன் அவர் அணிந்திருந்த தங்கச் சங்கிலியை அறுத்து சேதப்படுத்தியதாக குற்றம் சாட்டப்பட்டு நீதிமன்றில் வழக்கு நடைபெற்று வந்தது.

இந்த வழக்கு நேற்று வியாழக்கிழமை விசாரணைக்கு எடுக்கபட்டு நீதிவான் மா.கணேசாராஜாவினால் தீர்ப்பு வழங்கப்பட்டது.

குறித்த வழக்கின் தன்மையின் அடிப்படையிலும் அளிக்கப்பட்ட சாட்சியங்களின் அடிப்படையிலும் நான்கு எதிரிகளில் முதலாம் எதிரிக்கு எதிராகச் சாட்டப்பட்ட மூன்று குற்றச்சாட்டுகளுக்கும் தனித்தனியாக ஒரு வருடக் கடூழியச் சிறைத் தண்டனை விதித்து, மூன்று குற்றங்களுக்குமான தண்டனையை ஏக காலத்தில் அனுபவிக்க வேண்டும் எனவும் மற்றைய 3 எதிரிகளையும் சுற்றவாளிகளாக கண்டு மன்றினால் அவர்களை வழக்கிலிருந்து விடுவிப்பதாகவும் நீதிவான் தீர்ப்பு வழங்கினார். (த-207)

## சுவிஸ் விபத்து தமிழ்ச் சிறுவன் சாவு

தென்மராட்சி, நவ.4

சுவிஸ் நாட்டில் இடம்பெற்ற வீதி விபத்தில் மீசாலையைச் சேர்ந்த எட்டுவயதுச் சிறுவன் பலியானார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

பனிமூட்டம் காணப்பட்ட வேளையில் வீதியில் பாதசாரி கடவையூடாக நடந்து சென்ற சிறுவனை வேகமாக வந்த வாகனம் மோதித்தள்ளியதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த விபத்துச் சம்பவத்தில் மீசாலை மேற்கைச் சேர்ந்த திலீபன் வுகரன் (வயது-8) என்னும் சிறுவனே பலியானதாக உறவினர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (த-207)

# மட்டுவிலில் வீடு புகுந்து தாக்கியமை எதிரிக்கு ஒரு வருட கடூழிய சிறை

மட்டுவில் பகுதியில் கடந்த வருடம் அத்துமீறி வீட்டினுள் புகுந்து அங்கிருந்தவர்களை திருகுபலகையாலும், பொல்லாலும் தாக்கி காயப்படுத்தியதாகத் தொடரப்பட்ட வழக்கின் தீர்ப்பு ஒரு வருடத்தின் பின் வழங்கப்பட்டுள்ளது.

நேற்று நீதிவான் மா.கணேசராஜா முன்னிலையில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டது. வழக்கை விசாரித்த நீதிவான் குற்ற ஒப்புதல்களின் அடிப்படையில் குற்றவாளிகளுக்கான தீர்ப்பை அறிவித்தார்.

இந்த வழக்கின் முதலாம் எதிரி நீண்ட காலமாகத் தலைமறைவாக இருப்பதையும், அவருக்குப் பகிரங்கப் பிடியாணை வழங்கப்பட்டிருப்பதையும் கவனத்தில் கொண்டு முதலாம் எதிரிக்கு எதிராகச் சாட்டப்பட்ட மூன்று குற்றச்சாட்டுகளுக்கும் ஐந்து வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட ஒரு வருட கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. மூன்று குற்றச்சாட்டுகளுக்குமாக தண்டனையை முதலாம் எதிரி ஏககாலத்தில் அனுபவிக்க வேண்டும் என நீதிவான் உத்தரவிட்டார்.

இரண்டாம், மூன்றாம், நான்காம் எதிரிகள் சுற்றவாளிகளாகக் காணப்பட்டு மூவரையும் விடுதலை செய்தார். இந்த எதிரிகள் சார்பில் சட்டத்தரணி சத்தியேந்திரன் மாதவராஜா ஆஜரானார். (த-207)

## கணித, விஞ்ஞான மாணவரும் ஆர்வமில்லை

# கலை, வர்த்தகப் பிரிவுகளில் பயின்ற மாணவரை தாதியர் சேவையில் உள்வாங்குவதற்கும் எதிர்ப்பு

## பயிற்சிக் கல்லூரியில் புதிய பிரிவுகளும் ஆரம்பமாகவில்லை

யாழ்ப்பாணம், நவ.4

வடபகுதியில் உள்ள கணித, விஞ்ஞானப் பிரிவு மாணவர்கள் தாதிய உத்தியோகத்தர் பயிற்சிக்கு விண்ணப்பிப்பதற்கு ஆர்வம் காட்டவில்லை.

இதனால் ஏற்பட்ட தாதியர் வெற்றிடத்தை நிரப்பக் கலை, வர்த்தகப் பிரிவு மாணவர்களைத் தெரிவு செய்யத் தீர்மானிக்கப்பட்டு அதற்கான நேர்முகத் தேர்வு அண்மையில் நடத்தப்பட்டது.

எனினும் அதற்கு எதிர்ப்புக் கிளம்பியுள்ளதால் அந்த முயற்சியும் இடைநடுவில் கைவிடப்பட்டுள்ளது.

கலை, வர்த்தகப் பிரிவு மாணவர்களைத் தாதியர் சேவையினுள் உள்வாங்கக் கூடாது என்று கூறிச் சில மாகாணங்களில் தாதியர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தியதனால், தாதிய மாணவர் தெரிவு இடைநடுவில் கைவிடப்பட்டுள்ளது. அத்துடன் புதிய அணியினருக்கான தாதிய பயிற்சி வகுப்புகளும் இன்றுவரை ஆரம்பிக்கப்படவில்லை என யாழ். தாதியக் கல்லூரி அதிபர் செல்வி ரயுலாதேவி வல்லிபுரநாதன் தெரிவித்தார்.

இது இவ்வாறிருக்க, தற்போது ஏற்பட்டுள்ள தாதியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய, தாதிய உத்தியோகத்தர்களின் சேவைக்காலத்தை 63 வயது வரை அதிகரிக் கும்படியும், தற்போது ஓய்வுபெற்றுள்ள சேவையாற்றக் கூடிய தாதிய உத்தியோகத்தர்களை சேவையில் மீள இணைத்துக் கொள்ளும் முறைமையொன்றை நடைமுறைக்குக் கொண்டுவருமாறும் அரச சேவை ஐக்கிய தாதிய உத்தியோ கத்தர்கள் சங்கம் ஆலோசனை வழங்கி யுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:

யாழ்.தாதியர் பயிற்சிக் கல்லூரிக்கு கடந்த காலங்களில் கணித, விஞ்ஞானப் பிரிவு மாணவர்கள் அனேகமானோர் விண்ணப்பித்தனர். அவர்களில் தெரிவு செய்யப்படுபவர்கள் தாதியர் பயிற்சி பெற்று வெளியேறுவர்.

மூன்று வருட கற்கையைக் கொண்ட தாதியர் பயிற்சிக்கு சுமார் 200 பேர்வரை தெரிவுசெய்யப்படுவர். தற்போது வெளியேறிய அணியில் நூற்றுக்கும் மேற்பட்ட கலை, வர்த்தகப் பிரிவு மாணவர்கள் உள்ளனர்.

இந்தமுறை தாதிய உத்தியோகத்தர் பயிற்சிக்கு விண்ணப்பம் கோரியபோது கணித, விஞ்ஞான பிரிவு மாணவர்களிடமிருந்து 25 இக்கும் குறைவான விண்ணப்பங்களே கிடைத்தன. ஏனைய மாகாணங்களில் இந்த அளவுக்குக் எண்ணிக்கை குறைவாக இருப்பதில்லை. யாழ்ப்பாணத்தில் இந்தப் பிரச்சினை நிலவியதனால் கலை, வர்த்தகப் பிரிவு மாணவர்களும் இதில் உள்வாங்கப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இது பற்றிச் சுகாதார அமைச்சருடன் கலந்துரையாடிய பின்னர் இந்தப் பிரிவு மாணவர்களைத் தாதியர் பயிற்சியில் இணைத்துக் கொள்ள அங்கீகாரம் வழங்கப்பட்டது.

அதன்பிரகாரம் கலை, வர்த்தகப் பிரிவு மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

விண்ணப்பித்தவர்களுக்கு நேர்முகத் தேர்வு நடத்தப்பட்டதில் சுமார் 500க்கும் மேற்பட்டோர் தாதியர் பயிற்சிக்குத் தகுதி பெற்றனர். அவர்களில் தெரிவு செய்யப்படுபவர்களுக்கு பயிற்சி வழங்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. இந்தநிலையிலேயே பிற மாகாண தாதியர்களின் ஆர்ப்பாட்டம் காரணமாக இந்தப் பணிகள் கைவிடப்பட்டன என்றார் தாதியர் கல்லூரி அதிபர்.

கணித, விஞ்ஞானப் பிரிவில் இருந்து தாதியப் பயிற்சிக்கு மாணவர்கள் இந்த முறை ஆர்வம் காட்டாததற்கான காரணம் தொடர்பாக விஞ்ஞானப் பிரிவு மாணவி ஒருவரிடம் கேட்டபோது, தாதிய உத்தியோகத்தர் சேவையானது ஏனைய அலுவலர்களுடன், சில தொழில்களுடன் ஒப்பிடும்போது கடினமானதொன்றாகக் காணப்படுகின்றது. வேலைச் சுமை அதிகரித்துக் காணப்படுகின்றது. தவிர பகலில் மட்டுமன்றி இரவிலும் பணிபுரிய வேண்டியுள்ளது. 3 வருட பயிற்சிக் காலத்தில் இரண்டு தடவை மாத்திரமே வீட்டுக்குச் சென்றவரக் கூடியதாக உள்ளது என்றார்.

இதுபற்றி தாதிய உத்தியோகத்திரடம் கேட்டபோது, வைத்தியசாலை சூழமைவுகள், நிலைமைகள், இரவில் பணிபுரிவது என்பவற்றைச் சிலர் விரும்புவதில்லை. அந்த நிலைமைகளை ஏற்றுக்கொள்கிறார்கள் இல்லை. வைத்தியசாலையில் சுகாதாரத்தைப் பேணமுடியாது போகலாம் என நினைக்கிறார்கள் என்றார்.

இதுதொடர்பாக வைத்தியசாலையில் பணிபுரியும் ஆண்தாதி ஒருவரிடம் கேட்டபோது, தாதிய சேவைக்கு 95 வீதத்துக்கு மேலாக பெண்களையே தெரிவு செய்கிறார்கள். ஆண்கள் 5 வீதத்துக்குக் குறைவான எண்ணிக்கையிலேயே தெரிவு செய்கிறார்கள். தாதியர் பற்றாக்குறைக்கும் தாதியர்களின் அதிக வேலைச் சுமைக்கும் இதுவும் ஒரு காரணம் என்றார் அவர்.

கணித, விஞ்ஞானப் பிரிவு மாணவர்கள் தாதியப் பயிற்சிக்கு விண்ணப்பிப்பது குறைவடைந்ததற்கான காரணம் தொடர்பாக யாழ்.தாதியக் கல்லூரி அதிபர் செல்வி வ.ரயுலாதேவியிடம் கேட்டபோது,

எமது சமூகம் பெண்கள் தாதிய சேவையில் ஈடுபடுவதனை ஏற்றுக்கொள்ளவில்லை. ஒரு சிலரின் தப்பபிப்பிராயம் இது. கலை, வர்த்தகப் பிரிவினர் தாதிய சேவையினுள் உள்வாங்கப்பட்டால் கணித, விஞ்ஞானப் பிரிவில் இருந்து தாதிய உத்தியோகத்தர் சேவைக்கு வந்தவர்களுக்கு எதிர்காலத்தில் மதிப்பிருக்காது எனப் பிறமாகாணத் தாதியர்கள் எதிர்பார்க்கின்றார்கள் என்றார். (த-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
## VACANCIES

University of Jaffna will entertain applications from suitably qualified persons for the under mentioned post on contract basis upto 18.11.2011.

**FACULTY OF MANAGEMENT STUDIES AND COMMERCE**

***Assistant Lecturer in Accounting*** (on contract)

| POST | SALARY SCALE |
|---|---|
| Assistant Lecturer | Rs. 25,145/- (fixed) per month |

In addition to the above salary, the allowances approved by the University Grants Commission will also be paid.

Application for the above post shall be sent to the '**Senior Assistant Registrar/Academic Establishments, University of Jaffna, Sri Lanka**'.

Application forms may be obtained from the office of the Senior Assistant Registrar/Academic Establishments, University of Jaffna, Sri Lanka, either in person or by post, on a payment of Rs. 100/- per application form at the Shroff's counter of the University of Jaffna or at People's Bank, University Branch.

Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/Postal Order drawn in favour of the **Bursar, University of Jaffna** together with a self-addressed stamped envelope 23x10 c.m. in size.

Applicants from the University System/Government Departments/Corporations and Statutory Board should channel their applications through the Head of respective Institutions. Illegible, incomplete and late applications will be rejected without intimation. Only short listed applicants will be called for an interview.

**Registrar,**
**University of Jaffna,**
**Sri Lank.**
**03.11.2011**

## அழைப்பு

**பால் நிலை கற்கைநெறி சான்றிதழ் வழங்கும் நிகழ்வு 2011**

பிரதம அதிதி
திருமதி இமெல்டா சுகுமார் அவர்கள்
அரச அதிபர் - மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்

இடம்:
கைலாசபதி கலையரங்கு, யாழ். பல்கலைக்கழகம்

காலம்:
நவம்பர் 5 ஆம் திகதி சனிக்கிழமை

நேரம்:
காலை 9.00 மணி

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

**விழுது ஆற்றல் மேம்பாட்டு மையம்**
யாழ். மாவட்டக்கிளை.
இல.23, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. தொ.பே. 021 222 9866

**நிகழ்ச்சி நிரல்**

- மங்கல விளக்கேற்றல்
- 'யுகங்களின் மௌனக் கலைப்பு' பயிலுநர்களின் குழுப்பாடல் இசைப்பு
- வரவேற்புரை: செல்வி யோ.பிரபாஜினி (பயிலுநர்)
- தலைமையுரை: திரு.கு.கௌதமன் (பயிலுநர்)
- சிறப்புரை: திருமதி சாந்தி சச்சிதானந்தம் (பிரதம நிறைவேற்று அலுவலர், விழுது)
- சான்றிதழ் வழங்குதல்
- விழுது - பயிலுநர்களின் மலர் வெளியீடு
- வெளியீட்டுரை
- சிறு வயதுத் திருமணங்களின் சமூகத் தாக்கம் - ஆய்வு நூல் வெளியீடு
- ஆய்வு அறிமுக உரை: திரு.எஸ்.ஹரிகரதாமோதரன் (ஆய்வு உத்தியோகத்தர், தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம்)
- பிரதம விருந்தினர் உரை: திருமதி இமெல்டா சுகுமார் (அரச அதிபர், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்)
- கலை நிகழ்ச்சி: நாடக அரங்காற்றுகை
- நன்றியுரை: திரு.ஆ.சான் பெலற் (பயிலுநர்)

*உலகினை மாற்றுவதற்கு சிந்திக்கின்றதொரு சிறியகுழு மனிதர்களே போதும் உண்மையில் இதுவரையில் அப்படித்தான் நடந்திருக்கின்றது.*

## ரஞ்சன் மாத்தாய்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உத்தரவு பிறப்பித்திருந்தது.

உலங்கு வானூர்திகள் போன்றவற்றை பயன்படுத்தி எல்லைக் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது.

எனினும், இந்த உத்தரவினை மத்திய அரசாங்கத்தின் அதிகாரிகள் உரிய முறையில நடைமுறைப் படுத்தத் தவறியுள்ளதாகக் குற்றம் சுமத்தி தமிழக சட்டத்தரணி ஸ்டாலின் என்பவர் மேல் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

மத்திய அமைச்சின் செயலாளர் அஜித் குமார் சேத், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன், பாதுகாப்புச் செயலாளர் சசிகாந்த் சர்மா, வெளிவிவகார செயலாளர் ரஞ்சன் மாத்தாய் உள்ளிட்ட சில அதிகாரிகள் வேண்டுமென்றே நீதிமன்றத்தின் உத்தரவினை உதாசீனம் செய்துள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

## புலிகளின்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிறிகொத்தாவில் நேற்று நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்ட கோரிக்கையை விடுத்தார்.

கே.பி. என்றழைக்கப்படும் குமரன் பத்மநாதனுக்கு 60 கோடி அமெரிக்க டொலர் சொத்து உள்ளது என்றும், விடுதலைப் புலிகளுக்கு சொந்தமாக பெற்றோல் நிலையங்களும் கப்பல்களும் உள்ளன என்றும் அவர் தெரிவித்தார். (த)

## யாழ்ப்பாணத்தில் சிங்கள மொழிப்போதனையில் ஒரு புதிய புரட்சி

**மாதாந்தக் கட்டணம் 1850/-**

லங்காதீப TNL வானொலி சிங்கள ஊடகவியலாளர் திருமதி K.K.றனி அவர்களால் நவீன முறையில் (புறஜெக்ரர் மூலம் கற்பிக்கப்படும்).
பேச்சு, எழுத்து, பாடல் சிங்களக் கற்கைநெறி.
சனி மு.ப. 11 மணி, பி.ப. 3 மணி

**திசைகாட்டி**
முன்மாதிரியான ஆலோசனை நிறுவனம்
37, சிவகுருநாதர் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
**T.P.: 0212219016, 0214914527**

## கடை வாடகைக்கு

ஆனைக்கோட்டை மூத்தநயினார் ஆலய வடக்கு வீதியுடன் அமைந்துள்ள மேல்மாடிக் கடைக் கட்டடம் வாடகைக்கு விடப்படும்.

தொடர்பு: சிறிமுருகன்
நல்லெண்ணெய் விற்பனை நிலையம்,
ஆனைக்கோட்டை,
**T.P.: 0775081890, 0217210105**

## நேர்முகப்பரீட்சை

21.10.2011 ஆம் திகதி வியாபாரத்துக்கு ஆள் தேவை என்ற விளம்பரத்துக்கு விண்ணப்பித்தவர்களுக்கு 05.11.2011 ஆம் திகதி மு.ப. 10 மணிக்கு கொற்றாவத்தை, அல்வாய் மேற்கு என்னும் இடத்தில் நேர்முகப்பரீட்சை இடம்பெறும், சமுகம் தரவும்.

## தவறிவிட்டது

மூத்தவிநாயகர் கோயிலடி, ஆனைக்கோட்டையைச் சேர்ந்த சிவலிங்கம் முருகவேல் என்பவரது தேசிய அடையாள அட்டை (690410273V) கடந்த 31.10.2011 அன்று ஆனைக்கோட்டைக்கும் சுன்னாகத்துக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள்: **0776407934** எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

(சன்மானம் வழங்கப்படும்.)

## தவறிவிட்டது

அம்பலவன் பொக்கணை, முள்ளிவாய்க்கால், முல்லைத்தீவு என்னும் முகவரியைச் சேர்ந்த நவரத்தினம் நாகதீபன் என்பவரது தேசிய அ.அட்டை (862941268V), சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் முக்கிய ஆவணங்கள் அடங்கிய பேர்ஸ் 02.11.2011 அன்று யாழ்ப்பாணத்துக்கும் ஆனைக்கோட்டைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் சரிகணன் பிறின்ரஸ், 424, K.K.S. வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும்.

**T.P.: 0777275083**
சன்மானம் வழங்கப்படும்.

## ஸ்கந்தவரோதயக் கல்லூரி
சுன்னாகம்

**தரம் 6, தரம் 9 அனுமதி - 2012**

கல்லூரி அலுவலகத்தில் விண்ணப்பப்படிவம் பெற்று 12.11.2011 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும்.

❖ தமிழ்மொழி, ஆங்கில மொழி மூலம் கற்கும் வசதிகளுண்டு.

கந்தரோடை,
0212240230

அதிபர்,
ஸ்கந்தவரோதயக் கல்லூரி,
சுன்னாகம்.

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



திருமதி
**சிவசுப்பிரமணியம் சிவபாக்கியம்**

மலர்வு: 06.04.1936

உதிர்வு: 14.11.2010

ஆனதோ ஆண்டொன்று
ஆறவில்லை எம் துயரம்
மறையவில்லை உம் துயரம்
எம் தெய்வமே !
எமை விட்டுப் பிரிந்தாலும்
உயிருள்ளவரை உம் நினைவுகள்
எம் உள்ளத்தில் உறைந்திருக்கும்.

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

41 (15), பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.

சி.சிவசுப்பிரமணியம்
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### இராசா மயில்வாகனம்



கந்தரோடை மேற்கு, சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசா மயில்வாகனம் நேற்று (03.11.2011) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசா-பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களானவல்லிபுரம்-பானுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், இராசலட்சுமியின் அன்புக் கணவரும், மதனராஜா (டென்மார்க்), ரவிக்குமார் (சுவிஸ்), ஜெயராஜா (சுவிஸ்), சந்திரவதனா, ஜெயக்குமார் (டென்மார்க்), ஜெயச்சந்திரன் (U.K), ரவிபாலா (முன்பள்ளி அபிவிருத்தி உத்தியோகத்தர்-உடுவில் பிரதேச செயலகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சரோஜாதேவி (டென்மார்க்), புஸ்பநாயகி (சுவிஸ்), மகாலட்சுமி (சுவிஸ்), செல்வஸ்தான் (அதிபர்-யா/ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயம்), மேனகா (டென்மார்க்), சிந்துஜா (U.K), மோகனா (ஆசிரியை-யா/மாதகல் சென்.ஜோசப் ம.வி) ஆகியோரின் பாசமிகு மாமனும், அன்னம்மா, பூமணி, ரத்தினம், நல்லம்மா, காலஞ்சென்ற முருகையா ஆகியோரின் அன்புச் சகோதரனும், நிதுலா, நிஷானா, நிதுசன் (சுவிஸ்), ஜெனோதா, ஜெசிதா, காயத்திரி (சுவிஸ்), தக்ஷாயணி (மாணவி-யா/வே.ம.உ.பா), ரக்ஷனா (மாணவி-யா/இ.ம.க), ஜெசிக்கா, கவிசன் (டென்மார்க்), ரதுஷா (U.K) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.11.2011) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப. 1.30 மணியளவில் சங்கம் புலவு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கந்தரோடை மேற்கு,
கந்தரோடை.

தகவல்:
**குடும்பத்தினர்.**

### ஐயம்பிள்ளை கோபாலபிள்ளை



சரவணை மேற்கு, 2ஆம் வட்டாரம், ஸ்ரீ அருள் வரதகாளி அம்பாள் ஆலயத்தடியினைப் பிறப்பிடமாகவும் கொழும்பு-15, அளுத்மாவத்தை வீதி, 664/2 இலக்க வீட்டில் வசித்தவருமாகிய ஐயம்பிள்ளை கோபாலபிள்ளை நேற்று (03.11.2011) வியாழக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**ஐ.கோ.சந்திரசேகரம் (மகன்),**
**பிரதி பிரதம ஒழுக்காற்று அதிகாரி,**
**யாழ். பல்கலைக்கழகம்.**

58, சங்கிலியன் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# ஜனநாயகத்துக்கு எதிர்த்திசையிலா?

நட்டத்தில் இயங்கும் தனியார் நிறுவ்னங்களை அரசு கையகப்படுத்தும் சட்டமூலம் ஒன்று அரசாங்கத்தினால் இரகசியமாகத் தயாரிக்கப்பட்டுள்ளது. தனக்குள்ள பெரும்பான்மைப் பலத்தைப் பயன்படுத்தி, அதனை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்கும் அரசாங்கம் தயாராகி விட்டது.

எதிர்வரும் ஒன்பதாம் திகதியன்று, குறிப்பிட்ட சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க அரசு இரகசியமாக ஏற்பாடு செய்துள்ளதாக பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி குற்றஞ்சாட்டி உள்ளது.

இலாபம் ஈட்டாது நட்டத்தில் இயங்கிவரும் தனியார் நிறுவனங்களை - தனியாருக்குச் சொந்தமான நிறுவனங்களை - அவற்றின் வர்த்தக நடவடிக்கைகளை அரச உடைமையாக்குவது என்பது இயல்பான சட்டமுறைதான். ஆயினும் அதற்கான நடவடிக்கைகளை வெளிப்படைத்தன்மையுடன் பின்பற்ற வேண்டும்.

சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் வர்த்தக ரீதியாக நட்டத்தில் இயங்குகின்றன என்பது தக்கவாறு, ஆதாரங்களுடன் கண்டறியப்பட்டனவா? அவற்றின் விவரங்கள் பகிரங்கப்படுத்தப்பட்டனவா? எதுவுமே இல்லாமல், குறிப்பிட்ட வர்த்தக நிலையங்களுக்கு அவகாசம் எதுவும் வழங்கப்படாமல், அவற்றுக்கு அறிவித்தல் தானும் கொடுக்காமல் அவற்றைக் கையகப்படுத்த திடுதிடுப்பென அரசு நடவடிக்கை எடுக்க உள்ளது.

உரிய முறையில், தக்க விதிப்படி வெளிப்படைத்தன்மை பின்பற்றப்படாமல், அரசு இந்த நடவடிக்கையை மேற்கொள்வது முழுக்க முழுக்க சர்வாதிகாரத்தின் குணாம்சமாகும்.

நட்டத்தில் இயங்கும் தனியார் வர்த்தக நிறுவனங்கள் என்று அரசினால் பட்டியல் இடப்பட்டுள்ள தனியார் வர்த்தக நிலையங்கள், நட்டம் ஏற்பட்டதற்கான காரணங்களை முன்வைக்கவும், தமது ஆட்சேபனைகளைத் தெரிவிக்கவும் கால அவகாசம் வழங்கப்படவில்லை. குறிப்பிட்ட வர்த்தக நிலையங்களை அரச உடைமையாக்குவதற்கான சட்டமூலத்தை அவசர அவசரமாகவும், பொது அறிவித்தல் எதுவும் இன்றியும் நாடாளுமன்றத்தில் முன்வைக்க முனைவது, அரசு தனக்குள்ள ஆட்சிப் பலத்தை துஷ்பிரயோகம் செய்வதாகும்.

பயங்கரவாதத்தில் இருந்து நாட்டு மக்களை விடுவித்துவிட்டதாகப் பெருமை அடித்துக் கொள்ளும் அரசு, தற்போது நட்டத்தில் இயங்கும் தனியார் நிறுவனங்களை அரச உடைமையாக்குவதற்கான சட்டமூலத்தை நிறைவேற்றிக் கொள்வதன் மூலம் தனிமனித பொருளாதார சுதந்திரத்தைப் பறிக்கும் நடவடிக்கையில் இறங்கியுள்ளது என்று -

ஐ.தே.கட்சியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் பிரபல பொருளாதார நிபுணருமான கலாநிதி ஹர்ஷா டி சில்வா தெரிவித்திருக்கிறார்.

தமது வர்த்தக நிலையங்களை அரசு கையகப்படுத்துவதற்கு, சுவீகரிப்பதற்கு எதிராக, அவற்றின் உரிமையாளர்கள், நட்டஈடு கோருவதற்குத்தானும் சந்தர்ப்பம் அளிக்காமல், சட்டமூலத்தை நிறைவேற்ற அவசரம் காட்டுவது, அரசின் தான்தோன்றித்தனமான செயற்பாடுகளின் வெளிப்பாடு என்று களுத்துறை மாவட்ட ஐ.தே.கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் கருத்து வெளியிட்டிருப்பது ஏற்புடையதே.

சட்டவிதிகளுக்கமைவான செயற்பாடுகளே முன்னெடுக்கப்படுகின்றன என்று உறுதிப்படுத்திக் கொண்டால் மட்டுமே, வர்த்தக நிறுவனங்களை அரசு கையகப்படுத்துவதற்கான இழப்பீடுகளுக்குரிய நட்டஈடு குறித்துத் தீர்மானிக்க நட்டஈட்டுச் சபையொன்றை உருவாக்க முடியும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசாங்கத்தின் உத்தேச சட்டமூலம் முற்றிலும் ஜனநாயகத்துக்கு விரோதமானது. இந்தச் சட்டமூலம் நிறைவேற்றப்படும்போது, அது ஜனநாயகத்துக்கு அடிக்கப்படும் முதலாவது சாவுமணியாக அமையும். இச்சட்டமூலம் தனியார் நிறுவனங்கள் தொடர்பாக, சட்டரீதியான அணுகுமுறைகளுக்குத் தடையாக இருக்கும். அதனால் நட்டத்தில் இயங்கும் தனியார் நிறுவனத்தின் முதலீட்டாளர், உரிமையாளர் தனது சொத்து உரிமையை இழப்பார். அதனூடு தனியார் ஒருவரின் சொத்து அரசினால் பலாத்காரமாகப் பறிக்கப்படுகிறது. அது சுத்தமான அடிப்படை மனித உரிமை மீறலாகவும் அமையும்.

மொத்தத்தில், தனிநபர் ஒருவரின் வர்த்தக நடவடிக்கைகளுக்கு உரிய, பொருளாதார வளர்ச்சிக்கான செயற்பாடுகளுக்கு உரிய, சுதந்திரத்தை உத்தேச சட்டமூலம் பறிக்கும். இது முழுக்க முழுக்க ஜனநாயக விரோதச் செயற்பாடாகும். மொத்தத்தில் சர்வாதிகாரத்துக்கும் குடும்ப மற்றும் உறவினர் நலன்களுக்கு வகை செய்யும் ஆட்சிக்கும் திறவுகோலாக அமையும்.

அரசு கொண்டுவரவுள்ள சட்டமூலம் அதற்கு உள்ள வாக்குப்பலத்தால் நிறைவேற்றப்படும் என்பதில் சந்தேகமில்லை. இது நிறைவேற்றப்பட்டால் நாட்டின் பொருளாதாரத்துக்குப் பெரும் பாதிப்பு உண்டாகும். உள்நாட்டவர்கள், தனியார் புதிய முதலீடுகளை இட்டு வர்த்தக, கைத்தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடத் துணியமாட்டார்கள். அவ்வாறே வெளிநாட்டு முதலீட்டாளர்களும் இங்கு வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்குப் பின்னடிப்பர்; அச்சமுறுவர்.

நாட்டில் நவீன தொழில்நுட்பம், விஞ்ஞான வளர்ச்சித் துறைகளை உருவாக்கவும், வெளிநாட்டு முதலீட்டாளர்களைக் கவரும் வகையில் திட்டங்களை வகுத்து எதிர்காலச் சந்ததியினர் முன்னேற்றம் காணவும் விரும்புவதாக மாநாடுகளிலும் ஏனைய மேடைகளிலும் ஜனாதிபதியும் அவரது சகாக்களும் முழங்குகிறார்கள். விஞ்ஞான, தொழில்நுட்ப, கைத்தொழில், அபிவிருத்திசார் வளர்ச்சிகளை ஈட்டிப் புதுயுகம் படைக்கப் புறப்பட்டுள்ளதாக வேறு மார்தட்டுகிறார்கள்.

ஆனால் உள்நாட்டவர்களினதும், வெளிநாட்டவர்களினதும் தனியார் முதலீடுகளைக் கையகப்படுத்தும் புதிய சட்டமூலம், மேற்சொன்ன எல்லாவற்றையும் பகற்கனவாக மாற்றுவதற்கான தொடுவாய் என்பதனை அரச தரப்பினரால் ஏன் உணர்ந்துகொள்ள முடியவில்லை....?

சொல் ஒன்று செயல் வேறாக அரசின் செயற்பாடுகள் விரியுமாயின், ஜனநாயக வழிமுறை ஊடான வளர்ச்சி எட்டாக் கனியாகி, சர்வாதிகாரத்துக்கு வழிகோலும் என்பது மட்டும் நிச்சயமும் நிதர்சனமும் ஆகிவிடும். அந்தோ...! ஜனநாயகத்துக்கு எதிர்த்திசையிலா இந்த நாடு இனி?

# எரிபொருள் விலையேற்றத்தால் பாதிக்கப்படுவது விவசாயிகளே

## முல்லைத்தீவு பயிர்ச்செய்கையாளர் கவலை

முல்லைத்தீவு, நவ.4

எரிபொருள்களின் விலை ஏற்றத்தால் முற்று முழுதாகப் பாதிக்கப்படுவது விவசாயிகளே என்று முல்லைத்தீவு மாவட்ட விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இந்த எரிபொருள் விலையேற்றம் தம்மைப் பெரிதும் பாதித்துள்ளதாக மேலும் கூறியுள்ளனர்.

யுத்தத்தால் நாம் கடுமையாகப் பாதிக்கப்பட்டு நெற்செய்கை உப உணவுச் செய்கைகளை மேற்கொள்ளாததால் எமது வருமானங்களை இழந்த நிலையில் மீள்குடியமர்ந்துள்ளோம்.

தற்போது தான் மெல்ல மெல்ல எமது காணிகளைத் துப்புரவு செய்து பயிர் செய்வதற்கு முன் வந்துள்ளோம். இந்த நிலையில் திடீரென எரிபொருள்களின் விலைகளை அரசு உயர்த்தியதால் நாம் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளோம்.

போக்குவரத்து வசதிகள் சீராகவில்லை, மின்சாரம் வழங்கப்படவில்லை.

சில பிரதேசங்கள் மண்ணெண்ணையை நம்பி குப்பி விளக்குடனே காலத்தைக் கழிக்கின்றன.

டீசல் விலையேற்றத்தால் நிலப்பண்படுத் தலுக்கு அதிக பணத்தைச் செலவழித்துக் கொள்ள வேண்டியுள்ளது.

எரிபொருள் விலையேற்றம் விவசாயிகளான எமக்கு அதிர்ச்சியை அழித்துள்ளது.

நகரப்பகுதியை விட கிராமப்புறங்களில் போக்குவரத்து, மின்சாரம், மீன்பிடி, விவசாயம் என்பவற்றில் ஏற்படும் பாதிப்புகள் மக்களை அதிகம் தாக்கத்துக்கு உள்ளாக்குகின்றன. (ம-500)

# நல்வாழ்வுக் கூட்டுறவுச் சங்கம் முதல் முறையாக வடக்கில் ஆரம்பம்

தென்மராட்சி, நவ.4

கொழும்பை தலைமையகமாகக் கொண்டியங்கும் வரையறுக்கப்பட்ட நல்வாழ்வு கூட்டுறவுச் சங்கம் வட மாகாணத்தில் முதன் முறையாக சாவகச்சேரியில் தனது கிளையை ஆரம்பித்துள்ளது.

பல்வேறு வகைகளில் பாதிக்கப்பட்ட குடும்பங்கள், குடும்பத் தலைவரை இழந்த பெண்கள் உட்பட வறிய நிலையில் உள்ளவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் செயற்பாட்டை இந்தச் சங்கம் மேற்கொள்ளவுள்ளது.

சங்கத்தின் தலைவர் லலித் ஆர்.டி சில்வா தலைமையில் சாவகச்சேரி நகர சபை கேட்போர் கூடத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் தென்மராட்சிப் பிரதேசத்தில் மேற் கொள்ளப்படவுள்ள வேலைத் திட்டங்களுக்குப் பொறுப்பாக உருவாக்கப் பட்ட குழுவின் தலைவராக சாவகச்சேரி நகர சபையின் உப தலைவர் கு.சதாசிவ மூர்த்தியும் உறுப்பினர்களாக டாக்டர் எஸ்.எஸ் அருளானந்தம், சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத் தலைவர் வ.ஸ்ரீபிரகாஸ், சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தலைவர் லயன் கே.பிரதீபன், சாவகச்சேரி நகர சபை உறுப்பினர் த.சுதர்சன், சாவகச்சேரி நகர் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கச் செயலாளர் திருமதி ம.கீர்த்திநாதன், செல்வி ய.புகழேந்தி ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.

இந்த நிகழ்வுக்கு சங்கத்தின் உப தலைவர்களான க. சந்திரமோகன், ஜீ.ஆர்.பெரேரா செயலாளர் சுசந்த ரணசிங்க, ஆலோசகர்களான சுனிமல் அலஸ், சுஜீவ ரணசிங்க உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ம-207)

# ஈழத்தமிழர் வாழ்வுரிமை மாநாட்டுக்கு அனைவரும் அணிதிரண்டு வாருங்கள்

## ஈழ ஆதரவாளர் வைகோ அழைப்பு

கொழும்பு, நவ.4

கோவையில் நாளை மறுதினம் 6 ஆம் திகதி நடைபெறும் ஈழத்தமிழர் வாழ்வுரிமை மாநாட்டுக்கு அனைவரும் அலைகடலென திரண்டு வாருங்கள் - என்று தமிழகத்தின் பழுத்த அரசியல் வாதியும் ஈழத் தமிழர் ஆதரவாளருமான வைகோ கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுகுறித்து வைகோ வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

ஈழத்தமிழர் உரிமைகாக்க, தமிழ் ஈழம் விடியல் காண, மூன்று தமிழர் உயிரைக் காக்க, கோவை மாநகரில், சிதம்பரம் பூங்காவில் வருகின்ற 6 ஆம் திகதி ஈழத்தமிழர் வாழ்வுரிமை மாநாடு நடக்கிறது. உலகத் தமிழர் பேரமைப்பின் தலைவர் பழ.நெடுமாறன் தலைமை தாங்குகிறார்.

இலட்சக்கணக்கான தமிழர்களை படுகொலைக்குக் காரணமான இலங்கைக்கு வரிந்து கட்டிக்கொண்டு இந்திய அரசு வேலை செய்கின்றது. அதனால்தான், 2013 ஆம் ஆண்டு இலங்கையில் கொமன்வெல்த் மாநாட்டை நடத்த வேண்டும் என்று இந்திய வெளியுறவுச் செயலர் ரஞ்சன் மத்தாய் கூறியுள்ளார்.

மஹிந்த அரசை அனைத்து உலகக் குற்றவியல் நீதிமன்ற கூண்டில் நிறுத்த, கோவையில் சூளுரைப்போம். தூங்காதே, இன்னுமா உறக்கம்? விழித்து எழு, வீறுகொண்டு எழு, தமிழ்க் குலத்தின் உரிமை காக்க, தோள் தட்டிடப் புறப்படு கோவை நோக்கி என தியாகிகள் சிந்திய செங்குருதி அழைக்கின்றது - என்றுள்ளது. (சி)

# காலவேறுபாடற்றவன் இறைவன்

ஞானக்கதிர்

இறைவா எல்லோரும் இன்புற்றிருக்க அருள்வாயே! என்று வேண்டுவது நல்லவர்கள். அறிஞர்கள் இயல்பாக இருந்து வந்தது. கடந்தகாலம் '' இது கலியுகமப்பா'' என்று சொல்லிக் கொள்பவர்கள் எத்தனையோ பேர் ஞானிகளாகத் தங்களைக் காட்டிக்கொள்வதுமுண்டு. இத்தகையவரின் அறியாமைதானென்னே! காலங்கள் மாறிப்போனாலும் கடவுளுமா காலத்துக்குப் பின்னால் போகப் போகிறார். இந்தக் கேள்வி எழுமானால், கடவுள் தன்மை என்பதே இவை களுக்கெல்லாம் அப்பாற்பட்டதன்றோ! என் பதை திருமூலர் இப்படிச் சொல்கிறார்.

'' கெடுவதும் ஆவதும் கேடிப் புகழோன்
நடுவல்ல செய்தின்பம் நாடவும் ஒட்டான்
இடுவதும் ஈவதும் எண்ணுமின் இன்பம்
படுவது செய்யின் பசுவது வாமே''

இறைவன் ஒருவன் உள்ளான் அவன் நடுநிலை தவறாதவன். ஆகவே அவன் கெடுதி செய்து இன்பங் காண்பதை அனுமதிக்க மாட்டான். தற்காற்கு ஒன்றை இடுவதையும் வறியவர்க்கு ஈவதையும் நினையுங்கள். பிறருக்குத் துன்பம் விளைவிப்பதை மறவுங்கள். இறைவனை அடைய இதுவே வழி ஆகும்.

நன்றி

ஞானச்சுடர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காப்புறுதிப் பத்திரமின்றி மோட்டார் வாகனம் செலுத்தியோருக்கு அபராதம்

யாழ்ப்பாணம், நவ.4

காப்புறுதிப் பத்திரமின்றி மோட்டார் வாகனம் செலுத்திய குற்றத்துக்காக மானிப்பாய் மற்றும் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த இருவர் தலா ஆயிரத்து 500 ரூபா வீதம் மூவாயிரம் ரூபா அபராதம் செலுத்தினர்.

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியைச் சேர்ந்த குறித்த இருவருக்கும் எதிராக கோப்பாய் பொலிஸாரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இதனை விசாரணை செய்த யாழ்.நீதிமன்ற நீதிவான் இருவரும் குற்றத்தை ஒப்புக் கொண்டதை அடுத்து இருவருக்கும் தலா ஆயிரத்து 500 ரூபா வீதம் அபராதம் விதித்தார். (ம-4)

# நயினாதீவின் இருள் எப்போது அகலும்?

### மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் வேலணைப் பிரதேச சபைத் தலைவர் கேள்வி

யாழ்ப்பாணம், நவ.4

மின்சார சபை வடக்கின் வசந்தம், வடக்கின் அபிவிருத்தி என்று கூட்டங்களில் கூறுகின்றது. ஆனால் நயினாதீவு இருளில் மூழ்கியுள்ளது.

வடக்கில் ஏனைய பிரதேசங்கள் இரவில் ஒளியில் உள்ள போதும் நயினாதீவு பிரதேசம் மட்டும் இருட்டில் ஒளி யின்றியுள்ளமை சாபக்கேடே.

வேலணைப் பிரதேச சபைத் தலைவர் சி.சிவராசா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை யாழ். செயலகத்தில் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்திலேயே வேலணைப் பிரதேச சபைத் தலைவர் இவ்வாறு ஆவேசமாகக் கேள்வி எழுப்பினார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

நயினாதீவு மக்களுக்கு மின்சாரம் வழங்கவென மூன்று மின்பிறப்பாக்கிகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த மின்பிறப்பாக்கிகள் நயினாதீவு மக்களை ஏமாற்றுவதற்கு வழங்கப்பட்ட சொத்துகளே. அவை எவையும் இயங்குவதும் இல்லை, இயங்க வைப்பதுமில்லை.

நான் பல தடவைகள் அமைச்சருக்கும் ஆளுநருக்கும் சம்பந்தப்பட்ட மின்சார சபை பிரதம பொறியியலாளருக்கும் அறிவித்துவிட்டேன்.

இறுதியாக இன்று மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கூறுகின்றேன்.

இந்தக் கடலால் பிரிக்கப்பட்ட மக்களைப் பாருங்கள் இந்த மூன்று மின்பிறப்பாக்கிகளையும் அகற்றி இரும்பு விலைக்கு அதனை விற்றுவிடுங்கள். புதிய நவீன இரு மின்பிறப்பாக்கிகளை இங்கு வழங்க ஆவன செய்யுங்கள்.

இல்லாவிடில் விரைவில் மாற்று நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலைமை ஏற்படும்.- என்றார். (ம- 302)

## சிறுகுற்றச் செய்திகள்

பொது இடங்களில் மது போதையில் பொதுமக்களுக்கு இடையூறு விளைவித்த குற்றத்துக்காக மூன்றுபேர் யாழ். நீதிமன்றில் எட்டாயிரம் ரூபா அபராதம் செலுத்தினர்.

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உரும்பிராயைச் சேர்ந்த இருவர் உரும்பிராயில் இவ்வாறு இடையூறு விளைவித்தபோது பொலிஸாரால் வழக்குப் பதிவு செய்யப்பட்டது. யாழ். நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜா வழக்கை விசாரணை செய்தார். இருவரும் தமது குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து ஒருவருக்கு மூவாயிரம் ரூபாவும் மற்றையவருக்கு இரண்டாயிரம் ரூபாவும் அபராதம் விதிக்கப்பட்டது.

சுதுமலையைச் சேர்ந்த மூன்றாவது நபர் கொக்குவில் புகையிரத நிலைய வீதியில் உள்ள பொது இடமொன்றில் இடையூறு விளைவித்த குற்றத்தை ஒப்புக் கொண்டதால் அவருக்கு மூவாயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (ம- 4)

* * *

யாழ். நகரிலுள்ள பிரபல விடுதி ஒன்றுக்கு அண்மையில் கஞ்சா விற்பனை செய்த வரணியைச் சேர்ந்த ஒருவரை யாழ்.பொலிஸார் கைது செய்தனர்.

அவரை யாழ். நீதிமன்ற நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் புதன்கிழமை பொலிஸார் ஆஜர் செய்தனர். சந்தேக நபர் தனது குற்றத்தை ஒப்புக் கொண்டதை அடுத்து நீதிவான் அவருக்கு 12 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தார்.

* * *

யாழ். நகரப் பகுதியில் நடைபாதைக்கு இடையூறாக புடைவை வியாபாரத்தில் ஈடுபட்ட குற்றத்துக்காகத் தென்னிலங்கையைச் சேர்ந்த இரண்டு பேர் தலா ஆயிரத்து 500 ரூபா வீதம் யாழ். நீதிமன்றில் அபராதம் செலுத்தினர்.

* * *

யாழ். மின்சார நிலைய வீதியில் கழிவுப் பொருள்களை வீசிய குற்றத் துக்காக மீசாலையைச் சேர்ந்த ஒருவர் யாழ். நீதிமன்றில் நேற்று முன்தினம் ஆயிரம் ரூபா அபராதம் செலுத்தினார்.

* * *

யாழ். நகரப் பகுதியில் நடைபாதைக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் வாகனம் செலுத்திச் சென்ற குற்றத்துக்காக நல்லூர், சட்டநாதர் வீதியைச் சேர்ந்த ஒருவர் யாழ். நீதிமன்றில் ஆயிரம் ரூபா அபராதம் செலுத்தினார். (ம-4)

* * *

பதிவு செய்யப்படாத உழவு இயந்திரப் பெட்டியுடன் சென்ற உழவு இயந்திர சாரதியை விசாரித்த போது அவரிடம் வாகனத்துக்கான வரி, காப்புறுதி ஆகியவை இல்லாதமை கண்டுபிடிக்கப்பட்டது. கொடிகாமம் பொலிஸார் வரணி இடைக்குறிச்சியைச் சேர்ந்த சாரதிக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்தனர்.

இந்தவழக்கில் எதிரி குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து பதில் நீதிவான் செ.கணபதிப்பிள்ளை 8, 500 ரூபா அபராதம் விதித்து அபராதத் தொகை செலுத்தத் தவறின் 3 மாத சாதாரண சிறைத்தண்டனை அனுபவிக்குமாறு உத்தரவிட்டார். (ம- 207)

## புங்குடுதீவு பகுதியில் 40 கிணறுகளில் நன்னீர் படுகை அடையாளமிடப்பட்டது

யாழ்ப்பாணம், நவ.4

புங்குடுதீவில் உள்ள நாற்பது கிணறுகளில் நன்னீர் படுகை உள்ளதாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழக புவியியல் துறைத் தலைவர் பேராசிரியர் கா.குகபாலன் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

கடந்த இரண்டு வருடங்களாகப் புங்குடுதீவில் நன்னீர் படுகைகளைக் கண்டறிவதற்கான ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன.

பேராசிரியர் குகபாலன் தலைமையில் கலாநிதி எல்.ட. ராஜசூரியர், கலாநிதி துஷ்யந்தி மிகுந்தன், என்.பிரதீபராஜா ஆகியோர் இது தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

தொடரும் இந்த ஆய்வுகளின் படி நன்னீர் படுகை உள்ள கிணறுகள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் தீவின் பல்வேறு பகுதிகளிலும் இந்த நடவடிக்கை தொடரும் எனவும் நன்னீர் படுகை குறித்த ஆரம்ப அறிக்கை அடுத்து வரும் இரண்டு மாதங்களில் வெளியாகும் எனவும் பேராசிரியர் குகபாலன் தெரிவித்தார்.

இந்த அடையாளங்கள் காணப்பட்ட நன்னீர் படுகைகள் உறுதிப்படுத்தப்படுமிடத்து இந்தப் பகுதி மக்கள் குடிதண்ணீருக்குச் சிரமம் அடைய வேண்டிய நிலைமை ஏற்படாது என்று சுட்டிக் காட்டப்படுகின்றது.

இந்தப் பகுதி மக்கள் கோடை காலங்களில் ஏற்படும் வரட்சியால் குடிதண்ணீரைப் பெறுவதில் அலைந்து திரிகின்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ம- 7)



யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் இடம்பெற்ற 'வாழ்வாய் உதாரணமாக' எனும் கிறிஸ்தவ ஆய்வரங்கின் போது பீடாதிபதி எஸ்.கே. யோகநாதனுக்கு கிறிஸ்தவ மன்றம் நினைவுப் பரிசிலை வழங்கிக் கௌரவிக்கிறது. யாழ். ஆயர் அதி.வண.தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகையும் அருகில் உள்ளார். (ம- 319)

## தொடர்மழை காரணமாக மரக்கறிகள் விலை உயர்வு



தற்போது மழை ஆரம்பித்துள்ள நிலையில் மரக்கறிப் பயிர்கள் மற்றும் அறுவடை செய்வதற்கு தயார் நிலையில் இருந்த கிழங்கு வகைகள் அழுகி நாசம் அடையும் நிலையில் உள்ளன. இதேவேளை குடாநாட்டு சந்தைகளில் மரக்கறி வகைகளின் விலை மீண்டும் அதிகரிக்கத் தொடங்கியுள்ளது.

கடந்த சில தினங்களாக தொடர் மழை பெய்துள்ளது.

அத்துடன் தோட்ட நிலங்களில் வெள்ளமும் தேங்கி நிற்கின்றது. இந்த நிலையில் மரவள்ளிக்கிழங்கு, கோவா, முள்ளங்கி, பீற்றூட் என்பன அழுகி சேதமடைந்து வருகின்றன. அத்துடன் கத்தரி, கறி மிளகாய், பயிற்றை, புடோல் போன்ற மரக்கறிவகையும் சேதமடைந்துள்ளன. கணிசமான அளவு மரக்கறிப் பயிர்கள் உற்பத்தி செய்யப்பட்டிருப்பதோடு அவற்றின் விலையும் கணிசமான அளவு குறைவடைந்திருந்த நிலையில் மழை தொடர்ச்சியாகப் பெய்ததால் அவற்றின் விலை மீண்டும் உயரத் தொடங்கியுள்ளது.

விவசாயிகளும் எதிர்பாராத பொருளாதாரப் பாதிப்புக்கு உள்ளாக வேண்டி ஏற்பட்டுள்ளது என்று கவலை தெரிவிக்கப்படுகின்றது. (ம- 11)

## நல்லை ஆதீன புனரமைப்பு; அடுத்த வாரத்தில் அடிக்கல்

### பிரிட்டன் திருப்பணிக்குழு நிதி

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கட்டடத்தை மீள் நிர்மாணம் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்கென பிரிட்டனில் உள்ள நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் குழு நிதியுதவி வழங்கவுள்ளது.

இதன் ஆரம்பக் கட்டடப் பணிகள் எதிர்வரும் திங்கட்கிழமை காலை 9.15 மணிக்கு நல்லை ஆதீன முதல்வர் சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளின் ஆசியுடன் இடம்பெறவுள்ளது.

திருப்பணிக் குழுத் தலைவர் சூ.பாலசிங்கம், இந்து மாமன்றத் தலைவர், இந்து சிரோரத்தினம் ஆகியோர் முன்னிலையில் மனிதநேய மாமணி வ.கயிலாசபிள்ளை தலைமையில் பிரிட்டன் திருப்பணிக் குழு இதனை ஆரம்பித்து வைக்கவுள்ளது. இதற்கென அகில இலங்கை இந்து மாமன்றத் தலைவர், பொதுச் செயலாளர், பொருளாளர் மற்றும் உபதலைவர் கலாநிதி, சைவஞானபானு, செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகன் ஆகியோருடன் மாமன்றக் கட்டடக் குழுவின் தலைவர் கட்டடக் குழுச் செயலாளர் உட்பட ஏழு அங்கத்தவர்கள் கொண்ட இணைப்புக் குழுவொன்றும் மாமன்றத்தால் நியமிக்கப்பட்டுள்ளது. (ம)

## குழாய்க் கிணறுகள் மூலம் குடிதண்ணீர்

யாழ்ப்பாணம், நவ.4

யாழ்ப்பாணத்தில் மூன்று பிரதேச செயலர் பிரிவில் குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டு குடிதண்ணீர் வழங்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தெல்லிப்பழை, கோப்பாய், சங்கானை போன்ற பகுதிகளில் இந்தக் குழாய் வசதி மூலம் குடிதண்ணீர் வழங்கப்பட்டு வருகின்றது.

இதற்கென இந்தப் பகுதிகளில் முப்பது குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டு அதற்கு பம்புகளும் போடப்பட்டுள்ளன என்று தேசிய நீர் வழங்கல் அதிகாரசபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ம- 26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலி.மேற்குப் பிரதேசத்தில் தந்தை செல்வாவுக்குச் சிலை

## திருமலையில் உடைக்கப்பட்ட அதே தினத்தில் அடுத்த வருடம் திறப்பு

சண்டிலிப்பாய், நவ.4

திருமலையில் தந்தை செல்வாவின் சிலை உடைக்கப்பட்ட தினத்தில் அடுத்த வருடம் வலி.மேற்கில் செல்வாவின் சிலை திறந்து வைக்கப்படும்.

இவ்வாறு வலி.மேற்குப் பிரதேச சபைத் தலைவர் திருமதி நா.ஐங்கரன் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக வெளியிட்டு வைக்கப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தொடர்பாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

திருகோணமலையில் வைக்கப்பட்டிருந்த தந்தையின் சிலையின் தலைப் பகுதி உடைத்து எறியப்பட்டிருப்பது அருவருக்கத்தக்க மிலேச்சத்தனமான செயலாகும். இது தமிழ் மக்கள் அனைவரையும் வேதனைக்குள்ளாக்கும் துன்பகரமான சம்பவமாகும். தமிழ் மக்களின் பாரம்பரிய அரசியல் கலாசாரம் அனைத்தையும் அடக்குவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கை என்றே கருதுகின்றேன்.

தமிழ் மக்கள் உன்னதமாகப் போற்றும் ஒரு மாபெரும் அறிஞர் தந்தை செல்வா. காலங் காலமாக தமிழ் மக்கள் மீது திணிக்கப்பட்ட அடக்குமுறைகளுக்கும் ஒடுக்குமுறைகளுக்கும் எதிராக சாத்வீகப் போராட்டங்களை முன்னெடுத்த ஒரு மாபெரும் மேதை, பெருந்தலைவர் தந்தை செல்வா.

ஈழத்தமிழர் மட்டுமன்றி மலையகத் தமிழர்களுக்கு எதிராக அநீதி நடந்த போதும் வெகுண்டெழுந்து உரிமைக்காக குரல் கொடுத்த உத்தமன்.

இன்றுள்ள தலைவர்களும் தந்தை செல்வாவின் வழியைப் பின்பற்றி, அவர் கொள்கைகளைப் பின்பற்றிச் செல்கின்றனர். இவ்வாறு மதிக்கப்பட்ட, போற்றப்பட்ட தலைவருக்கு திருகோணமலையில் வைக்கப்பட்டிருந்த சிலையின் தலைப் பகுதி உடைத்து எறியப்பட்டிருப்பது என்பது அருவருக்கத்தக்க மிலேச்சத்தனமான செயலாகும்.

இந்தச் செயல் தமிழ் மக்கள் அனைவரையும் வேதனைக்கு உள்ளாக்கும் ஒரு செயலாகும். இவ்வாறான செயல் தமிழ் மக்களின் பாரம்பரிய அரசியல் கலாசாரம் அனைத்தையும் அடக்குவதற்கு மேற்கொள்ளப்படும் செயல் என்றே கருதுகின்றேன்.

யாழ்ப்பாணத்தில் நிறுவப்பட்டிருக்கின்ற தூபியும் உடைக்கப்படலாம். இவ்வாறான காட்டுமிராண்டிச் செயல்களால் எமது தேசியத்தின் தனித்துவத்தையும் உரிமையையும் அழிக்கலாமென எதிரிகள் கங்கணம் கட்டி நிற்கின்றார்கள். அது கனவிலும் நடக்காத செயலாகும். தந்தை செல்வாவின் ஒரு சிலை உடைக்கப்பட்டால் இன்று ஓராயிரம் சிலைகள் புதிதாகத் திறக்கப்படும். இந்தத் தந்தையின் சிலை உடைக்கப்பட்ட அதே தினத்தில் அடுத்த வருடத்தில் வலி.மேற்குப் பகுதியில் புதிதாக ஒரு சிலை திறந்து வைக்கப்படும் என்று உறுதியுடன் கூறிக் கொள்கின்றோம்.- என்றுள்ளது. (ம- 115)

# வெள்ளத்தால் பாதிக்கப்படும் சூரியவெளிப் பிரதேச மக்கள்

## தீர்வு கிடைக்காதா என்று பொதுமகன் கேள்வி

யாழ்ப்பாணம், நவ.4

வெள்ள அனர்த்தத்தாலும்- முறையற்ற வாய்க்கால் புனரமைப்பாலும் யாழ்.மாநகர சபைக்குட்பட்ட சூரிய வெளிப்பிரதேசத்தை சேர்ந்த 25 குடும்பங்கள் மோச மானநிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. மக்களின் கஷ்டங்களை பார்வையிட மாநகர உறுப்பினர்களோ, கிராம அலுவலரோ பிரதேச செயலரோ வருகை தருவதில்லை.

இங்குள்ள மக்களின் குழந்தைகளின், முதியவர்களின் நிலைமையை பாருங்கள்- சிந்தியுங்கள். இவ்வாறு சூரிய வெளி பிரதேசத்தில் இருந்து வருகை தந்த முதியவர் ஒருவர் தனது கவலைகளையும் பிரச்சினைகளையும் எடுத்து விளக்கினார்.

யாழ்.பிரதேச செயலர் ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் நேற்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்ட சூரிய வெளிக் கிராமத்தைச் சேர்ந்த முதியவர் தெரிவிக்கையில்;

இங்கு வாழும் குடும்பங்கள் நரகத்துக்குப் போக வேண்டிய அவசியமில்லை. இங்கு பூலோக நரகத்தில் வாழ்க்கையை அனுபவிக்கிறார்கள்.

கெனடி வீதி என்ற ஒன்று உள்ளது. இதன் வீதியை சும்மா விட்டிருந்தால் பரவாயில்லை. கிளறி விட்டுச் சென்றுள்ளனர். செருப்புடன் மக்கள் போக முடியாது செருப்பை கையில் எடுத்து கொண்டுதான் போக வேண்டிய அவலம். யாழ்.மாநகர சபையின் அபிவிருத்தித் திட்டங்கள் அறிவுவெளி, சூரியவெளி மக்களுக்கு கிடைக்காதா? மக்களின் பிரச்சினைக்கு உடன் தீர்வு தாருங்கள் என்றார் அந்த முதியவர்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர், உடனடியாக செயற்படுமாறு மாநகர மேயரையும், மாநகர ஆணையாளர் மற்றும் கிராம அதிகாரிகள்,பொதுச்சுகாதார பரிசோதகர் தலைமையிலான அபிவிருத்திக் குழுவை கூட்டி தயார்ப்படுத்தியவுடன் தனக்கு அறிவிக்குமாறு கூறினார். இந்தவார இறுதியில் நேரடியாகச் சென்று சகல பிரச்சினைக்கும் தீர்வு காணப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (ம-302)



512 ஆவது படைப்பிரிவின் 7 ஆவது கஜபாகு அணியினரின் ஏற்பாட்டில் அரியாலையில் ஜே/96 கிராமசேவகர் பிரிவில் கட்டப்பட்ட 4 லட்சம் ரூபா பெறுமதியான வீடு நேற்றுப் பயனாளியிடம் கையளிக்கப்பட்டது. சிவகுமார் ரத்னமலர் என்ற 5 பிள்ளைகளின் தாய்க்கே இந்த வீடு கையளிக்கப்பட்டுள்ளது. இவருக்கான வீட்டை 512 ஆவது பாதுகாப்புப் படைத் தளபதி பிரிகேடியர் ஏ.பி.டி. இசுறு விக்கிரமரத்ன கையளித்தார். (ம- 15)

# அராலியிலுள்ள தரிசு நிலத்தை பயனுள்ள இடமாக மாற்றக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,நவ.4

வலி.மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட அராலியில் உள்ள 102 ஏக்கர் தரிசு நிலம் மீள் பயன்பாட்டுக்கு ஏற்ற நிலமாக மாற்றப்பட வேண்டும். இதற்கு அராலி தரிசு நிலத்தில் 50 ஆயிரம் பனை மரங்கள் நடப்பட வேண்டும்.

இந்தப் பனை மரங்களை நடுவதற்குப் பனை அபிவிருத்தி சபை, மத்திய சுற்றாடல் அதிகாரசபை என்பன நாற்றுக்களைத் தந்து உதவ வேண்டும் என்று வலி.மேற்குப் பிரதேசசபை உறுப்பினர் தர்மலிங்கம் நடனேந்திரன் கேட்டுள்ளார்.

பொன்னாலைவெளி, அராலி வெளி ஆகிய பிரதேசங்கள் கைவிடப்பட்ட தரிசு நிலங்களாக உள்ளன. இந்த நிலங்கள் மீள் பாவனைக்கு விடப்பட்டால் எதிர்காலத்தில் மக்கள் நீண்ட காலப் பயனை அடைவார்கள்.

தரிசு நிலங்களைக் காலத்துக்கு காலம் பயன்படுத்துவதன் ஊடாக அதனூடாக மிகப் பெரிய மாற்றங்களைப் பொருளாதார அனுகூலங்களைப் பெறலாம்.

எனவே இந்த விடயத்தில் உரிய அதிகாரிகள் கவனத்தில் எடுத்து இதற்கான பயன்தரு மரத்திட்ட உதவிகளைவழங்கினால் அதனை உரியமுறையில் பாதுகாத்து பயனுள்ள திட்டமாக மாற்றுவோம் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-302)

# ஒரு வழிப் பாதையாகும் பழைய தபாலக வீதி

## திங்கள் முதல் நடைமுறைக்கு

யாழ்ப்பாணம், நவ.4

யாழ். ஸ்ரான்லி வீதியில் இருந்து யாழ். பஸ் நிலையத்துக்குக் குறுக்காகச் செல்லும் வீதி ஒரு வழிப் பாதையாக நடைமுறைக்கு வருகின்றது.

யாழ். பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் இந்தத் தீர்மானம் நேற்று ஏகமனதாக நிறைவேறியது.

பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது பழைய தபாற்கந்தோர் வீதியாகச் செயற்பட்ட குறுக்கு வீதி யாழ். ஸ்ரான்லி வீதியில் இருந்து யாழ். பஸ் நிலையத்துக்குச் செல்வதற்கு மட்டும் பயன்பாட்டுக்கு வருகிறது.

எக்காரணம் கொண்டும் யாழ். பஸ் நிலையத்தில் இருந்து ஸ்ரான்லி வீதிக்கு மோட்டார் சைக்கிள், சைக்கிள் ஆகியவற்றைத் தவிர ஏனைய வாகனங்களின் போக்குவரத்து முற்றாகத் தடை செய்யப்பட வேண்டும். எதிர்வரும் திங்கட்கிழமை முதல் இது நடைமுறைக்கு வருகிறது என்று அறிவிக்கப்பட்டது.

இந்தத் தீர்மானத்தை வர்த்தக சங்கத் தலைவர் வ.ஜெயசேகரம் முன்மொழிய மாநகர சபை உறுப்பினர்கள், கிராம அதிகாரிகள், அரச அதிகாரிகள், பொது அமைப்புக்கள் மற்றும் யாழ். பிரதி மேயர் றீகன் ஆகியோர் ஆமோதித்தனர்.

இதனையடுத்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பொலிஸ் அதிகாரிக்கு ஒரு வழிப் பாதை நடைமுறையைக் கொண்டு வருவதற்கான அனுமதியை வழங்கினார்.

இரு முன்னரங்க முகப்பிலும் ஒரு வழித் தடை விளம்பரப் பலகையை நடுவதற்கு ஏற் பாடு செய்யுமாறு மாநகர மேயருக்கும் அறிவுறுத்தப்பட்டது. (ம- 302- 7)

# மக்கள் குறைகேள் அலுவலகம் அராலியில் திறக்கப்படும்

யாழ்ப்பாணம், நவ.4

வலி.மேற்குப் பிரதேச மக்களின் அபிவிருத்தி மற்றும் சேவைகளை நிறைவேற்ற "மக்கள் குறைகேள் அலுவலகம்" அராலியில் திறக்கப்படவுள்ளது.

வலி.மேற்குப் பிரதேச சபை உறுப்பினர் தர்மலிங்கம் நடனேந்திரன் இதற்கான துரித நடவடிக்கையை எடுத்துள்ளார்.

வலி. மேற்கில் உள்ள மக்கள் தமது பிரச்சினைகளையும் குறைகளையும் தீர்க்க பிரதேச சபைக்கு வருவதனை அடுத்தே இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த அலுவலகம் எதிர்வரும் 10 ஆம் திகதி முதல் அராலியில் இயங்கும் என்றும் மக்கள் இந்த அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு தமது பிரச்சினைகளைத் தெரிவிக்க முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ம- 302)

# சென்.ஜேம்ஸ் கிராமம், விளாவெளி மயானம் இரண்டும் வலி. தென்மேற்கு பிரதேச சபை நிர்வாகத்துக்குள் வரவேண்டும்

## எதிர்க்கட்சி உறுப்பினர் கோரிக்கை

சண்டிலிப்பாய், நவ.4


இளவாலை சென்.ஜேம்ஸ் கிராமத்தையும் விளாவெளி இந்து மயானத்தையும் வலி. தென் மேற்குப் பிரதேச நிர்வாகத்துடன் இணைக்குமாறு மானிப்பாய் தொகுதி ஈழமக்கள் ஜன நாயகக்கட்சி அமைப்பாளரும் வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் எதிர்க்கட்சி உறுப் பினருமான வெலிச்சோர் அன்ரன் ஜோன்சன் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் வலியுறுத்தினார்.

வலி.மேற்குப் பிரதேசத்தில் பகுதியாக உள்ளடங்கியுள்ள சென்.ஜேம்ஸ் கிராமத்தை முழுமையாக வலி. தென்மேற்குப் பிரதேசத்துடன் இணைப்பதையே அந்தப் பகுதி மக்கள் விரும்புகின்றார்கள். அவர்களுடைய தேவைகளை நிறைவு செய்வதற்கு வலி.தென்மேற்குப் பிரதேச செயலகம் அருகில் இருப்பதால் இந்தக் கிராமத்தை இந்தப் பிரதேசத்துடன் இணைப்பது சிறந்ததாகும்." என்றார் அவர்.

இதேபோல், வலி.தென் மேற்குப் பிரதேசத்திலுள்ள விளாவெளி மயானத்தின் ஒரு சிறு பகுதி மட்டும் வலி.மேற்குப் பிரதேசத்தில் இருக்கிறது. இந்த மயானத்தை இரு பிரதேச மக்களும் பாவித்து வருகிறார்கள். நிர்வாகத்தை இலகுவாக்கும் வகையில் வலி.மேற்குப் பிரதேசத்தில் அமைந்துள்ள மயானப் பகுதியை வலி.தென் மேற்குப் பிரதேசத்துடன் இணைத்து வரைபடத்தை இலகுவாக்குவதற்கு உதவுமாறும் ஒருங்கிணைப்புக் குழுவிடம் அவர் கோரிக்கை விடுத்தார். (ம- 115)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதிக்கப்பட்டு அபாய நிலையிலுள்ள மாணவனின் சிகிச்சைக்கு உதவுங்கள்



யாழ்ப்பாணம், நவ.4

முள்ளிவாய்க்காலில் இடம்பெற்ற போருக்குப் பின்னரான நடவடிக்கையால் பாதிக்கப்பட்ட மாணவன் செல்வன் சோனமுத்து மோகன ரூபன் கற்சிலைமடு அ.த.க. பாடசாலையில் கல்வி கற்று வருகின்றார். இவர் கல்வியை இழக்கும் அபாய நிலையை எதிர்நோக்கியுள்ளார்.

முள்ளந்தண்டு விலகல் நோயால் அந்த மாணவனது கல்வி, சமுக, சமய செயற்பாடுகள் யாவும் இழந்து செல்லும் நிலையில் சிகிச்சையை அவசரமாக மேற்கொள்ள வேண்டியுள்ளதாக எலும்பு முறிவு சத்திரசிகிச்சை நிபுணர்கள் அறிவித்துள்ளனர்.

மேற்படி சோனமுத்து மோகன ரூபனின் மருத்துவ செலவுக்காக 6 லட்சம் ரூபா உடனடியாகத் தேவைப் படுகிறது. எனினும் குறிப்பிட்டளவு நிதியே இதுவரை வங்கிகளில் கிடைத்துள்ளது.

இந்த நோக்கத்தை அடைவதற்காக உள்நாட்டு- வெளிநாட்டு அன்புள்ளங்கள், உறவுகள் யாவரது நேசக்கரங்களை பாடசாலை அதிபரும், கல்வி சமுகமும் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றன.

இந்த மாணவனுக்கான சிகிச்சைக்காக உடனடியாக 16 ரைற் ரானியம் பெடிக்கல் ஸ்குரூ, 2 ரொட், 2 குறோஸ் கனக் ரேஷ் ஆகியவற்றை உடனடியாகத் தருவித்து வழங்கவேண்டிய நிலை இருப்பதால் இந்த விடயத்தில் கூடுதல் கவனம் செலுத்தி உதவுமாறு பாடசாலை அதிபரும், இதற்கு பொறுப்பான விஞ்ஞான ஆசிரியர் எஸ். புஸ்பரங்கனும் கோரியுள்ளனர்.

மேற்படி அவசர சிறப்பு உதவிச் செயற்பாட்டுக்காக முல் லைத்தீவு இலங்கை வங்கிக் கிளையில் கணக்கு இலக்கம் 72349038 எனும் கணக்கு ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

உடன் உதவு திட்டத்தின் கீழ் உதவுமாறு சகலரையும் பாட சாலைச் சமூகம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (வ-302)

# நல்லூர் ஆலய வடக்கு வீதியை புனரமைக்க நடவடிக்கை தேவை

## விஜயகலா எம்.பி. வலியுறுத்து

யாழ்ப்பாணம் நல்லூர் ஆலயத்தின் வடக்கு வீதி சேதமடைந்து பள்ளமும் திட்டியுமாக காணப்படுவதனால் வெள்ளம் தேங்கி நிற்கின்றது. இதனால் ஆலயத்துக்கு வரும் பக்தர்கள் கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர். இந்த வீதியைத் திருத்தி அமைக்க உரிய நடவடிக்கையை யாழ். மாநகர சபை மேற்கொள்ளவேண்டும். இதற்கான உத்தரவினை பிறப்பிக்குமாறு ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சர் ஏ.எல்.எம். அதாவுல்லாவுக்கு எழுதியுள்ள கடிதத்திலேயே அவர் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார். இந்தக் கடிதத்தின் பிரதி யாழ். மாநகரசபை ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது

அவர் விடுத்த கோரிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

பிரசித்தி பெற்ற நல்லூர் ஆலயத்தின் வடக்கு வீதி தற்போது பள்ளமும் திட்டியுமான நிலையில் சேதமடைந்துள்ளது. இந்தவீதியில் வெள்ளம் தேங்கி நிற்கின்றது. இதனால் ஆலயத்துக்கு செல்லும் பக்தர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். இது குறித்து ஊக்கும் முறையிடப்பட்டுள்ளது.

நல்லூர் வடக்கு வீதியில் திருமண மண்டபம் ஒன்றை வியாபார நோக்கத்துக்காக அமைப்பதற்கு யாழ். மாநகர சபை அனுமதி அளித்திருந்தது. இதற்கிணங்க அமைக்கப்பட்டுள்ள இந்த மண்டபத்துக்குத் தினமும் வாகனங்கள், பார ஊர்திகள் சென்று வருதனால் ஆலயத்துக்குச் சொந்தமான இந்த வீதி சேதமடைந்துள்ளது. இதனால் இந்த வீதியில் வெள்ளம் தேங்கி நிற்கின்றது.

தற்போது கந்தசஷ்டி விரதம் அனுஷ்டிக்கப்பட்டதால் பெருமளவான பக்தர்கள் ஆலயத்துக்குச் சென்று வழிபட்டனர். இந்த நிலையில் வீதி சேதமடைந்துள்ளமையினால் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர். இந்த வீதிக்கு கிரவல் மண்ணிட்டு செப்ப னிட வேண்டியுள்ளது. இதற்கான நடவடிக்கையினை யாழ். மாநகரசபை இதுவரை எடுக்கவில்லை.

எனவே இந்த வீதியை செப்பனிட உரிய நடவடிக்கை எடுக்குமாறு உள்ளூராட்சி அமைச்சர் என்ற வகையில் உங்களிடம் வேண்டிக் கொள்கின்றேன். இதற்கு ஆவனசெய்வீர்கள் என்று எதிர்பார்த்துள்ளேன். இவ்வாறு அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (வ)

# மாற்றுத் திறனாளர்களுக்கானதொழில்வாய்ப்பு

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மண்டபத்தில் மாற்றுத் திறனாளர்களுக்கான தொழில் வாய்ப்பு பற்றிய விழிப்புணர்வு நிகழ்வு எதிர்வரும் 15 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் கோப்பாய் பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட 15-45 வயது வரை யான மாற்றுத் திறனாளர்கள் கலந்து கொள்ளமுடியும்.

இந்த நிகழ்வில் பங்கேற்க விரும்புவோர் தமது பிரிவு கிராம அலுவலர்களிடம் அல்லது பிரதேச செயலகப் பிரிவின் சமூக சேவை அதிகாரியிடம் தொடர்பு கொள்ள முடியு மென அறிவிக்கப்பட்டுள்ளது. 'இதம்' உளவள நிறுவனத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் ஜெய்ப்பூர்வலு விழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம், மோட் டின்வேசன், இதம் உளவள நிறுவனம் ஆகியவற்றின் அதிகாரிகள் கலந்து கொண்டு மாற்றுத்திறனாளர் களுக்கான தொழில் பயிற்சி, தொழில் வாய்ப்பு பற்றிய தகவல்களை வழங்க உள்ளனர். இந்தச் விழிப் புணர்வுச் செயலமர்வுகளுக்கான ஒத் துழைப்பை கோப்பாய் பிரதேச செயலகம் வழங்குகின்றது. (வ-121)




## பொலிஸாரின் நடமாடும் சேவை

நவாலி,நவ.4

மானிப்பாய் பொலிஸாரின் நடமாடும் சேவை கடந்த ஞாயிற்றுக்கிழமை சுதுமலை சிம்மய பாரதி பாடசாலையில் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மல்கம் பேதி தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கிராம சேவையாளர்கள், பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்களென பலரும் கலந்துகொண்டனர்.

தொடர்மழை காரணமாக குறைந்தளவு மக்களே தமது தேவைகளைப் பெறுவதற்கு வந்திருந்தனர். பாடசாலை மாணவர்களின் கிரிக்கெட் போட்டி, பாடசாலை மாணவர்களிடையேயான விவாதப் போட்டி, பொலிஸ் பொறுப்பதிகாரியினால் போக்குவரத்து விதிமுறைகள் பற்றிய அறிவுரை வழங்கல், வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கல் என்பன இடம்பெற்றன. (வ-100)

**Computer Express**
Institute of Information Technology

பாடசாலை மாணவர்களுக்கும், கணனி ஆர்வலர்களுக்குமான தொழில்சார் கற்கைநெறிகள் ஆரம்பமாகின்றன....

| | | |
|---|---|---|
| * Dip. in MicroSoft Office. | 3Months | 2000/= |
| * Dip. in web page Designing. | 4Months | 2000/= |
| * Dip. in Graphic Designing. | 4Months | 2000/= |
| * Dip. in Desk top publishing. | 4Months | 2000/= |
| * Dip. in Hardware Engineering. | 3Months | 2000/= |
| * Dip. in Auto CAD. | 3Months | 2000/= |
| * Dip.in Programming Language | 3Months | 2000/= |
| * Dip. in Acc.Package. (MYOB,Accpac,Q Book) | 3Months | 3000/= |
| * Dip. in Computer Science | 4Months | 2500/= |
| * Honours Dip. in computer science | 5Months | 2500/= |

Advances Courses
Diploma in Video Editing 4Months 3000/=
Diploma in Multimedia 4Months 3000/=

பதிவுகளுக்கு முந்துங்கள்

Diploma in Computerized Accounting
1 week/3Months Course புதிய பிரிவுகள் ஆரம்பம்.

C,C++,Java,Java Script,VB,Html, ஆகிய Programming Language கற்கை நெறிகள்
University of Madras Bsc பட்டதாரிகளால் விரிவுரைகள் வழங்கப்படும்

Batch I - 5.11.2011:- 9 am or 3Pm Batch III 9.11.2011:- 9 am or 3Pm
Batch II - 6.11.2011:- 9 am or 3Pm Batch lv 11.11.2011:- 9 am or 3Pm

No.15 ,Sirampiyady lane, off Stanly Road, (Cosy Hotel 2nd floor) Jaffna.
021 222 8250, 0777222422, 0774907444

## சேவை நலம்



டாக்டர் V.டேவிட் ரட்ணநாதன்

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியிலும் சென்னை கிறீஸ்தவக் கல்லூரியிலும் கற்று பின்னர் திறமை அடிப்படையில் பெங்களூர் மருத்துவக் கல்லூரியில் பல் மருத்துவராகப் பயிற்சி பெற்று இலங்கையில் கொழும்பு, மட்டக்களப்பு போன்ற 15 வைத்தியசாலைகளில் கடமையாற்றி சாவகச்சேரி மாவட்ட வைத்திய சாலையில் பற் சிகிச்சை நிபுணராக, மாவட்ட வைத்திய அதிகாரியாக மிகவும் கஷ்டமான காலகட்டத்தில் 15 வருடங்கள் கடமையாற்றி மாகாண மட்டத்தில் பாராட்டைப் பெற்று, வைத்தியசாலையின் அபிவிருத்தியில் அக்கறையோடு அபிவிருத்தி சபையிலும் அங்கம் வகித்து, சிகிச்சையில் முதியோருக்கு முன்னுரிமை கொடுத்து நோயாளியை இன்னொரு நாள் வருமாறு திகதி கொடுக்காமல் ஒரே நாளில் செய்யக் கூடியவற்றை செய்து நன்மதிப்பைப் பெற்றவர். யாழ்.பிராந்திய பற் சிகிச்சை நிபுணராக பத்து வருடங்கள் சேவையாற்றி பிராந்திய பல் மருத்துவம் மற்றும் பாடசாலை பல் மருத்துவ வளங்களை மேம்படுத்தியுள்ளார். சுகாதாரத் திணைக்களத்தில் 35 வருடங்கள் நல்ல சேவையாற்றி 31.10.2011 ஓய்வு பெற்ற அவரின் சேவைகளை நயப்பதோடு நெடுநாள் சுகமே வாழப் பிரார்த்திக்கின்றோம்.

சாவகச்சேரி
வைத்தியசாலை சகோதரத்துவம்

(C/2854)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வியளம் கேட்டீர்களா?

## சூரியனைக் குடையால் மறைக்கேலாது!

விழிச்சான் குஞ்சு! ஒரு வியளம்.. என்ற குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தேன். வழியில் கந்தையா எதிர்ப்பட்டான். எல்லாம் கலி காலமாய்ப் போச்சுது என்று சலித்துக் கொண்டான்.

கிழவன் வாயைத் திறந்தாலும் குரல் வராது. மிதிச்ச இடத்துப் புல்லுஞ் சாகாது. எங்கடை சனம் கஸ்ரப்படுகுதுகள். உங்களைப் போலை அதுகளையும் சமமாக நடத்துங்கோ எண்டு தான் ஆட்சியாளரிட்டை கத்திக் கத்திக் கேட்டது. அதுவும் சரி வரா தெண்டு நம்பினாப் பிறகு தமிழரைக் கடவுள்தான் காப்பாத்த வேணும் எண்டு சொல்லிப் போட்டுக் கண்ணை மூடீட்டுது. அந்த மனிசன்ரை சிலையை உடைக்கிறாங்களே, சிலையை உடைக்கிற மாதிரி உங்களையும் உடைப்பம் எண்டு சொல்லுறாங்களோ? என அவன் ஆதங்கப்பட்டான்.

உண்மைதான்! அந்த மனிசன் எஸ்.ஜே.வி.செல்வநாயகம் வெள்ளைக்காரன் குடுத்திட்டுப் போன சுதந்திரத்தை எல்லாரும் சமமாக அனுபவிக்க வேணும் எண்டதுக்காகப் பாடுபட்டுது. அதிலும் சிங்களவரோடை சேர்ந்து கதைச்சுப் பேசி எதையெண்டாலும் பெறுவமெண்டு வெளிக்கிட்டுது. பாளிமென் டிலை எங்கடை மக்களின்ரை பிரச்சினையளை எடுத்துச் சொல்லுறதும், அரசாங்கத் தலைவர்களோடை பேசிறதும் எண்டு அந்தாளின்ரை வாழ்நாளே கழிஞ்சு போச்சுது. தன்ரை அற்வகேற் தொழிலைவிட சனத்தின்ரை பிரச்சினையளைப் பெரிசா நினைச்சு, அந்தப் பிரச்சினையளை அரசாங்கத்தோடை பேசித் தீர்ப்பம் எண்டு நம்பிச்சுது.



மனிசன் பேசிப் பேசிச் சும்மா இருக்கேல்லை. இரண்டு தரம் பண்டாரநாயக்கவுடனும், டட்லி சேனநாயக்கவுடனும் ஒப்பந்தங்களையும் செய்திச்சுது. ஒப்பந்தக் காகிதங்களை அவையள் கப்பல் செய்து விளையாடினதுக்கு அவர் என்ன செய்யிறது? சாக முதல் ஓங்கி ஒரு தீர்மானத்தையும் எடுத்துப் பார்த்துது. அதுதான் வட்டுக்கோட்டைத் தீர்மானம். தமிழீழமே தமிழருக்கான நிரந்தரத் தீர்வு எண்டு உறுதியாகச் சொல்லிப் பார்த்துது. ஒண்டுக்கும் மசியாத பேரினவாதத்தைக் கண்டிட்டு கடைசியாய் தமிழர்களைக் கடவுள் தான் காப்பாத்த வேணும் எண்டு சொல்லிப் போட்டுக் கண்ணை மூடீட்டுது.

நாங்களும் வந்த கடவுளர் ஒவ்வொருவராய் தீர்வு வரும் எண்டு வேண்டிக் கொண்டிருக்கிறம். இந்திரா காந்தி நிறையத் தருவா எண்டு எதிர்பார்த்தம். இடையிலை அவ போயிட்டா. அவவின்ரை மகன் தருவார் எண்டு பார்த்தம். அவர் ஒன்றை எதிர்பார்க்க இன்னொன்றைத் தந்துவிட்டு அவரும் போட்டார். பிறகும் கன பேர் வந்தினை. வில்லங்கத்தைத் தந்து போட்டு நல்ல பிள்ளைக்கு நடிக்கிற இங்கிலாந்து வந்துது. அமெரிக்காவின் சமாதான முகமாயிருக்கிற நோர்வே வந்துது. ஜப்பான் வந்துது. வந்த எல்லா வெள்ளங்களும் நிண்ட வெள்ளத்தையே அடிச்சுக் கொண்டு போனதுதான் மிச்சம்.

இப்ப உலகத்தின்ரை பொலிசுக்காரன் ஏதாவது தருவானோ எனக் காக்க வேண்டியிருக்குது. பேசப் போட்டாங்கள் எண்டவுடனை என்ன செய்யிறதெண்ட வெப்பியாரத்திலை கிழவன்ரை தலையை வெட்டிப் போட்டிட்டாங்கள். அந்த மனிசன்ர சிலைக்கே உந்தக் கதியெண்டால் மற்றவைக்கு என்னவும் நடக்கலாந்தானே! கந்தையா சொன்னது சரிதான்!

எங்கடை செல்வநாயகத்தாற்றை சிலையையல்லே உடைச்சிட்டாங்களாம் எண்டு சிவத்தார் சொன்னவுடனையே அதிர்ந்து போனம். கடையிலை இதப் பற்றிக் கதைச்சுக் கொண்டு நிக்கேக்கை காதுக்குள்ளை ஹெட்போனை வைத்துக் கதைத்துக் கொண்டிருந்த ஒரு விடலை யாரையா செல்வநாயகம் எண்டு கேக்குது. அதைக் கேட்டவுடனை எனக்குத் தூக்கிவாரிப் போட்டுது. உதுகளுக்கு எப்பிடி அரசியல் விழிப்புணர்வு ஊட்டுறது எண்டு தெரியேல்லை. அமெரிக்காவுக்கு எங்கடை பிரச்சினை பற்றித் தெரியிற அளவுக்கு ஊரிலையும் எங்கடை சனத்துக்குக் கொஞ்சம் சொல்லி வைக்க வேணும் எம்.பித் தம்பிமாரே!

சரி, இந்தப் பிள்ளையள் சண்டைக்குள்ளை பிறந்து வளந்ததுகள். அதுகளுக்குத் தெரியாதது புதுமையில்லை. ஆனா எங்கை தமிழற்றை பிரச்சினையைக் கொண்டு போனாலும் இடையிலை கிளித்தட்டு மறிக்கிற அமைச்சர் ஒருதரும் "ஆர் அவர்?" அவரை எனக்குத் தெரியாதே எண்டு சொல்லுறாராம். கேட்கப் புதினமாய்த்தான் கிடக்குது. இனப் பிரச்சினையின்ரை மூலத்தை மற்றவைக்குத் தெளிவுபடுத்தின மனிசனைத் தெரியாமல்தான் மனித உரிமை மீறலுமில்லை, இனப் பிரச்சினையுமில்லை எண்டு சொல்லித் திரியிறாரோ? தெரிஞ்சதாய்க் காட்டிக் கொண்டால் பயங்கரவாதப் பிரச்சினை எண்ட வாய்பாட்டை மாத்திச் சொல்ல வேண்டி வந்தாலும் எண்டு நினைச்சுத்தான் ஒரேயடியாய் அவரைத் தெரியாது எண்டு சொல்லி விட்டாரோ?

கந்தையா.. அந்தாள் மென்மையான மனிசன்தான்! ஆனா அந்தாள் உருவாக்கின கருத்து வலுவானது கண்டியோ.. சூரியனைக் குடையாலை மறைக்கேலுமே?

விழிச்சான் குஞ்சு.

---

உயிர்காப்புக்கலத்தில் 3 நாள்களாக கடலில் தத்தளித்த

# இலங்கை மீனவர்கள் மூவர் தென்னாபிரிக்காவால் மீட்பு

கொழும்பு,நவ.4

மீன்பிடிப் படகு தீப்பற்றிய நிலையில் உயிர்காப்பு கலமொன்றில் 3 நாள்களாக உணவு, குடிதண்ணீர் எதுவுமின்றி தத்தளித்துக்கொண்டிருந்த இலங்கை மீனவர்கள் நால்வர் தெய்வாதீனமாகக் காப்பாற்றப்பட்டுள்ளனர்.

இவர்கள் தென்னாபிரிக்காவின் மொஸல்குடாவுக்கு அருகில் கரையிலிருந்து 20 கிலோ மீற்றர் தொலைவில் வைத்து தென்னாபிரிக்காவின் தேசிய கடல் மீட்பு நிறுவக அதிகாரிகளால் காப்பாற்றப்பட்டனர்.

57.5 அடி நீளமான, தேஷான் லங்கா எனும் இம்மீன்பிடிப் படகு சியாரா லியோனை நோக்கி சென்று கொண்டிருந்தபோது கடந்த ஞாயிற்றுக்கிழமை தீப்பற்றி கடலில் மூழ்கியது.

இந்த மீன்பிடிப் படகை கடந்த மாதம் தென்னாபிரிக்காவின் ஈஸ்ட் லண்டன் நகரிலுள்ள துறைமுகத்தில் தென்னாபிரிக்க அதிகாரிகள் தடுத்து வைத்திருந்தனர்.

இந்தப் படகில் வி.எச்.எவ். வானொலி தகவல் பரிமாற்றக் கருவிகளோ, உயிர்காப்புக்கலமோ, ஆபத்தை அறிவிக்கும் சமிக்ஞை கருவிகளோ இல்லாதிருந்தமையே இந்தப்படகை அவர்கள் தடுத்து வைத்தமைக்கு காரணமாகும்.

லண்டனின் சம்ஸா பிராந்திய அதிகாரிகப்டன் பீட்டர் குரூன் இது தொடர்பாகத் தெரிவித்ததாவது:

இந்தக்கருவிகளை வைத்திருக்கவேண்டுமெண்பதுஇலங்கை விதிகளின்படி கட்டாயமானதல்ல என இந்தப்படகின் உரிமையாளர் கூறினார். ஆனால், இது இலங்கையல்ல, இங்கு எமது விதிகளின்படி செயற்பட வேண்டுமென நான் அவரிடம் கூறினேன். அவர் தயக்கத்துடன் இக் கருவிகளை வாங்கினார். அதன் பின்னர் அப்படகு விடுவிக்கப்பட்டது - என்றார்.

(ச-சி)

---

# பொலிஸ் நிலையம் வரை சென்றடைந்த கொழும்பு மாநகர சபை அறை விவகாரம்

கொழும்பு, நவ.4

கொழும்பு மாநகரசபையில் அறையொன்று ஒதுக்கப்பட்ட விவகாரம் முக்கிய பிரச்சினையாக விஸ்வரூபமெடுக்க, கொதிப்படைந்த ஆளும் கட்சியினரும் - பிரதான எதிர்க்கட்சி உறுப்பினர்களும் இந்த விடயத்தை பொலிஸ் நிலையம் வரை கொண்டு சென்றுள்ளனர் எனத் தெரியவருகிறது. அறை ஒதுக்கப்பட்ட விவகாரம் தொடர்பாக கறுவாத்தோட்டப் பொலிஸ் நிலையத்தில் மாநகரசபை உறுப்பினர்கள் ஏட்டிக்குப்போட்டியாக முறைப்பாடு செய்துள்ளனர் என அறியமுடிகிறது.

கொழும்பு மாநகரசபையிலுள்ள அறையொன்றில் மாநகர சபை எதிர்க்கட்சியினர் கடந்த ஞாயிற்றுக்கிழமை கூடி மந்திராலோசனை நடத்தியுள்ளனர்.

மாநகரசபையின் எதிர்க்கட்சித் தலைவர் மிலிந்த மொறகொட தலைமையில் நடைபெற்ற இந்த முக்கிய கூட்டத்தில் சுமார் 20 வரையான உறுப்பினர்கள் கலந்துகொண்டனர் என நம்பகரமாக அறியமுடிகிறது.

மேல் மாகாணசபை முதலமைச்சரின் பணிப்புரைக்கமையவே கொழும்பு மாநகரசபையில் எதிர்க்கட்சியினருக்கு அறையொன்று ஒதுக்கப்பட்டது என்றும் கூறப்படுகின்றது.

இந்த அறை ஒதுக்கப்பட்டதை ஆட்சேபித்தும், மாநகரசபையில் இடம்பெற்ற கூட்டம் சட்டவிரோதமானது என்று சுட்டிக் காட்டியும் ஆளுங்கட்சி உறுப்பினர்கள் கறுவாத்தோட்டப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இந்த விடயம் மாநகரசபையின் பிரதான எதிர்க்கட்சியினரின் காதுகளுக்கு எட்ட கொதிப்படைந்த அவர்கள், ஜனநாயக முறைப்படியே கூட்டம் நடத்தப்பட்டது என்றும், இதில் சட்டவிரோதம் என்று கூறுவதற்கு என்ன உள்ளது என்று கோரியும் அதே பொலிஸ் நிலையத்தில் தமது விளக்கத்தைப் பதிவு செய்துள்ளனர் என்று தெரியவருகிறது.

கொழும்பு மாநகரசபை உறுப்பினர்களின் அதிரடி நடவடிக்கையை கண்டு கறுவாத்தோட்டப் பொலிஸார் கதிகலங்கியுள்ளனர் .

என்னசெய்ய, யார்சொல்வதை ஏற்பது எனக் குழப்பமடைந்த பொலிஸார் ஆரம்பக்கட்ட விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

கொழும்பு மாநகரசபையின் முதலாவது அமர்வு இடம்பெறுவதற்கு முன்னரே இவ்வாறான குழப்பங்கள், முரணான கருத்துகள் என்பன கொழும்பு அரசியல் வட்டாரத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன.

கட்சிகளுக்கிடையே நிலவும் ஒற்றுமையின்மையால் எதிர்காலத்தில் மாநகரசபை எடுக்கும் முடிவுகளில் முக்கிய சில தாக்கங்கள் ஏற்படும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ச-சி)

---

# தமிழ்த் தலைவனைத் தெரியாத அமைச்சர்

தந்தையென ஈழத்தமிழர் ஏற்றுக்கொள்ள ஒருமேதை. தன்னினத்தின் விடிவுக்காய் தன்னை அழித்த ஒரு தலைவன். அகிம்சை, அன்பு, அடக்கம், அடிபணியா நெஞ்சுறுதி கொண்ட நேர்மையாளன். அப்பழுக்கற்ற நேர்மை. அஞ்சாத நெஞ்சுறுதி. இவைதான் தந்தையென இவரை தமிழினம் ஏற்க வைத்த சான்றாண்மை.

அரை நூற்றாண்டாக, ஈழத் தமிழர்தம் இணையில்லாத் தலைவனாய், ஈழத்துக் காந்தியாய் விளங்கிய உத்தமன். அந்தக் காலத்தில் பண்டிதர் ஜவகர்லால் நேரு கொழும்பு வந்திருந்தார். நாடாளுமன்றம் அவரை வரவேற்றது. அந்தக் காலப் பிரதமர் பண்டாரநாயக்கா ஒவ்வொருவரையும் அங்கு அறிமுகம்செய்து வைத்தார்.

தந்தையின் முறை வந்தது. அந்தமாபெரிய ஆசிரிய ஜோதிக்கு, எமது தந்தையை - பண்டாரநாயக்கா அறிமுகம் செய்து வைத்தார். எப்படித் தெரியுமா? "A dangerous personality from the North" அது தமிழில்: ஒரு மிகப் பயங்கரமான பேர்வளி என்பது தான் அந்த அறிமுகம்.

பல ஆண்டுகளுக்கும் பின்னே, கவிஞர் காசி ஆனந்தனுடன் இந்தக் கட்டுரையாளர், தந்தையைப் பேட்டி கண்டபோது, தந்தை, தன்னை மிகக் கவர்ந்த அறிமுக உரை இதுவே எனப் புன்னகை பூத்த முகத்துடன் புகன்றார். இப்படியாக, இலங்கை, இந்தியா ஏன் தமிழர்கள் எங்கு வாழ்ந்தாலும் அவர் தம் இதயத்தில் குடியிருந்த மாண்புமிகு மேலோன் எங்கள் எஸ்.ஜே.வி.

அன்பின் திரு உருவம், அடக்கத்தின் விளை நிலம், பண்பின் படுக்கை அறை, தமிழ்த் தாயின் தவப்புதல்வன் " வாழு! வாழவிடு" இதுவே அவரது தாரகமந்திரம். நீ உன்னை ஆண்டால் தான் நீ வாழலாம். இது அவரது மூலமந்திரம்.

இப்படியாக, மெலிந்த உருவம், உயர்ந்த தோற்றம், அஞ்சாத மன உறுதி, இவற்றோடு காலிமுகக் கடற்கரையில் சத்தியாக்கிரகம் மேற்கொண்டு காடையரால் தாக்கப்பட்டு காவியம் இயற்றிய கனவான்.

இவற்றையெல்லாம் ஏன் எழுதுகிறேன்? இப்படியான ஒரு யுகத்தின் தலைவனது தலை கொய்து வீசப்பட்டுள்ளது.

இது ஒரு சர்வசாதாரண நிகழ்வு அல்ல. Coming events cast their shadows என்பது போல் ஆனைவரு முன்னே கேட்கும் மணி ஓசைதான் இது. தமிழர் தம் தலைவனது தலை சூரசம்காரத்தை அண்டி வீழ்த்தப்பட்டுள்ளது.

இவையெல்லாவற்றுக்கும் மணி மகுடமாய் திகழ்வது மாண்புமிகு அமைச்சர், ஐ.நா.புகழ் படைத்த பேர் அறிவாளன், சமகாலத்து அரசியலில் மனித உரிமை பேணும் மா ஆசான் அமைச்சர் சமரசிங்காவின் 'பொன் மொழி' "ஆர் இந்தச் செல்வநாயகம்; யான் கேட்டறியேன்" என்று வியப்புற்றுள்ளார் அவர். அந்த வியப்புறு வார்த்தைகள் எதை எதையோ சொல்லாமல் சொல்லுவது போல் தொனிக்கிறது.

உண்மையில் இவர் தந்தை பற்றி கண்டு கேட்டு அறியவில்லையா? இல்லை காரணகாரியத்தோடு கபடமாகப் பேசுகிறாரா? ஆண்டவனே இதன் தார்ப்பரியம் உனக்குத் தான் தெரியும். - திருவேந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
04 நவம்பர் 2011 வெள்ளிக்கிழமை

# வெள்ளத்தால் இடர் ஏற்படாதிருக்க உரிய வழிகளைச் செய்ய வேண்டும்

**பேரிடர் முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் தெரிவிப்பு**

மன்னார், நவ.4

மன்னார் மாவட்டத்தில் வெள்ளத்தால் இடர் ஏற்படாதிருக்க பொதுமக்கள் உரிய வழிவகைகளை இனங்கண்டு அவற்றைச் சிரமதானம் மூலம் மேற்கொண்டு அனர்த்தங்களைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலைய உதவிப் பணிப்பாளர் எம்.ஏ.சி. றியாஸ் தெரிவித்தார்.

அனர்த்தங்களில் இருந்து பாதுகாப்புப் பெறுவ்து தொடர்பாக பொதுமக்களை தெளிவுபடுத்தும் வகையில் அவர் ஊடகங்களுக்கு விடுத்துள்ள அறிக்கையொன்றிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவித்ததாவது:

மன்னார் மாவட்டத்தில் பருவமழை ஆரம்பித்துள்ளது. ஆகவே எதிர்காலத்தில் வெள்ள அனர்த்தங்களிலிருந்து எம்மைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டியது அவசியம். அதற்காக நாம் முன் கூட்டியே சில ஏற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும்.

மழைக் காலங்களில் நீர் தேங்கி நிற்கும் பகுதிகளை இனங்கண்டு அந்த நீரை வழிந்தோடச் செய்வதற்கான நடவடிக்கைகளை சிரமதானம் மூலம் மேற்கொள்ள வேண்டும். அப்போது வெள்ள அனர்த்தத்திலிருந்து பாதுகாப்புப் பெறும் அதே வேளை நுளம்புப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தலாம். இது விடயத்தில் அரசும் அரச சார்பற்ற நிறுவனங்களும் அனர்த்த முகாமைத்துவத் திட்டங்களை மக்களுக்கு எடுத்துக் கூற வேண்டும்.

மேற்படி திட்டத்தை ஒழுங்காகச் செயற்படுத்துவதன் மூலம் அனர்த்தங்களில் இருந்து எம்மைப் பாதுகாத்துக் கொள்ள முடியுமெனவும் குறிப்பிட்டுள்ளார். (எ)




கிளிநொச்சி புதுமுறிப்புக் கிராமத்தில் வசிக்கும் பெண்களை தலைவராகக் கொண்ட 20 குடும்பங்களுக்கு இந்துப் பேரவையால் கடந்த செப்ரெம்பர் மாதம் 18 ஆம் திகதி வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டன. அவர்களுக்கு நீர் இறைக்கும் இயந்திரங்கள், கோழிக்குஞ்சுகள், விவசாய உபகரணங்கள், விதை தானியங்கள் என்பன வழங்கப்பட்டன. (302)

## கிளிநொச்சி செயலகத்தில் பயிற்சியாளராக ஜெயதிலக

கிளிநொச்சி, நவ.4

இலங்கை நிர்வாக சேவையைச் சேர்ந்த ஜே.எம்.எஸ்.பி.பி ஜெயதிலக கிளிநொச்சி மாவட்ட செயலகத்துக்குப் பயிற்சியாளராகக் கடந்தவாரம் முதல் பொது நிர்வாக அமைச்சால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை நிர்வாக சேவையில் புதிதாக இணைந்து கொண்ட இவர் நிர்வாக சேவைப் பயிற்சிக்காக கடந்த ஜூலை மாதம் யாழ்ப்பாணத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் கடமைகளில் ஈடுபட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

# வீதி எப்போது திருத்தம்? மக்களுக்கு எப்போது விடிவு?

வவுனியா, நவ.4

வவுனியா மகாறம்பைக் குளம் பி.எஸ்.சி. ஒழுங்கைக் குட்பட்ட பூந்தோட்டப் பாடசாலைக்குச் செல்லும் வீதி மிக மோசமாக சேதமடைந்துள்ளதுடன் இந்த வீதி மிக நீண்ட காலமாகப் புனரமைப்புச் செய்யாமல் காணப்படுவதாகவும் அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக இந்த வீதியில் தினமும் பாடசாலைக்குச் செல்லும் மாணவர்கள் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகி விபத்துக்களும் ஏற்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் கவனமெடுத்து இந்த வீதியைப் புனரமைப்புச் செய்து தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.(எ)

# மன்னாரில் நேர்ப் திட்டத்தில் 1013 வீடுகள் நிர்மாணம்

மன்னார், நவ.4

நேர்ப் திட்டத்தின் கீழ் மன்னார் மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டுள்ள வீட்டுத்திட்டங்களுள் பெரும்பாலானவை பூர்த்தியடைந்துள்ளதாக மன்னார் மாவட்ட மேலதிக அரச அதிபர் எஸ்.மோகநாதன் தெரிவித்தார்.

மேற்படி திட்டத்தின் கீழ் மன்னார் மாவட்டத்தில் சுமார் 1013 வீடுகளை நிர்மாணிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. இவற்றுள் 283 வீடுகள் பூர்த்தியடையாத நிலையில் இருப்பதாகவும் அவற்றை விரைவில் பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

முசலி பகுதிக்கு 140 வீடுகளும், மாந்தை மேற்குப் பகுதிக்கு 468 வீடுகளும், மடுப் பிரதேசத்துக்கு 405 வீடுகளுமாக மொத்தம் 1013 வீடுகள் அமைக்கப்பட்டு வருகின்றன.ஒவ்வொரு வீட்டுக்கும் 3 லட்சத்து 25 ஆயிரம் ரூபா வழங்கப்படுகிறது.(எ)

# மீளக்குடியமர்ந்த பாடசாலைகளின் வளப்பற்றாக்குறை மாணவர் பாதிப்பு

**வவுனியா வலக்கு பிரதிக்கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு**

வவுனியா, நவ.4

மீளக்குடியமர்ந்த பகுதிகளில் ஆரம்பிக்கப்பட்ட பல பாடசாலைகளில் வளப்பற்றாக்குறையால் மாணவர்கள் பெரிதும் கஷ்டப்படுகின்றனர் என்று வவுனியா பிரதிக்கல்விப் பணிப்பாளர் கே.நவரட்ணம் தெரிவித்தார்.

வவுனியா நொச்சிமோட்டை கனிஷ்ட உயர்தர வித்தியாலயத்தில் சிங்கர் நிறுவனத்தினால் நிர்மாணிக்கப்பட்ட சிறுவர் பூங்கா திறப்பு விழாவின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பாடசாலை அதிபர் கோ.குலேந்திரகுமார் தலைமையில் நடைபெற்ற வைபவத்தில் உதவி மாவட்ட முகாமையாளர் சஜீத், கிளைமுகாமையாளர் கஜதீபன் உட்பட பாடசாலை மாணவர்களின் பெற்றோர்களெனப் பலர் கலந்து கொண்டனர். இங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் பூரணமான அடிப்படை வசதிகளின்றி பல பாடசாலைகள் இயங்குகின்றன.

தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் இந்தக் கல்வி நிலையங்களுக்கு வசதிகளை வழங்கி வருகின்றன.அந்த வகையில் சிங்கர் ஸ்ரீலங்கா நிறுவனம் எமது பாடசாலையின் சிறுவர்களின் நலனுக்காக சிறுவர் பூங்காவை அமைத்துத் தந்துள்ளது. அதனுடைய முயற்சிக்கு பாராட்டுகின்றேன் என்றார். (எ)

## பாயும் வெள்ளத்தால் தத்தளிக்கும் ஒதியமடுவீதி

முல்லைத்தீவு, நவ.4

நெடுங்கேணியிலிருந்து ஒதியமலை செல்லும் வீதியின் குறுக்கே வெள்ளம் பாய்வதால் அதனூடான போக்குவரத்துத் தடைப்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

ம்ழை வெள்ளம் காரணமாக அநேகமாக இந்தப்பகுதி வீதிகள் சேதமடைந்து வருகிறது. குறிப்பாக ஒட்டுசுட்டான் - புதுக்குடியிருப்பு வீதி மிகவும் மோசமான நிலையில் சேதமடைந்து வருகிறது.

மழை தொடர்ந்து பெய்யும் நிலை காணப்பட்டால் இந்தப் பகுதி மக்கள் வீட்டுக்குள் முடங்கும் நிலை ஏற்படும் என கவலை தெரிவிக்கின்றனர்.

இந்தப் பகுதியில் வெள்ளம் தேங்கும் இடங்களை இனங்கண்டு வெள்ளத்தை தேங்கவிடாமல் ஓடுவதற்கான செயற்பாடுகளை மேற்கொள்ள ஆவண செய்யுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கேட்கின்றனர். (எ-500)

# வெளிநாட்டில் பிறந்த நபர் மீண்டும் இலங்கையில் குடியுரிமை பெற 50,000 ரூபா செலவாகிறது

**வவுனியா பிரதேச செயலர் தெரிவிப்பு**

வவுனியா, நவ.4

போர் காரணமாக இடம் பெயர்ந்து வெளிநாடுகளுக்குச் சென்ற நிலையில் நாடு திரும்பியவர்கள் வெளிநாடுகளில் பிறந்த பிள்ளைகளுக்கு இலங்கையில் குடியுரிமையைப் பெறுவதற்குப் பெரும் இன்னல்களை எதிர்நோக்குவதாகத் தெரிவித்துள்ள வவுனியா பிரதேச செயலர் அ.சிவபாலசுந்தரன் அதற்குத் தலா 50 ஆயிரம் ரூபாவைச் செலவிட வேண்டியிருப்பதாகக் குறிப்பிட்டார்.

வவுனியா மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இந்தியாவில் பிறந்த குழந்தைகளுக்கு இலங்கை பிரஜாவுரிமை வழங்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் கருத்துத் தெரிவிக்கையில் இந்த நாட்டை விட்டு பல்வேறு காரணங்களுக்காக வெளிநாடுகளுக்குச் சென்றவர்களில் மிகவும் வறிய தங்களுடைய வாழ்வைக் கொண்டு செல்ல முடியாதவர்கள்தான் அதிகமாகவுள்ளனர். அவ்வாறு வெளிநாடுகளுக்குக் குறிப்பாக இந்தியாவுக்குச் சென்றவர்கள் அங்கு பிறந்த குழந்தைகளை தங்களுடைய நாட்டுக்குக் கொண்டு வந்து வாழ்க்கை நடத்துவதற்கான சட்ட ரீதியான நிலையை பெறுவது மிகவும் சிரமமாகவுள்ளது.

குறிப்பாக இந்தியா போன்ற நாடுகளிலே பிறந்தமையால் தங்களுடைய இலங்கை பிரஜாவுரிமையைப் பெறுவது சட்ட ரீதியாகக் கடினமான விடயமாக இருப்பதால் தமது சொந்தச் செலவில் சொந்த முயற்சியில் பெற முடியாதுள்ளது.

சாதாரணமாக ஒருவர் தனது பிரஜாவுரிமையைப் பெறுவதற்குச் சட்ட ரீதியான பணமாக 25 ஆயிரம் ரூபாவும் பயணச் செலவு மற்றும் இதர செலவுகள் போன்றவற்றுக்கு மேலும் 25 ஆயிரம் ரூபாவும் மொத்தம் 50 ஆயிரம் ரூபா வரையில் செலவு செய்ய வேண்டி உள்ளது.

கிராமங்களில் வாழும் அப்பாவி மக்கள் இவ்வாறு குடியுரிமையைப் பெறுவதில் மொழி புரியாத இடம் மற்றும் திணைக்களங்களைத் தொடர்பு கொள்ள முடியாதநிலை போன்றவையும் பெரிய தடையாக இருக்கின்றது.

அந்தவகையில் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் ஏனைய திட்டங்களோடு ஒப்பிடும்போது இது மிக முக்கியமான தேவையாக கருத வேண்டியுள்ளது என்றார்.

இந்த நிகழ்வில் கலந்து கொண்ட ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டத்தின் இலங்கைக்கான நிகழ்ச்சித் திட்ட உதவிப் பணிப்பாளர் ரெசீனா பின்கிராம் கருத்துத் தெரிவிக்கையில்:

2005 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்தத் திட்டமானது 2011 ஆம் ஆண்டளவில் 16 ஆயிரத்துக்கும் மேற்பட்ட விண்ணப்பங்களைப் பெற்று சட்ட ஆவணங்களுக்கான நடமாடும் சேவையை நடத்தியிருக்கின்றோம்.

கடந்த ஆண்டும் இந்த ஆண்டும் ஐக்கிய நாடுகள் பொருளாதார அபிவிருத்தித் திட்டமானது அரசுக்கு உதவிகளை செய்ததன் காரணமாக இவ்வாறான நடமாடும் சேவையை அதற்குரிய நிறுவனங்களுடன் சேர்ந்து செய்யக் கூடியதாக உள்ளது.

எதிர்காலத்திலும் இந்தியாவிலும் இருந்து திரும்பி வருகின்றவர்களுக்கும் இலங்கை குடியுரிமையைப் பெற்றுக் கொடுக்கின்ற வேலைத் திட்டத்தை முன்னெடுப்போம் எனத் தெரிவித்தார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைச்சரின் ஆதரவாளர் ஒருவரால் முல்லை தெற்கில் காணி ஆக்கிரமிப்பு

## தடுத்து நிறுத்த நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் கோரிக்கை

முல்லைத்தீவு தெற்கு கிராம அலுவலர் பிரிவின் முல்லைத்தீவு பரந்தன் வீதியைச் சின்னக் கல்லாறு குறுக்கறுக்கும் இடத்தில் அமைந்துள்ள சங்கிலிப் பாலத்துக்கு அண்மையில் அண்ணளவாக ஒரு ஏக்கருக்குக் கூடுதலான பகுதியை முல்லைத்தீவு நகர்ப் பகுதியில் மீளக்குடியமர்த்தி யிருக்கும் முகமட் இப்ராஹிம் நிபாரக் என்பவரால் அடாத்தாக வேலி யிடப்பட்டு மண்நிரப்பப் பட்டு வருகின்றது என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார்.

முல்லைத்தீவு சங்கிலிப் பாலத்தில் காணி அபகரிக்கப் பட்டு மண் நிரப்பப்படுவதாக மக்கள் அமைப்பு இவரிடம் முறையிட்டதை அடுத்து மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்:

முகமட் இப்ராஹிம் நிபாரக் அடாத்தாகப் பிடித்திருக்கும் காணிக்கு முன்பாகப் பஸ் நிலையம் அமைய இருப்பதால் வியாபார நோக்கில் முன்கூட்டியே காணி அபகரிப்பு நடந்துள்ளதாகத் தெரியவருகின்றது. இந்த நடவடிக்கை சட்டம் ஒழுங்கை கேலிக்குள்ளாக்கும் பாரதூரமான விடயமாகும்.

அத்துடன் இந்த ஆற்றுப் பகுதியில் நன்னீர் மீன்பிடிப்பில் ஈடுபட்டிருக்கும் பெருந்தொகையான குடும்பத்தினரின் வாழ்வாதாரத்துக்கு விடப்பட்டிருக்கும் பெரிய அச்சுறுத்தலாகும். இத்தகைய ஆக்கிரமிப்பால் இயற்கை நீரோட்டம் தடைப்பட்டு நடைபெறும் மாரிகாலத்தில் தீர்த்தக்கரை, சிலாவத்தை, கள்ளப்பாடு தெற்கு, கள்ளப்பாடு வடக்கு, செல்வபுரம், வண்ணாங்குளம், மணற்குடியிருப்பு, கோயில் குடியிருப்பு முல்லைத்தீவு நகரம், வட்டுவாகல் போன்ற நகரங்கள் வெள்ளத்தால் பாதிப்புக்குள்ளாக நேரிடும் என்பதுடன் முல்லைத்தீவு நகரை அண்டியுள்ள பகுதியில் சுமார் 240 ஏக்கருக்கும் கூடுதலான காணிகளில் பயிரிடப்படுகின்ற நெற்செய்கைகடும்பாதிப்புக்குள்ளாகும்.

ஆகவே இத்தகைய சட்ட விரோதச் செயல்கள் தடுத்து நிறுத்தப்பட வேண்டும் என்று அந்தப் பகுதியைச் சேர்ந்த கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் உள்ளிட்ட பொது அமைப்புக்கள் என்னிடம் முறைப்பாடுசெய்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாக மேற்படி கிராமங்களின் பொது அமைப்பினர் அரச அதிகாரிகளிடமும் முறையிட்டுள்ளனர். அரச உத்தியோகத்தர்கள் இந்த விடயம் தொடர்பாக காவல் துறையினரிடம் முறையிட்டும் இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று தெரியவருகின்றது.

வெள்ள அனர்த்தம், சூழல் மாசுபாடு மற்றும் வாழ்வாதாரப் பாதிப்புக்களை முன்கூட்டியே உணர்ந்து அவற்றைச் சரிசெய்வதற்குப் பொறுப்பான அரச உத்தியோகத்தர்கள் மேற்படி நபரின் விடயத்தில் ஏதும் செய்ய முடியாதவர்களாக இருக்கின்றனர். இவருக்குப் பின்னால் ஒரு அமைச்சர் இருப்பதாகத் தெரியவருகின்றது.

எது எப்படி இருப்பினும் சூழல் மாசடைவதையும் மனிதத் தவறால் வெள்ள அனர்த்தம் ஏற்படுவதையும் மீள்குடியேறிய மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதையும் எக் காரணம் கொண்டும் அனுமதிக்க முடியாது என்று தெரிவித்துள்ளார். (எ)

# முல்லைத்தீவு மக்கள் பயன்பெற சுதேச மருத்துவ நடமாடும் சேவை

துணுக்காய், நவ.4

வடமாகாண சுதேச ஆயுள்வேத திணைக்களம் முல்லைத்தீவு மாவட்டத்தில் சுதேச மருத்துவ நடமாடும் சேவையை நடத்தி வருகின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் பல பிரதேசங்களில் இடம் பெற்று வரும் இந்த நடமாடும் மருத்துவ சேவையானது துணுக்காய் பிரதேசசபை வளாகத்தில் பிரதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணி தொடக்கம் முற்பகல் 10.30 மணிவரையும் மல்லாவி யோகபுரத்தில் முற்பகல் 10.30 மணியிலிருந்து மதியம் 12.30 மணிவரையும் ஒட்டுசுட்டான் பிரதேச சபையின் வளாகத்தில் பிரதி வியாழக்கிழமைகளிலும் நடைபெறுகிறது.

அத்துடன் பாரதி முன்பள்ளி மூவேந்தர் முன்பள்ளி மாணவர்களுக்குப் போசாக்கு உணவுகள் இந்தத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

நடமாடும் வைத்தியத்தின் மூலம் வயோதிபர்கள், சிறுவர்கள் எனப் பெரும்பாலான மக்கள் பயன்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (எ-415)

# மழை நீரைச் சூடாக்கிப் பருகும் பரிதாபத்தில் பூநகரி மக்கள்

பூநகரி, நவ.2

குடிதண்ணீருக்காக அலைந்து திரியும் பூநகரிப் பிரதேச மக்கள் மழைகாலம் ஆரம்பித்துள்ள நிலையில் கூரை வழியே வழிந்தோடும் மழை நீரைச் சேகரித்து அடுப்பில் சுடவைத்து பருகும் பரிதாப நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

அடிப்படை வசதிகள் அனைத்தும் வழங்கப்படும் என்று கூறி சொந்த இடங்களில் மீளக்குடியமர்வு செய்யப்பட்ட பூநகரிப் பிரதேச மக்கள் அத்தியாவசியமாகத் தேவைப்படும் குடிதண்ணீர் கிடைக்காமல் அலைந்து திரிகின்றனர்.

பூநகரிப் பிரதேச சபையால் இரு தினங்களுக்கு ஒரு தடவை மட்டுப்படுத்தப்பட்ட அளவில் குடிதண்ணீர் வழங்கப்பட்டு வருகின்றது. சபையால் வழங்கப்படும் குடிதண்ணீர் சமையல் உட்பட அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாமல் இருப்பதால் நல்ல தண்ணீர் கிணற்றினைத் தேடி பல மைல் தூரம் அலைந்து திரிகின்றார்கள்.

குடிதண்ணீருக்காக அலைந்து திரியும் மக்களுக்கு மழை காலம் ஒரு வரப்பிரசாதமாக அமைந்திருக்கின்றது. அரசால் வழங்கப்பட்ட கூரைத் தகடுகளைப் பயன்படுத்தி குடிசைகளை அமைத்து வாழும் மக் கள் மழை பெய்யும் போது கூரை வழியே வழிந் தோடி வரும் மழை நீரைச் சேகரித்து வடிகட்டி சூடாக்கி பாவித்து வருகின்றனர். (எ)



கிளிநொச்சி மகாதேவா சைவச்சிறார் இல்லத்தில் இடம்பெற்ற முப்பெரும் விழாவில் மகாதேவா சைவச் சிறார் இல்ல மாணவி விருந்தினர்களை வரவேற்று நடனம் ஆடுவதை படத்தில் காணலாம். (302)

# ஆசிய அபிவிருத்தி வங்கி குழுவினர் வருகை

கிளிநொச்சி, நவ.4

கிளிநொச்சி இரணைமடுக்குள அபிவிருத்தி மற்றும் உட்கட்டுமான அழிவுகளைப் பார்வையிட ஆசிய அபிவிருத்தி வங்கிக் குழு எதிர்வரும் 7 ஆம் திகதி திங்கட்கிழமை கிளிநொச்சி வருகிறது.

தேசிய நீர்வழங்கல் வடி காலமைப்புச் சபையின் யாழ்.கிளிநொச்சி திட்டப் பணிப்பாளர் எந்திரி தி.பாரதிதாசன் இதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளார்.

அன்றைய தினம் கிளிநொச்சி அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் தலைமையில் இரணைமடு உட்கட்டுமானமேல்தள, கீழ்த்தள அபிவிருத்தி குறித்து விரிவாக ஆராயப்படும்.

தொடர்ந்துவெளிக்களவேலைத் திட்ட பார்வையிடலின் கீழ் பளையில் அமையவுள்ள சுத்திகரிப்பு ஆலை பார்வையிட்டு அறிக்கையிடப்படும். அதனைத் தொடர்ந்து மறுநாள் 8 ஆம் திகதி யாழ்.மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தலைமையில் ஆசிய அபிவிருத்தி வங்கி மிசன் குழுவுடன் விரிவான கூட்டம் இடம்பெறும்.

மறுநாள் 9 ஆம் திகதி வலி.தென்மேற்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கல்லுண்டாய் கழிவகற்றும் திட்டம் மற்றும் அரச அலுவலர் விடுதி அமைத்தலுக்கான இடத் தெரிவு குறித்து ஆராயப்படும். (எ-302)

# புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர் கௌரவிப்பு

கிளிநொச்சி, நவ.4

முல்லைத்தீவு கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளில் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் வித்தியானந்தாக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

பிரதிக் கல்விப் பணிப்பாளர் ராஜ்குமார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மாணவர்களைக் கௌரவித்து சிறிதரன் எம்.பி. உரை நிகழ்த்துகையில் :

மாணவர்களுடைய நிலையான எதிர்காலத்தை கல்விச் செயற்பாடுகளே வழங்குகின்றன. எமது பெற் றோர்களிடமும், ஆசிரியர்களிடமும், மாணவர்களிடமும் ஒத்த மனப்பாங்கோடு சேர்ந்தியங்கு வதனால்த் தான் பிள்ளைகளா கிய நீங்கள் பாடப்பரீட்சைகளில் வெற்றிகளைப் பெறுகிறீர்கள்.

இங்கு வெற்றி பெற்றிருக்கிறவர்கள் மாத்திரமன்றி உங்களோடு சேர்ந்து கற்கின்ற எல்லாப் பிள்ளைகளும் பல்கலைக்கழகங்களில் பட்டங்களைப் பெற்று வெளியேறுகின்ற அந்த நாளே உங்கள் வாழ்க்கையையே மகிமைப்படுத்தப் போகின்ற நாள் என்றார். (எ-426)

# கற்சிலைமடு முன்பள்ளிச் சிறார்கள் கல்விக்கு உதவுமாறு கோருகின்றனர்

முல்லைத்தீவு, நவ.2

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் உள்ள கற்சிலைமடு பண்டார வன்னியன் முன்பள்ளிச் சிறார்கள் எவ்வித அடிப்படை வசதிகளும் அற்ற நிலையில் கல்வி கற்று வருவதாகத் தெரிவிக்கின்றனர்.

கடந்த காலத்தில் இடம் பெற்ற யுத்தத்தில் இந்தக் கட்டடம் முற்றாக அழி வடைந்ததால் கற்சிலைமடு கிராம அபிவிருத்திச் சங்கக் கட்டடத்தில் முன்பள்ளிச் சிறார்கள் தட்டாந்தரையில் உட்கார்ந்து கல்வி கற்பதாகத் தெரிவிக்கின்றனர்.

இந்த முன்பள்ளியில் 25 சிறார்கள் கல்வி கற்று வருவதால் இவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் கூட இல்லாமல் கல்வி கற்று வருகின்றனர்.

ஆகவே இந்தச் சிறார்களின் கல்வி நடவடிக்கைகளைக் கருத்தில் கொண்டு அரச அரசசார் பற்ற தொண்டு நிறுவனங்கள் உதவ முன்வரவேண்டும்என்று கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-500)

# வவுனியா பொது வைத்தியசாலைக்கு பெருமளவில் நோயாளிகள் வருகை

வவுனியா பொது வைத்திய சாலைக்கு தற்போது வழமைக்கு மாறாக பெருமளவிலான நோயாளர்கள் சிகிச்சை பெற வருகை தருவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மாதாந்த சிகிச்சை பெறுவதற்காக வவுனியாவைச் சேரந்த நோயாளர் உட்பட மதவாச்சி, கெப்பிற்றிகொல்லாவ போன்ற தென் பகுதிகளைச் சேர்ந்த நோயாளர்களும் வவுனியா பொது வைத்தியசாலைக்கு வரத் தொடங்கியுள்ளதால் நெருக்கடி நிலைமை காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.இதேவளை நீரிழிவு, உயர் இரத்த அழுத்த நோயாளிகளுக்கு வழங்கப்படும் 15 இற்கும் மேற்பட்ட மருந்து கள் சில மாதகாலமாக வைத்தியசாலைகளில் இல்லாததால் அவற்றை தனியார் கடைகளில் வாங்குமாறு அதிகாரிகள் தெரிவித்து வருகின்றனர்.(எ)

# உலக உளநல தினம் கிளிநொச்சியில் நடைபெற்றது

உலக உளநல தினம் அண்மையில் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையின் பிரதான மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கிளிநொச்சி அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் சிறப்பு விருந்தினராக வடமாகாண திட்டமிடல் அமைச்சின் செயலாளர் இ.இராச[illegible], மருத்துவ கலாநிதி பி.கார்த்திகேயன், வேள்ட் விசன் திட்ட முகாமையாளர் கீர்த் தல்தசார் ஆகியோரும் கலந்துகொண்டனர். (எ-121)

# ஒட்டுசுட்டான் அறநெறிப் பாடசாலை செயலிழந்துள்ளது

முல்லைத்தீவு, நவ.4

ஒட்டுசுட்டான் பிரதேசத் தில் நடை பெற்று வந்த அறநெறிப் பாடசாலையின் செயற்பாடுகள் செயலிழந்து இருப்பதால் அதனை மீண்டும் இயக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஆவன செய்யுமாறு அந்தப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்தப் பாடசாலையை மீண்டும் ஆரம் பித்து தகுதிகாண் ஆசிரியர்களை நியமித்து மாணவர்களின் கற்றல் செய்பாடுகளை ஊக்குவிக்குமாறு மக்கள் தெரிவிக்கின்றனர்.

மீண்டும் இந்தப் பாசாலை இயங்க முடியாத நிலை காணப் படுமேயானால் இந்தப் பகுதி மாணவர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகக் காணப்படும் எனக் கவலை தெரிவிக்கின்ற னர். (எ-500)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7 பில்லியன் மக்கள் தொகையில் நீங்கள் எத்தனையாவது நபர் என்பதை அறிய

உலக மக்கள்தொகையானது ஏழு பில்லியனை நெருங் கியுள்ளது. இந்தநிலையில் 7 பில்லியனில் நீங்கள் எத்தனையாவது நபர் என்பதை அறிவதற்காக பி.பி.சி. இணையத் தளம் இணைப்பொன்றை உருவாக்கியுள்ளது.

பிறந்த திகதி, மாதம் மற்றும் வருடத்தை கொடுத்ததும் உங்களுக்கான இலக்கத்தைத் தருகிறது அந்த இணைப்பு.

ஐக்கிய நாடுகள் சபையின் சனத்தொகை நிதியத்தின் தரவுகளை வைத்து இவற்றை கணிப்பதாக சொல்கிறார்கள்.

மேலும் Global Footprint Network, International Telecommunications Union போன்றவற்றின் தரவுகளும் இதில் பயன்படுத்தப்பட்டதாம். http://www.bbc.co.uk/news/world-15391515 என்னும் இணையத்தளத்துக்குச் செல்வதன் மூலம் உங்களின் இலக்கத்தை அறிய முடியும்

# தீவிரவாதிகளை குறிபார்த்து தாக்கும் ரோபோக்கள் கண்டுபிடிப்பு



தீவிரவாதிகளை துப்பாக்கியால் சுட்டுக் கொல்லும் ரோபோக்களையும், வெடிகுண்டுகளை செயல் இழக்கச் செய்யும் ரோபோக்களையும் புனே விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். ராணுவத்துக்குத் தேவையான ஆயுதங்கள், ஏவுகணைகள், போர் விமானங்களை உள்நாட்டு தொழில்நுட்பத்தில் இந்திய ராணுவ ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையம் தயாரித்துக் கொடுத்து வருகிறது.

இந்த நிலையத்தின் ஒரு பிரிவான ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு பொறியியல் அமைப்பு புனேயில் செயற்பட்டு வருகிறது. இந்த அமைப்பைச் சேர்ந்த விஞ்ஞானிகள் 2 ரோபோக்களைக் கண்டுபிடித்துள்ளனர்.

ஒரு ரோபோ தனது தலையில் பொருத்தப்பட்டுள்ள துப்பாக்கியால் தீவிரவாதிகளைச் சுட்டுக் கொல்லும் திறன் படைத்தது. சிறிய ரக துப்பாக்கி மற்றும் சிறிய ரக ஆயுதங்களைப் பயன்படுத்தும் வகையில் இந்த ரோபோ உருவாக்கப்பட்டு உள்ளது. கையெறி குண்டுகளை வீசக்கூடிய திறனும் இதற்கு உள்ளது. இரண்டாவது ரோபோ வெடிகுண்டுகளை செயல் இழக்க செய்யும் ஆற்றல் கொண்டது.

இந்த ரோபோக்களின் சோதனைகளும் முடிந்து விட்டன. அவற்றைத் தயாரிக்கும் பணி விரைவில் ஆரம்பமாகும். இந்த ரோபோக்களை வாங்குவதற்கு ராணுவம், துணை ராணுவம் மற்றும் தேசிய பாதுகாப்புப் படைகள் ஆர்வம் காட்டியுள்ளன என்று புனே அமைப்பின் இயக்குனர் குருபிரசாத் கூறினார்.

தீவிரவாதிகள் பெரும்பாலும் பதுங்கியிருந்து தாக்குதல் நடத்துகின்றனர். அதுபோன்ற நேரங்களில் ராணுவத்தினர்கள் பதிலடி கொடுக்கும் போது உயிர் இழப்புகள் ஏற்படுகின்றன. இந்த ரோபோக் களைப் பயன்படுத்தினால் தீவிரவாதிகளைத் தேடிச் சென்று கொல்வதுடன் ராணுவத்துக்கு உயிர் இழப்பு ஏற்படுவதும் தவிர்க்கப்படும் என விஞ்ஞானிகள் கூறினர்.

# உங்களுக்குப் பிடித்தமான பாடல் வரிகளைத் தேடுவதற்கான தளம்




பனியில்லாத மார்கழியா என்பது போல பாடல் வரியை பகிர்ந்து கொள்ளாதவர் எல்லாம் ஒரு பேஸ்புக் பயனாளியா என்று கேட்கிறது மியூசிக்கோ இணையதளம். லிரிக்ஸ் ஸ்டேடஸ் இணைய சேவைக்கான அறிமுகத்தில் தான் இந்தத்தளம் இப்படி குறிப்பிடுகிறது. அடிப்படையில் லிரிக்ஸ் ஸ்டேடஸ் பாடல் வரிகளுக்கான தேடியந்திரம். ஆனால் பேஸ்புக்கை மையமாக கொண்டது. இதில் வரிகளை தேடலாம், தேடிய கையோடு பேஸ்புக்கில் அதனைப் பகிர்ந்து கொள்ளலாம். பேஸ்புக்கில் அப்போதைய மன நிலையைப் பகிர்ந்து கொள்ளும்போது எப்படி உணர்கிறோம் என்பதை இசை மயமாக உணர்த்த நினைப்பவர்களுக்கானது இந்தச் சேவை.

அப்படி செய்யும் வழக்கம் இல்லாதவர்களும் இருக்கின்றனரா என்ன? (இதுவும் மியுசிக்கோவில் வரும் குறிப்பு) யோசித்துப் பார்த்தால் எல்லாமே இசை மயமானதுதான். சந்தோஷமாக இருக்கும் போது நாம் அதற்கேற்ற பாடலை முணுமுணுப்பது இல்லையா? அதே போல ஒவ்வொரு மன நிலைக்கேற்ற பாடல்களையும் பாடுவது இல்லையா? என்ன சூழ்நிலைக்குத்தான் தமிழில் பாடல்கள் இல்லை? எந்த மன நிலையில் இருந்தாலும் சினிமாப் பாடல்களைப் பாடி மனதை வெளிப்படுத்திக் கொள்ளலாம். இதேபோலவே பேஸ்புக்கிலும் மனதில் உள்ளதை சில நேரங்களில் பாடல் வரிகளாகவே வெளிப்படுத்தலாம் அல்லவா?

மகிழ்ச்சியை வெளிப்படுத்த "இன்றைக்கு ஏன் இந்த ஆனந்தமோ என்ற வரிகளை போடுவது" இசை மயமாகத் தானே இருக்கும். ஆனால் இதில் உள்ள ஒரே சிக்கல் பாடல் வரிகளை பிழையில்லாமல் சரியாக மேற்கோள் காட்டுவது தான். வார்த்தைகள் மாறிவிட்டால் அர்த்தம் மாறிவிடலாம். நண்பர்களும் எள்ளி நகையாடுவார்கள்

இதுபோன்ற நேரங்களில் சரியான பாடல் வரிகளை தேடுவதற்காக என்றே லிரிக்ஸ் ஸ்டேடஸ்தளம் உருவாக்கப்பட்டுள்ளது. மனதில் உள்ள பாடலை இந்த தேடியந்திரத்தில் டைப் செய்து தேடினால் அந்தப் பாடல் வரிகள் வருகின்றன. அதை அப்படியே கிளிக் செய்து பேஸ்புக்கில் பகிரலாம். தேவைப்பட்டால் முழு வரிகளையும் இணைக்கலாம். பாட்டு, பாடியவர் என்று இரண்டையுமே குறிப்பிட்டுத் தேடலாம். ஏற்கனவே தேடப்பட்ட வரிகளையும் அவற்றில் பிரபலமாக உள்ளவற்றையும் பார்க்கலாம். எல்லாவற்றுக்கும் தனியான பட்டியல் உள்ளது. நாமும் பாடல்களை சமர்ப்பிக்கலாம். எமக்கான பாடல்களைக் கோரலாம். பாடல் வரி தேடியந்திரங்களிலேயே மிகவும் வித்தியாசமானது. இணையத்தள முகவரி SITE:- http://www.lyricstatus.com/ என்பதாகும்.

# விண்டோஸ் கணினியை ஆப்பிள் கணினியாக மாற்றுவதற்கு

எம்மில் பலரும் விண்டோஸ் இயங்குதளம் தான் அதிகமாக பயன்படுத்துகிறோம். ஆனால் எம்மில் பலருக்கும் அப்பிள் கணினி மீது அதிக ஆர்வம் இருக்கும்

அதை எப்படியாவது பயன்படுத்த வேண்டும் என்ற ஆசையும் இருக்கும். அதில் உள்ள கிராபிக்ஸ் மற்றும் அதன் அனிமேஷன் இதற்கு முக்கியமான காரணமாக இருக்கலாம்.

நாம் விண்டோசின் இயல்பான தோற்றத்தை மிகவும் எளிதாக அப்பிளைப் போல மாற்றலாம். இதற்கு நாம் ஒரு மென்பொருளை நிறுவவேண்டும். பின்னர் கணினியை மறு தொடக்கம் செய்ய வேண்டும் அவ்வளவுதான். இந்த மென்பொருள் எமது கணினியை அப்படியே அப்பிள் கணினி போல தோற்றத்தில் மாற்றுகிறது மற்றும் MAC இல் உள்ள அனிமேஷனோடு வருகிறது.

குறிப்பிட்ட சுட்டியில் உள்ள மென்பொருளை பதிவிறக்கிக் கொள்ளுங்கள். இதனை சாதாரணமாக ஏனைய மென்பொருள்கள் நிறுவுவது போல நிறுவுங்கள். பின்னர் உங்கள் கணினியைப் பாருங்கள். இதில் 4 வகையான தீம் இருக்கிறது. அதில் நீங்கள் உங்கள் விருப்பத்தைப் போல் தெரிவு செய்யுங்கள்.

இதனைப் பெறுவதற்கு உங்கள் டெஸ்க்டொப்பில் வலது கிளிக் செய்து அதில் PERSONALIZE என்பதை தெரிவு செய்யுங்கள். அதில் INSTALLED THEMES என்ற பிரிவில் உங்களுக்குப் பிடித்த தீம்சை தேர்வு செய்யுங்கள். MAC OSX LION என்ற மென்பொருளைத் தரவிறக்கி நிறுவிக் கொண்டால் இதற்கான பயனைப் பெற முடியும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதி புனரமைக்க வந்த பணத்தில் அதிகாரிக்கு வீடு அட்டாளைச் சேனைப் பாதைகளோ தண்ணீரில்

## பிரதேசசபை உறுப்பினர் குற்றச்சாட்டு

அட்டாளைச்சேனை, நவ.4

வெள்ளத்தால் சேதமடைந்த வீதிகளைப் புனரமைப்பதற்காக அரசால் வழங்கப்பட்ட நிதியை மோசடிசெய்து, அதனைப் பயன்படுத்தி தனது காணிகளினூடாக வீதிகளை அட்டாளைச் சேனைப் பிரதேச செயலகத்தின் முக்கிய உறுப்பினர் அமைத்துள்ளார். ஆனால், அட்டாளைச்சேனைப் பிரதேசத்தில் கடந்த வெள்ளத்தின்போது சேதமடைந்த பல வீதிகள் இன்னும் புனரமைக்கப்படாமல் உள்ளன.

- இவ்வாறு அட்டாளைச் சேனைப் பிரதேசசபை உறுப்பினர் எஸ்.எல். முனாஸ் குற்றம் சாட்டியுள்ளார்.

அட்டாளைச்சேனைப் பிரதேசசபையின் மாதாந்த அமர்வு, சபையின் தவிசாளர் ஏ.எல். எம்.நசீர் தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை சபை அலுவலகக் கட்டடத்தில் இடம்பெற்றது. இந்த அமர்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

அட்டாளைச்சேனைப் பிரதேசத்தில் கடந்த வெள்ளத்தின் போது சேதமடைந்த வீதிகளைப் புனரமைக்கும் பொருட்டு 'வேலைக்கான பணம்' திட்டத்தின் கீழ் அட்டாளைச் சேனைப் பிரதேச செயலகத்துக்கு அரசு 30 லட்சம் ரூபாவை வழங்கியது.

ஆனால், கடந்த வெள்ளத்தின்போது இந்தப் பிரதேசத்தில் சேதமடைந்தும், வெள்ள நீரை வெளியேற்றுவதற்காக அகழப்பட்ட பல வீதிகள் இன்னும் புனரமைக்கப்படாமல் காணப்படுகின்றன.

இது தொடர்பாக, பிரதேச செயலாளரைச் சந்தித்து சேதமடைந்துள்ள வீதிகளைப் புனரமைத்துத்தருமாறு பல தடவை வேண்டுகோள் விடுத்துள்ளேன். செய்து தரப்படும் என்று அவர் வாக்குறுதியளித்திருந்தார். இருந்த போதும், தற்போது மழை காலம் ஆரம்பமாகியுள்ள நிலையில், இன்னும் இந்த வீதிகள் புனரமைக்கப்படவில்லை.

இந்தநிலையில், அட்டாளைச் சேனைப் பிரதேசத்தில் சேதமடைந்த வீதிகளைப் புனரமைப்பதற்காக அரசால் வழங்கப்பட்ட பணத்திலிருந்து பிரதேச செயலகத்தின் முக்கிய உறுப்பினரொருவர் சம்புநகர் பகுதியிலுள்ள தனது காணியினுள் புதிதாக வீதிகளை அமைத்துள்ளார். இது அநியாயமும், அதிகார துஷ்பிரயோகமுமாகும்.

இவ்வாறு ஈடுபடும்போது, அவற்றை வெறுமனே நாம் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. மக்களுக்குச் சேவை செய்யவும், இவ்வாறான அதிகாரிகளைக் கண்காணிப்பதற்காகவுமே மக்கள் நம்மைத் தேர்வு செய்து இந்தச் சபைக்கு அனுப்பி வைத்துள்ளனர். எனவே, மக்களின் நம்பிக்கையை நாம் காப்பாற்றவேண்டும்.

இதேவேளை, கடந்த வெள்ளத்தின்போது உண்மையாகப் பாதிக்கப்பட்ட பலருக்கு பிரதேச செயலகத்தால் இழப்பீடுகள் எவையும் வழங்கப்படவில்லை. மாறாக, சிலரின் வளவுகளில் அமைக்கப்பட்டிருந்த கோழிக்கூடுகளை குடிசை வீடுகள் எனப் பதிவு செய்து, அவற்றுக்கும் வெள்ள இழப்பீட்டை இந்தப் பிரதேச செயலகத்தினர் வழங்கியுள்ளனர். இவ்வாறான அநியாயங்களையெல்லாம் வெறுமனே பார்த்துக்கொண்டிருப்பதற்காக நாம் இந்தச் சபைக்கு வரவில்லை.

எனவே, அட்டாளைச்சேனைப் பிரதேச செயலகத்தில் நடைபெறும் இவ்வாறான மோசடிகள் குறித்து மக்கள் பிரதிநிதிகளாகிய நாம் கண்காணிப்புடன் இருக்கவேண்டும்- என்றார். (ச)

## வீட்டில் வெளிநாட்டுத் துப்பாக்கி மீட்பு

கண்டி,நவ.4

கண்டி, அலவத்துகொடை புங்கொல்லாமட பிரதேசத்திலுள்ள வீடொன்றிலிருந்து கடந்த செவ்வாய்க்கிழமை பொலிஸார் துப்பாக்கியொன்றைக் கைப்பற்றியுள்ளனர்.

பொலிஸார் மேற்கொண்ட விசேட சோதனை நடவடிக்கையின் போதே துப்பாக்கி கைப்பற்றப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட "யு.எஸ்.ஏ. ஸ்ரான்டர்ட்" ரகத்தைச் சேர்ந்த துப்பாக்கியே கைப்பற்றப்பட்டுள்ளது. கைப்பற்றப்பட்ட இந்த துப்பாக்கி நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்படவுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச)

## சிறையிலிருந்து தப்பியோடியவர் அவிசாவளையில் கைது

அவிசாவளை, நவ.4

சிறைத்தண்டனை அனுபவித்துக்கொண்டு இருக்கும் போது சிறையிலிருந்து தப்பி வந்து தலை மறைவாக இருந்த கைதியொருவரை கைது செய்த அவிசாவளைப் பொலிஸார் அவரை அவிசாவளை நீதிமன்றில் ஆஜர் செய்தபோது எதிர் வரும் 8 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

கெட்டதென்ன, நாபாவல பிரதேசவாசியான நளின் ரோஷன என்பவருக்கே இந்த விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

அவிசாவளை தலைமையக பொலிஸ் பொறுப்பதிகாரி அஷோக குமார பணிப்பின் கீழ் சென்ற விசேட பொலிஸ் குழுவே இவரைக் கைது செய்துள்ளது. (ச)

## கடலில் தவறி வீழ்ந்தவரின் சடலம் கரை ஒதுங்கியது

அக்கரைப்பற்று,நவ.4

அக்கரைப்பற்று - பொத்துவில் பிரதான வீதியின் சின்ன முகத்துவார பாலத்தடியில் மீன் பிடித்துக்கொண்டிருந்த நபரொருவர் கடலில் தவறி வீழ்ந்து காணாமல்போன நிலையில் நேற்று வியாழக்கிழமை காலை அவரது சடலம் கரையொதுங்கியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அக்கரைப்பற்று, ஐந்தாம் பிரிவு பொது வீதிப் பிரதேசத்தினைச் சேர்ந்த முகம்மது ராசீக் முகம்மது பைரூஸ் (வயது 35) என்பவரே இவ்வாறு காணாமல் போயுள்ளார்.

இந்தநபர் நேற்றுமுன்தினம் புதன்கிழமை மாலை பாலத்தடியில் வீச்சு வலை மூலம் மீன் பிடித்துக்கொண்டிருந்தபோது வலை சிக்கியதாகவும் அதனை இழுக்க முற்பட்டபோது இவர் கடலில் தவறிவிழுந்து அலையினால் அடித்துச் செல்லப் பட்டு காணாமல் போனதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவரது சடலத்தை மீட்கும் நடவடிக்கையில் பொலிஸாரும் பொதுமக்களும் இணைந்து மேற்கொண்டிருந்த நிலையிலேயே இந்தச் சடலம் நேற்று வியாழக்கிழமை கரையொதுங்கியது என்று தெரிவிக்கப்படுகின்றது.

சடலத்தை அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ச)



கல்முனை மாநகர முதல்வர் சிராஸ் மீராசாஹிப் நேற்று முன்தினம் புதன்கிழமை கல்முனையிலுள்ள தமிழ்க் கிராமங்களுக்குச் சென்று மக்களின் குறைகளைக் கேட்டறிந்தார்.

## தொழிற்சாலை நிர்வாகிக்கு தொடர்ந்து விளக்கமறியல்

### சம்பளம் வழங்க மறுத்த விவகாரம்

பொகவந்தலாவை, நவ.4

ஹற்றன் - டிக்கோயா ஆடைத் தொழிற்சாலையில் ஊழியர்களுக்கு சம்பளம் வழங்கப்படாமை தொடர்பில் தொழிற்சாலையின் நிர்வாகியான நாலனி செனவிரத்ன என்ற பெண்ணை எதிர்வரும் 7 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு ஹற்றன் நீதிவான் சந்துன் விதாரண உத்தரவிட்டுள்ளார்.

ஊழியர்களுக்கு சம்பளம் வழங்கப் படாமை தொடர்பில் ஹற்றன் நீதிமன்றில் கடந்த 17 ஆம் திகதி ஆஜர்செய்யப்பட்ட இந்தத் தொழிற்சாலையின் நிர்வாகியான பெண்ணை இந்த மாதம் முதலாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டிருந்தார்.

எனினும், ஆடைத் தொழிற்சாலையில் பணிபுரிகின்ற ஊழியர்களுக்கு தொடர்ந்து சம்பளத்தை வழங்காத காரணத்தினால் கடந்த செவ்வாய்க்கிழமை நீதிமன்றில் மீண்டும் ஆஜர்செய்யப்பட்டவர் எதிர் வரும் 7 ஆம் திகதி வரை தொடர்ந்து விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

ஊழியர்களுக்கு சம்பளம் வழங்கப்படாமை குறித்து ஹற்றன் தொழில் திணைக்களத்திலும், பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்தே ஆடைத்தொழிற்சாலையின் நிர்வாகத்திற்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## சிசுவை ஆற்றில் வீசிவிட்டுச் சென்ற தாய் கைது

கண்டி,நவ.4

கண்டி, அக்குறணைப் பகுதியில் குழந்தையைப் பிரசவித்து அது இறந்த நிலையில் ஆற்றில் வீசிவிட்டுச்சென்ற தாயை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

இந்தப் பெண் கட்டுகஸ்தோட்ட பொலிஸாரால் கடந்த செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்ட தாய் நீதிமன்ற உத்தரவின் பேரில் கண்டி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.(ச)

## புத்தபிக்கு வேடத்தில் சென்று சிறுமியை வன்புணர்வு செய்ய முயன்றவர் கைது

கண்டி, நவ.4

பிக்குவைப்போல் காவியுடையுடன் வீடொன்றுக்குச் சென்று அங்கிருந்த 13 வயதுச் சிறுமியை வன்புணர்வு செய்ய முயன்ற நபரொருவர் பேராதனை பொலிஸாரால் கைது செய்யப்பட்டு கண்டி நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட பின்னர் விளக்கமறியல் வைக்கப்பட்டார்.

சந்தேகநபர் விகாரையொன்றில் தர்மசாலை கட்டுவதற்கென வீடுவீடாகச் சென்று பணம் சேகரிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார். சம்பவதினம் குறிப்பிட்ட வீட்டுக்கும் அதேபாணியில் சென்றவர் யுவதியை வன்புணர்வு செய்ய முயற்சித்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

இவர் மாத்தளை பிரதேசத்திலுள்ள விகாரையைச் சேர்ந்தவர் என்று பொலிஸாருக்கு கொடுத்த தகவலும் பொய் என்று நிரூபிக்கப்பட்டுள்ளது.

பேராதனை பொலிஸ் பொறுப்பதிகாரி ஜாலிய ஹீன்கெந்த தலைமையில் மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. (ச)

## அலவத்துகொடையில் கஞ்சாவுடன் ஆறுபேர் கைது

கண்டி, நவ.4

கண்டி, அலவத்துகொடை பிரதேசத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை வர்த்தக நோக்கத்திற்காக வந்திருந்த ஆறுபேர் கஞ்சா போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சம்பவதினம் காலை பொலிஸார் நடத்திய விசேட சோதனை நடவடிக்கையின்போதே இவர்கள் கைதுசெய்யப்பட்டனர் என்று அலவத்துகொடை பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இவர்கள் குருநாகல் - நாரம்மலை பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது. கைதுசெய்யப்பட்டவர்களை கண்டி நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேஷம்:**
உங்களின் முயற்சிகளுக்கு நண்பர்கள் உறுதுணையாக இருப்பர். உங்களின் வேலை ஒன்றை மற்றொருவர் மூலம் முடிப்பீர்கள். தொழில் ரீதியான விடயங்களில், தந்திரமாகச் செயற்படுவதன் மூலம் கூடுதல் ஆதாயம் பெறுவீர்கள். கணவன், மனைவி இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். சக ஊழியர்கள் விடுமுறையால் வேலைப்பளு அதிகரிக்கும்.

**இடபம்:**
உடன் பிறந்தவர்கள் நலனில் அக்கறை காட்டுவீர்கள். விமர்சனங்களைப் பற்றி கவலைப்படாமல், எதிலும் துணிச்சலாகச் செயற்படுவீர்கள். நீங்கள் ஒன்றை எதிர்பார்க்க, நடப்பது அதற்கு ஏட்டிக்குப் போட்டியாக அமையலாம். உங்களுக்கு வேண்டிய ஒருவருக்காக மற்றவர்களிடம் உதவி கேட்கலாம். வயிறு, வாயு உபாதைகளுக்கு ஆள்படலாம்.

**மிதுனம்:**
உங்களிடம் உதவி பெற்ற உறவினர்களே உங்களை விமர்சனம் செய்யலாம். புதிய முயற்சிகளைத் தவிர்க்க வேண்டிய நாள். ஆதாயமில்லாத வேலைகளில் ஈடுபடலாம். சில பொருள்களை அதிக விலை கொடுத்து வாங்கி விட்டு, பின்னர் மன வருத்தம் அடைவீர்கள். வெளியில் எங்காவது செல்லும்போது, வாகனங்கள் பழுதாகி தொந்தரவு கொடுக்கலாம்.

**கடகம்:**
புத்துணர்ச்சி, புதுத்தெம்புடன் செயற்படுவீர்கள். ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளில் பணவரவுகளைப் பெறலாம். அரசியல்வாதிகள் தேவையற்ற செலவுகளைச் செய்யலாம். குடும்பத்துடன் சிலர் வெளியிடங்களுக்குச் செல்லும் வாய்ப்பு உண்டு. பெண்கள் பிறந்த வீட்டின் உதவிகளைப் பெறலாம். சுகமான இனிய அனுபவம் பெறலாம்.

**சிங்கம்:**
சிக்கலான சில நபர்களிடமும் சாமர்த்தியமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள். நீண்டநாள்களாக தடைப்பட்டுக் கொண்டே வந்த காரியம் ஒன்று எளிதாக முடிவடையும். வியாபாரிகள் வாடிக்கையாளர்களைக் கவர புதிய அணுகுமுறையைப் பின்பற்றுவர். கடன் மிகுதி களைச் செலுத்துவீர்கள். தேக ஆரோக்கியம் தெம்பு, உற்சாகம் தரும்.

**கன்னி:**
மற்றவர்கள் வியக்கும் வகையில் துணிச்சலான முடிவுகளை எடுப்பீர்கள். உங்களின் மனக்குறை ஒன்றை மற்றவர்களிடம் சொல்வீர்கள். வெளியூர் பயணங்கள் விரும்பும் விதத்தில் அமையலாம். உத்தியோகஸ்தர்கள் மேலதிகாரிகள் இட்ட வேலைகளைச் செய்யாமல் அதிருப்திக்கு ஆளாகலாம். தெய்வ காரிய பிரார்த்தனைகள் நிறைவேறும்.

**துலாம்:**
போட்டிகள் இருந்தாலும், உங்களின் திறமைகள் வெளிப்படும். தாய் வழி உறவுகளால் ஆதாயம் பெறலாம். பொதுவாழ்வில் உள்ளோர் பரபரப்பாகச் செயற்படுவர். தொழிலில் புதிய அணுகுமுறையைப் பின்பற்ற முற்படுவீர்கள். சகஊழியர்கள் திடீர் விடுமுறையால் கடும் வேலை நெருக்கடிகளுக்கு ஆள்படலாம். கடன் மிகுதிகள் வசூலாகும்.

**விருச்சிகம்:**
கணவன், மனைவி இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். பெரிய மனிதர்களின் சந்திப்பு நிகழலாம். வெளியூர்களில் இருந்து முக்கியமான செய்திகளைக் கேட்கலாம். கடந்த காலத்தில் உதவி செய்த ஒருவருக்கு பதில் உதவி செய்வீர்கள். உங்களின் வேலை ஒன்றை மற்றவர்கள் மூலம் முடிப்பீர்கள். பணவரவுகளைப் பெறலாம்.


**தனுசு:**
அடுத்தவர் விவகாரங்களில் தலையிடாமல் ஒதுங்கி இருப்பது நன்மை தரும். பிள்ளைகள் வழியில் எதிர்பாராத வீண் செலவுகளைச் சந்திக்கலாம். சில வேலைகளை ஆர்ப்பாட்டம் இல்லாமல் அமைதியாக செய்து முடிப்பீர்கள். வீட்டைச் சீரமைப்பதில், அழகாக வைத்திருப்பதில் அக்கறை காட்டுவீர்கள். வாக்கு வாதங்களைத் தவிர்க்க வேண்டும்.

**மகரம்:**
கொள்கைப் பிடிப்புடன் செயற்படும் நாள். பொறுப்புகளால் வேலையில் கோபம், பதற்றம் உண்டாகலாம். கனவுகள் நனவாகலாம். மாமன், மைத்துனர்கள் மத்தியில் உங்களின் மதிப்பு, மரியாதை அதிகரிக்கும். ஒரு வகையில் ஏற்பட்ட செலவை மற்றொரு வகையில் வரும் பணவரவுகளால் சரிக்கட்டுவீர்கள். எதிர்பாராத உதவி கிடைக்கும்.

**கும்பம்:**
விருப்பு, வெறுப்பின்றி அனைவருக்கும் நல்ல பிள்ளையாக நடந்து கொள்ள முற்படுவீர்கள். மகிழ்ச்சி தரும் அல்லது சங்கடம் தரும் செய்தியைக் கேட்க லாம். பண விடயங்களில் சிலரிடம் கோபம், காட்டமாக நடந்து கொள்ளலாம். அரசியல்வாதிகளுக்கு செல்வாக்கு அதிகரிக்கும். சிலரைத் தொடர்பு கொண்டு பேச முற்பட்டு, அவர்கள் கிடைக்காமல் போகலாம்.

**மீனம்:**
மனைவி, குழந்தைகளின் சின்ன, சின்ன ஆசைகளை நிறைவேற்றுவீர்கள். வாங்கிய கடன் ஒன்றுக்கு வட்டி கட்டலாம். அயலாருடன் ஏற்பட்ட மனஸ்தாபம் தீர்ந்து அவர்களுடன் மனம் விட்டுப் பேசுவீர்கள். குறை சொல்லிக் கொண்டிருந்த நண்பர்கள் சிலர் உங்களைப் பாராட்டலாம். விருப்பமான உணவு வகைகளைச் சாப்பிடுவீர்கள்.

# எங்களுக்கேன் இந்த நிலை?



அந்தக் கட்டடத்துக்குள் நுழையும் போது எங்கோ ஒரு வதை முகாமுக்குள் நுழைகிறோமோ என்ற எண்ணம் ஏற்படுவதைத் தவிர்க்க முடியவில்லை. நிலம் முழுவதும் மொய்த்துக் கிடக்கும் இலையான்கள் எமக்கு வழிவிடுவதற்காக எழுந்து, பறந்த பின்னர் தமது இடம்தேடி மீண்டும் அமர்கின்றன. அவை ஒவ்வொன்றினதும் அளவே அங்கு அவற்றுக்கு எவ்வளவு ஊட்டச் சத்துக் கிடைக்கிறது என்பதை உறுதிப்படுத் துகின்றது. பின்னணியில் கேட்கும் குழந்தைகளில் அழுகையும் கதறலும் மனதை வதை செய்கிறது.

கைதடி அரச சிறுவர் இல்லத்துக்குள் நுழைகையில் அது இப்படித்தான் காட்சி தருகிறது. இங்கு பராமரிப்புக்காக விடப்பட்ட 46 நாள் குழந்தை ஒன்று பால் புரைக்கேறி நோய்வாய்ப்பட்டு, போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளது. அந்தக் குழந்தையின் தந்தை யார் என்று அறிவதற்காக மரபணுச் சோதனை (டி.என்.ஏ) செய்வதற்கு இரு நாள்கள் இருக்கையில் அந்தக் குந்தையின் சாவு நிகழ்ந்தது. இது பற்றிய விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், அந்தக் குழந்தை பராமரிக்கப்பட்ட கைதடி அரச சிறுவர் இல்லத்தின் மோசமான நிலையும் ஊடக வெளிச்சத்துக்குள் வந்துள்ளது.

''கைதடி அரச சிறுவர் இல்லத்தில் வைத்துப் பராமரிக்கப்பட்டுவரும் அநாதைக் குழந்தைகளுக்குப் போதிய சுகாதார வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை, குழந்தைகளைப் பராமரிப்பதற்குதேவையானளவு பராமரிப்பாளர்கள் நியமிக்கப்படவில்லை, இது சர்வதேச சட்ட விதிமுறைகளுக்கு முரணானது. வடமாகாண மேலதிகாரிகளின் அலட்சியப் போக்கே இந்த நிலைக்குக் காரணம்'' என்று குற்றச்சாட்டுக்கள் அடுக்கப்பட்டுக் கொண்டே செல்கின்றன.

பெற்றோர்களால் கைவிடப்பட்ட அல்லது பெற்றோர்களை இழந்த குழந்தைகளே இந்த இல்லத்தில் அதிக எண்ணிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இதுதவிர குற்றவாளி எனத் தீர்ப்பளிக்கப்பட்டவர் தாயாராக இருக்கும் பட்சத்திலும் தனது குழந்தையைப் பராமரிக்க அவருக்கு யாரும் இல்லை என்ற நிலையிலும் அத்தகைய குழந்தைகளும் இங்கு பராமரிக்கப்படுகின்றன.

### ஆளணி வசதி இல்லை

தற்போது இல்லத்தில் 30 குழந்தைகள் உள்ளன. அனைத்தும் ஒரு வயதுக்குட்பட்டவை. மூன்று வயதுடைய விசேட தேவையுடைய குழந்தை ஒன்றும் உள்ளது. சர்வதேச சட்ட விதிகளின்படி ஒரு பராமரிப்பாளர் இரண்டு குழந்தைகளையே பராமரிக்க முடியும். அதிகமானால் மூன்று குழந்தைகளை ஒருவர் பராமரிக்கலாம். ஆனால் இந்த அரச இல்லத்தில் பத்துக் குழந்தைகளை ஒரு பராமரிப்பாளர் பராமரித்து வருகிறார். 30 குழந்தை களுக்கும் ஒரே சமயத்தில் 3 பணியாளர் மட்டுமே இருக்கிறார்கள்.

இந்த ஆளணி வசதி அங்கு போதவே போதாது. ஒரு பணியாளர் 10 குழந்தைகளைப் பராமரிக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பதே மனிதாபிமானம் அற்ற செயல் என்கிறார் மருத்துவ நிபுணர் ஒருவர். அது உண்மை என்பதை இல்லத்துக்கு நேரில் வருகை தரும் எவரும் கண்களால் பார்க்க முடியும். ஒரு பணியாளர் ஒரு குழந்தைக்குப் பால் புகட்டி விட்டு வரிசையாக மற்றக் குழந்தைகளுக்கும் பால் புகட்டி எட்டாவது குழந்தையிடம் செல்வதற்கிடையில் முதல் குழந்தை மற்றொரு தேவைக்காக அழ ஆரம்பிக்கிறது. இப்படியே ஓடி, ஓடிக் கவனிக்க முடியாமல் பணியாளர்கள் விரைவி லேயே சோர்ந்து போய்விடு கிறார்கள்.

### ஈக்களின் ஆக்கிரமிப்பு

குழந்தைகள் தனித் தனித் தொட்டில்களில் போடப்பட்டுள்ளன. நுளம்பு, ஈக்களிலிருந்து பாதுகாக்க அவை நுளம்பு வலைகளால் மூடப்பட்டுள்ளன. ஆனால் எங்கும் ஈக்களுக்குக் குறைவில்லை. ஒவ்வொரு தொட் டிலிலும் அங்குள்ள மேசை, கதிரைகளிலும் நிறைந்திருக்கும் ஈக்களினால் அந்த மண்டபமே ஆக்கிரமிக்கப்பட்டதாகத் தோன்றுகிறது.

தொட்டில்கள் நுளம்பு வலைகளால் மூடப்பட்டிருக்கின்ற போதும் அவற்றால் குழந்தைகளை ஈக்களின் பெருமெடுப்பிலான தாக்குதலில் இருந்து காக்க முடியவில்லை.

குழந்தைகளுக்குப் பால் பருக்கும் பால் போத்தல்கள் மிகக் குறைந்தளவிலேயே காணப்படுகின்றன. ஒரு குழந்தைக்கு ஒரே பால்போத்தல் என்ற கொள்கை அங்கு இருக்கவில்லை. தாறுமாறாகவே பயன்டுத்தப்படுகிறது. இருப்பவற்றில் முடிந்தவரை சுகாதாரம் பேண ஊழியர்கள் முயற்சிக்கின்றார்கள்.

30 குழந்தைகளுக்கும் தனித்தனியே உடை களும் ஒதுக்கப்பட்டிருக்கவில்லை. அனைத்துக் குழந்தைகளுக்கும் அங்குள்ளஉடைகள் மாற்றி மாற்றி அணிவிக்கப்படுகின்றன. தொற்று நோய்ப் பரம்பலை இது அதிகமாக்கும் சாத்தியம் இருந்தா லும், இதுவரை அப்படி நடக்கவில்லை என்கின்றார்கள். கழுவிய உடைகள் பாதுகாப்பான முறையில் உலர விடப்படவில்லை. காயவிடப்பட்ட உடைகள் காற்றினால் ஆங்காங்கே அலைக்கழிக்கப்பட்ட பின்னர் நிலத்தில் போடப் படுகின்றன. அப்படியே எடுத்து மண்ணைத் தட்டி விட்டு அடுத்த தவணைக்காக அது காக்க வைக்கப் படுகின்றது.

### கழிவுநீர் தேங்கி சுகாதாரச் சீர்கேடு

''துன்பம் தான், துயரம் தான், ஆனாலும் என்ன செய்ய? இருப்பதைக் கொண்டு தானே சமாளிக்க வேண்டி இருக்கிறது'' என்று கையை விரிக்கிறார்கள் ஊழியர்கள். வசதிகளை யார் ஏற்படுத்தித் தரவேண் டும் என்று கேட்டால் 'அதிகாரிகள்' என்று சொல்லும் அவர்கள், அந்த அதிகாரிகளைச் சொல்ல மறுக்கின்றார்கள்.

கழிவு நீர் உரிய முறையில் வெளியேற்றப்படவில்லை என்பது இல்லத்தின் மற்றொரு குறைபாடு உள்ளே நுழைந்தவுடன் கழிவுநீர் தேங்கி நிற்பதனையே காணமுடிகிறது. அது மட்டுமன்றி சமையல் கழிவுப் பொருள்களும் வளாகத்தினுள் வீசப்பட்டுள்ளதைக் காணமுடிகின்றது. அவற்றுக்கு பூச்சியினங்களையே கொல்லும் சக்தி உண்டென்று அருகில் போய்ப் பார்த்தால் தெரிகிறது. குழந்தைகளின் சுகாதாரம் இவற்றால் கெடாதா என்றால் ? அது பற்றி யாரும் கவலைப்படுவதாகத் தெரியவில்லை.

அங்குள்ள கிணறு கம்பிவலையினால் மூடப்பட்டுள்ளது. அது இற்று சிதிலமாகித் தொங்கும் நிலையிலும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஒரு குருவிக்கு வாழ்வு கொடுத்துள்ளது.

கூடு இன்னும் கிணற்றினுள் தொங்கியபடியே கிடக்கிறது. அந்தக் கிணற்றுத் தண்ணீர் தான் குழந்தைகளின் தேவைக்குப் பயன்டுத்தப்படுகின்றது.

இல்லத்தில் உள்ள 30 குழந்தைகளையும் பராமரிக்க இரண்டு பேர் மாத்திரமே நிரந்தர நியமனம் பெற்ற ஊழியர்கள். 7 பேர் ஒரு வருடத்துக்கும் மேலாகத் தற்காலிகமாகக் பராமரிப்பு பணியில் சேர்க்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவதாகக் கூறி நேர்முகப் பரீட்சையும் வைக்கப்பட்டது; இன்று வரை நியமனம் வழங்கப்படவில்லை.

**'ஏசி' இல்லாத இடத்துக்கு அதிகாரிகள் வருவதில்லை**

இந்த 9 பேரும் 24 மணி நேரமும் சுழற்சி முறையில் 3 பேர் வீதம் பராமரிப்பில் ஈடுபட வேண்டிய அவலம் தொடர்கிறது. 'ஏசி' இல்லாத இந்த இடத்துக்கு உயர் அதிகாரிகள் அடிக்கடி வராததால் அவலங்கள் அதிகம் அவர்களை எட்டுவதில்லை. வெளி வேலைகளைக் கவனிக்க வென ஊழியர் ஒருவர் மாத்திரம் நியமிக்கப்பட் டுள்ளார்.

சுகாதாரச் சீர்கேடுகளும் வளப் பற்றாக்குறைகளும் நிலவுகின்றபோதும் அங்கு செல்லும் பொது சுகாதாரப் பரிசோதகர் இவற்றைச் சீர்செய்ய முயற்சி எடுத்திருக்கவில்லை. குழந்தைகளுக்கு மருத்துவ வசதிகள் சீராகக் கிடைக்கவும் ஏற்பாடுகள் ஏதும் இல்லை.

அண்மையில் இங்கு தங்க வைக்கப்பட்டிருந்த குழந்தை ஒன்று சுகவீனம் காரணமாக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் பின்னர் இறந்து விட்டது. இது சம்பந்தமான வழக்கு யாழ்.நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்பட்டது. அதன்போது அந்த இல்லத்துக்குச் சென்று சுகாதார வசதிகள் உள்ளிட்ட விடயங்களைப் பார்வையிட்டு மன்றுக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. யாழ்.போதனா வைத்தியசாலை சட்டவைத்திய அதிகாரி உள்ளிட்ட குழந்தை வைத்திய நிபுணர்கள் குழு வொன்று அண்மையில் கைதடி அரச சிறுவர் இல்லத்துக்கு நேரடியாகச் சென்று பார்வையிட்டது. அதுபற்றி நீதிமன்றுக்கு அறிக்கை சமர்ப்பித்திருந்தது.

**குழந்தைகளுக்கு கிருமித்தொற்று**

நிபுணர் குழு சென்றிருந்தபோது குழந்தை ஒன்று நோய்த் தொற்றுக்கு உள்ளாகி இருந்ததைக் கண்டறிந்தனர். அதற்கு முன் அதுபற்றி யாரும் அங்கு அக்கறை எடுத்திருக்கவில்லை. பராமரிப்பாளர் பற்றாக்குறையால் ஒவ்வொரு குழந்தையையும் நெருக்கமாகக் கண்காணிக்க முடியவில்லை என்கிறார்கள் ஊழியர்கள். இருக்கும் பராமரிப்பாளர்களுக்கு குழந்தைகளைப் பராமரிப்பது பற்றிய பயிற்சிகள் போதுமான தாக இல்லை என்பது மருத்துவ நிபுணர்களின் கருத்து. ஒரு பராமரிப்பாளரின் கையைப் பரிசோதித்த போது தொற்றுக்கிருமி காணப்பட்டது. குழந்தைகள் பராமரிக்கப்படும் மண்டபம் உரிய முறையில் சுத்தம் செய்யப்பட்டிருக்கவில்லை. தரை ஒட்டும் தன்மை யாகவே காணப்படுகிறது' என்றார் நேரில் சென்று பார்த்த மருத்துவர் ஒருவர்.

''இந்த அலுவலகத்துக்குள் மின்பிறப்பாக்கி வைக்கப்பட்டுள்ளது. மின் தடைப்படும்போது அது இயக்கப்பட அதன் சத்தம், வெளியிடும் புகை குழந்தைகளுக்குப் பாதிப்பை ஏற்படுத்துகிறது' என அவர் தொடர்கிறார்.

இந்த இல்லத்துக்கு அரசால் 'ஹயஸ்' வாகனம் ஒன்றும் அன்பளிப்பாக வழங்கப்பட்டதாகவும் ஆனால் இன்றுவரை அது இல்லத்துக்கு வந்து சேரவில்லை என்றும்கூட ஒரு தகவல் தெரிவிக்கப் படுகிறது. ஆனால் இதனை உறுதிப்படுத்த முடியவில்லை. அதிகாரிகள் எவரும் பதில் சொல்வதற்குத் தயாராக இல்லை.

இல்லத்தில் குழந்தைகளின் நிலை குறித்து நீதிமன்ற உத்தரவுக்கமைய அங்கு சென்று பார்வையிட்ட யாழ்.போதனா வைத்தியசாலை குழந்தை வைத்திய நிபுணர் திருமதி கீ.சத்தியதாஸ் இப்படி விவரிக்கிறார். *(22 ஆம் பக்கத் தொடர்ச்சி)*



# சிக்கனமும் கருமித்தனமும்



'சிக்கனமாயிரு; ஆனால் கருமியாக இருக்காதே... நபிகள் நாயகம் போதனைகளில் இதுவும் ஒன்று. ஒரு சமயம் பெருமான் நபிகள் நாயகம் அவர்களிடம் ஒரு பெரியவர் வந்து ''எங்கள் ஊரில் பள்ளிவாசல் இல்லை; அதை எப்படியும் கட்டியாகவேண்டும்; அதற்குப் பணம் தேவை', என்ன செய்யலாம் என்று யோசனை கேட்டார்.

அதுக்கு நபிகள் நாயகம் கூறினார்; ''பக்கத்து ஊரில் ஒரு செல்வந்தர் இருக்கிறார் என அவரின் பெயரைக் கூறி ''அவரிடம் போய் கேளுங்கள் கொடுப்பார் என்றார்''. உடனே அந்தப் பெரியவர் அடுத்த ஊருக்குப்போய் அந்தப் பணக்காரரைப் பார்த்தார். அவருக்குப் பெரும் அதிர்ச்சி! ஏன் தெரியுமா?

இவர் அங்கே போன நேரத்தில் அந்தப் பணக்காரர் ஓர் ஆளைத் தூணில் கட்டிவைத்து அவன் முகத்திலேயே குத்திக்கொண்டிருந்தார். அதைப்பார்த்த இந்தப் பெரியவர் அங்கிருந்தவர்களிடம் ''ஏன் இவர் இப்படி அந்த மனிதரின் முகத்தில் குத்திக்கொண்டிருக்கிறார்.'' என்று கேட்டார்.

''அந்தப் பணக்காரர் அவரைக் கடைக்குப்போய் பருப்பு வாங்கிவரச் சொன்னார். வாங்கிவரும் வழியில் பத்துப்பருப்பு வெளியே சிதறிவிட்டன. அதற்காகப் பத்துக் குத்து குத்திக் கொண்டிருக்கின்றார். ஒரு பருப்புக்கு ஒரு குத்து வீதமாகக் கணக்கு வைத்து குத்திக்கொண்டிருக்கிறார்; அவ்வளவுதான். என்றார். பணம் கேட்கவந்தவர் பயந்துபோய் ஓட்டம் பிடித்தார்.

மறுபடியும் நபிகளிடம் வந்தார் ''பணக்காரர் என்ன கொடுத்தார் என்று நபிகள் கேட்டார்'' ''குத்துத்தான் கொடுத்தார்'' என்று ஆரம்பித்து விபரத்தைக் கூறியிருக்கிறார்.நபிகள் நாயகமோ ''மறுபடியும் அவரிடம் போய் கேள்'' என்று கட்டளையிட்டார்.மறுபடியும் அவரிடம் போனார். ''அந்தப் பணக்காரர் இந்தமுறை இன்னொரு மனிதரை மரத்திலே கட்டிவைத்து சாட்டையால் அடித்துக் கொண்டிருந்தார்.''ஏன் அப்படி அடிக்கிறார் என்று மீண்டும் அங்கிருந்தவர்களிடம் விசாரித்தார்.

''இவர் எண்ணெய் வாங்கிவரப் போனார். வரும் வழியில் பத்து சொட்டு எண்ணெய் கீழே சிந்திப்போய்விட்டன. அதற்காகப் பத்து சவுக்கடி கொடுக்கிறார். 1 சொட்டுக்கு ஓர் அடி கணக்கு, என்றனர்.

வந்த பெரியவருக்கு வாழ்க்கையே வெறுத்துவிடும் போல் ஆகிவிட்டது. இந்தக் கருமியிடம் பணம் கேட்பதை விடப்பள்ளி வாசல் கட்டுவதையே நிறுத்திவிடுவதுதான் நல்லதென்று நினைத்து விட்டார். இவரிடம் நன்கொடை கேட்கப்போய், அவர் 10 ரூபா பணத்தை கொடுத்துவிட்டு ரூபாய்க்கு ஒரு குத்து என்று முகத்தில் குத்திவிட்டார் என்றால் யார் தாங்குவது என்று நினைத்துப்பார்த்து விட்டு மறுபடியும் ஓட்டம் பிடித்தார்.

மீண்டும் நபிகளிடம் வந்தார். செல்வந்தர் என்ன கொடுத்தார் என்று நபிகள் கேட்டார். ''சவுக்கடி'' என்று விவரத்தைக் கூறினார்.

''மறுபடியும் போய்க்கேள்'' என்று உத்தரவு போட்டார் நபிகள் நாயகம். பெரியவர் மறுபடியும் துணிச்சலை வரவழைத்துக் கொண்டு அந்தப் பணக்காரரிடம் போனார். நல்ல வேளையாக இந்தத்தடவை அங்கே எதுவும் நடக்கவில்லை. பெரியவர் துணிந்து அவரிடம் நெருங்கிதான் வந்த காரியத்தைப்பற்றிக் கூறினார். ''எவ்வளவு செலவில் பள்ளிவாசல் கட்டப் போகிறீர்கள்'' என்றார் அந்தச் செல்வந்தர்.

''அதைக் கட்டி முடிக்கப் பத்தாயிரம் செலவாகும் நீங்கள் ஐயாயிரம் கொடுத்தால் மற்றவர்களிடம் ஐயாயிரம் வாங்கிக்கொள்ளலாம். என்றார் இவர்.

அதற்கு அந்தப் பணக்காரர் கூறினார்; இவ்வளவு காலம் உங்கள் ஊரில் பள்ளிவாசல் இல்லாமல் இருந்ததே தவறு; இதில் இன்னமும் பலபேரிடம் போய் நன்கொடை கேட்டு காலம் கடத்த வேண்டாம். நானே பத்தாயிரம் தருகிறேன்; இதற்கு உதவாத பணம் எதற்காக என்னிடம் இருக்கிறது?'' என்று கூறிவிட்டு உடனே தேவையான பணத்தை அள்ளிக் கொடுத்தார்.

- பெரியவருக்குத் தலைசுற்ற ஆரம்பித்தது. ஒரே குழப்பம். நபிகளிடம் வந்து '' பத்துப் பருப்பு வெளியே சிதறியதற்காகப் பத்துக் குத்து குத்தியவர்'' பத்துச் சொட்டு எண்ணெய் சிந்தியதற் காகப் பத்து சவுக்கடி கொடுத்தவர், பள்ளி வாசல் கட்ட ஐயாயிரம் கேட்டால் பத்தாயிரம் கொடுக்கிறாரே.... இது எப்படி? என்று கேட்டார்.

இப்போது தான் நபிகள் நாயகம் இதற்கு விளக்கம் கொடுக்கிறார்.''அந்தப் பணக்காரர் கருமியில்லை சிக்கனத்தைக் கையாள்கிறார். அந்த ஆள் சிக்கனமாய் இருந்து சேர்த்து வைத்ததனால் தான் அந்தப் பணம் பள்ளி வாசல் கட்டப் பயன்படுகிறது'' என்றார்.

நபிகள் நாயகம் அவர்களுடைய இந்த வாக்குத்தான் கருமித்தனத்துக்கும், சிக்கனத்துக்கும் உள்ள இடைவெளியை எமக்குப் புரிய வைத்தது. இந்தத் தகவல் குடும்பத் தலைவிகள் பல பேர் காதில் வீழ்ந்திருக்கும்.

இனியும் நீங்கள் கடைக்குப் போய் பருப்பு வாங்கி வரும் சந்தர்ப்பம் ஏற்படலாம். அப்படி வாங்கி வரும் போது வழியில் ஏதாவது சிந்திவிட்டால் எத்தனை பருப்புச் சிந்திப் போய் விட்டன என்ற விபரத்தையெல்லாம் வீட்டில் போய் வெகுளித்தனமாகச் சொல்லிக் கொண்டிருக்காதீர்கள். ஒரு நேரம்போல எல்லா நேரமும் அமையாது.

**கோ.சுவாமிநாதன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ். பிரதேச செயலக சமுர்த்தி வாழ்வாதார அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட பயனாளி ஒருவருக்குத் தையல் இயந்திரத்தை சமுர்த்தி உதவி ஆணையாளரும் பிரதேச செயலரும் இணைந்து வழங்குகின்றனர். அருகில் முகாமைத்துவப் பணிப்பாளரும் , சமுர்த்தி முகாமையாளரும் உள்ளனர். (ம)

# பெற்றோரை அரவணைக்கும் பண்பாடு யாழ். மாவட்டத்தில் அருகி வருகிறது

## யாழ். அரச அதிபர் கவலை

யாழ்ப்பாணம், நவ.4

பெற்றோரை அரவணைக்கும் பண்பாடும் கலாசாரமும் யாழ்.மாவட்டத்தில் அருகி வருவதைக் காணக் கூடியதாக உள்ளது.

இதற்கு காரணம் பொருளாதார முன்னேற்றம். நவீனமயமான கலாசார முறைமையாகும்.

இவ்வாறு தெரிவித்தார் யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார்.

வலி.மேற்கு பிரதேச செயலகத்தின் சிறுவர் முதியோர் தின விழா கடந்த மாதம் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரை நிகழ்த்தும் போது தெரிவித்ததாவது:

கைதடி முதியோர் இல்லத்தில் 190 முதியோர்கள் உள்ள நிலையில் இவர்கள் பிள்ளைகளின் அன்புக்கும் அரவணைப்புக்கும் ஏங்கித் தவிப்பதை அவர்களுடன் கலந்துரையாடிய போது அறியக் கூடியதாக இருந்தது.

இதேபோல் வீடுகளிலும் இந்த நிலை தான் தொடர்கிறது. இன்றைய இளம் சமுதாயம் பணத்தால் எதனையும் செய்து விடலாம் என்றே நினைக்கிறார்கள்.

அத்துடன் நாளந்தம் சிறுவர்கள் பெண்கள் போன்றோருக்கு வன் முறைச் சம்பவங்களும் இடம்பெற்று வருகின்றன.

இந்தப் போக்கை மாற்றுவதற்கு சமுதாயத்தில் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டிய கட்டாய தேவையுள்ளது.

சிறுவர்களைப் பாதுகாக்கவும் முதியோர்களைப் பேணவும் இளம் சமுதாயத்தை வழிப்படுத்த வேண்டும். - என்றார். (ம-313)

# மீள்குடியமர்வு இடம்பெற்ற பிரதேசங்களில் வைத்தியசாலைகளின் புனரமைப்பு அவசியம்

## பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் வலியுறுத்து

யாழ்ப்பாணம், நவ.4

மீள்குடியமர்வு செய்யப்பட்ட பிரதேசங்களில் பொது மக்களின் மருத்துவ தேவைகளை நிறைவேற்ற அங்குள்ள வைத்தியசாலைகள் புனரமைக்கப்பட வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

ஏனெனில் தொற்று நோய்களைத் தடுப்பதற்கும் உடனடி வைத்திய தேவைகளை நிறைவேற்றுவதற்கும் அருகில் உள்ள வைத்தியசாலைகளின் பணிகளே முக்கியமானதாக அமைந்துள்ளன.

இவ்வாறு தெரிவித்தார் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ. கேதீஸ்வரன்.

வடமராட்சி கிழக்கு அம்பன் பிரதேச வைத்தியசாலையின் திறப்பு விழாவில் உரையாற்றும் போதே இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரை நிகழ்த்தும் போது தெரிவித்ததாவது:

கடந்த கால யுத்தத்தால் உயர் பாதுகாப்பு வலயங்களாக இருந்த பிரதேசங்களில் வீடுகள் உட்பட பொது இடங்களும் அழிவுக்கு உள்ளாகி இருந்தன.

மீளவும் பொது மக்கள் தமது சொந்த இடங்களில் குடியமர்ந்துள்ள நிலையில் வீடுகளைப் பொது மக்கள் புனரமைப்புச் செய்தாலும் பொது இடங்கள் அநாதரவாக விடப்பட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

வடமராட்சி கிழக்கு அம்பன் பிரதேசத்தில் 2009 ஆம் ஆண்டு மக்கள் மீள்குடியமர்வு செய்யப்பட்ட போதும் அம்பன் குடத்தனை வைத்தியசாலையைப் புனரமைப்புச் செய்து மக்கள் பயன்பாட்டுக்கு விடுவதற்கு 2 வருட காலம் எடுத்துள்ளது.

மக்களின் அடிப்படைத் தேவைகளில் மருத்துவத் தேவையும் இன்றியமையாததாக உள்ளமையால் மலேசிய நிறுவனம் வெளிநாட்டு அமைச்சின் ஊடாக 27 மில்லியன் ரூபா செலவில் புனரமைப்புச் செய்து கொடுத்துள்ளது.

இதனால் அம்பன் பிரதேச மக்களால் அதிகளவு பயன் பெறக்கூடியதாக அமையும்- என்றார். (ம-122)

# தொண்டைமானாறு வெளிக்கள நிலைய பரீட்சை முடிவுகள்

(நேற்றைய தொடர்ச்சி)

உயர்தர மாணவர்களுக்கு தொண்டைமானாறு வெளிக்கள நிலையத்தால் நடத்தப்பட்ட கணித, விஞ்ஞான, வர்த்தகப் பாடப் பெறுபேறுகள் வெளியாகியுள்ளன. அவற்றில் ஒருபகுதி நேற்றைய உதயனில் வெளியாகியது. அவற்றின் தொடர்ச்சி வருமாறு:

கே.சுதர்சன்-ஹாட்லிக் கல்லூரி, ரி.பிரசன்னா - சென். ஜோன்ஸ் கல்லூரி, பி.டிசாந் - சென்.ஜோன்ஸ் கல்லூரி, எஸ். நிஷாந்தன்-சென்.ஜோன்ஸ் கல்லூரி, சி.அகிலேந்திரன்-விக்னேஸ்வராக்கல்லூரி, செ.மயூரன்-விக்னேஸ்வராக் கல்லூரி, பி.நிலுக்ஷி -மெதடிஸ்ற் பெண்கள் உயர்தரப் பாடசாலை, எ.யூன்அனோபியா- கொக்குவில் இந்துக் கல்லூரி, அ.விமோசனன் - யாழ். இந்துக் கல்லூரி.

வர்த்தகப் பிரிவு

எஸ்.சிந்து-கொக்குவில் இந்துக்கல்லூரி, வி.நிறோஜன் - கொக்குவில் இந்துக் கல்லூரி, எஸ்.சஞ்சீவன்-கொக்குவில் இந்துக் கல்லூரி, எஸ்.பிறிதா - உடுப்பிட்டி மகளிர்கல்லூரி, எஸ். பமிலா - உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, கே.தனுசியா- வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, வி.பானுஜா - கொக்குவில் இந்துக்கல்லூரி, எஸ். ஆரனி -கொக்குவில் இந்து கல்லூரி,ம.மதீபன்- அருணோதயாக்கல்லூரி, பா.குஜாலா -அருணோதயாக் கல்லூரி, வி.தீபிகா-யாழ்.இந்துமகளிர் கல்லூரி, ஆர்.கஜனி-யூனியன் கல்லூரி, எஸ்.விமோசனன்-கொக்குவில் இந்துக்கல்லூரி, எஸ்.துவாரகா-யாழ்.இந்துமகளிர் கல்லூரி, ஆர்.டினேஸ்- கொக்குவில் இந்து கல்லூரி, அ.அருள் [illegible]- விக்ரோறியாக் கல்லூரி, எஸ்.[illegible]- கொக்குவில் இந்துக்கல்லூரி, சி. யனார்த்தனன் - விக்ரோறியாக் கல்லூரி, எஸ்.தர்சினி-யூனியன் கல்லூரி, ஆ.சனுஜன்- யாழ். இந்துக்கல்லூரி கு.பிரகாஸ்-யாழ்.இந்துக்கல்லூரி.எ. மயூரன்-யாழ் இந்துக்கல்லூரி, பி.தவலட்ஷனா- கொக்குவில் இந்துக் கல்லூரி, ப.பிரதீபா - விக்ரோறியாக்கல்லூரி, க.பிரன்சி - யாழ். இந்துக்கல்லூரி, எம்.கோணேஸ்வரன்- ஹாட்லிக் கல்லூரி, எஸ். பரதன் - ஹாட்லிக் கல்லூரி, ஆர். சாயினி - யாழ். இந்து மகளிர் கல்லூரி, பா.கிஷோனா- யாழ். இந்து மகளிர் கல்லூரி, கே.பைரவி - மானிப்பாய் மகளிர் கல்லூரி. (ம)

(முற்றும்)

## ஞானச் சுடர் வெளி வந்தது

யாழ்ப்பாணம், நவ.4

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை வெளியீடு செய்யும் ஞானச் சுடர் சஞ்சிகையின் ஐப்பசி மாத 166 ஆவது ஞானச்சுடர் மலர் வெளியிடப்பட்டுள்ளது. (ச-313)

## நிர்வாகிகள் தெரிவு

யாழ்ப்பாணம், நவ.4

காரைநகர் மடத்துவளவு நெய்தல் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் புதிய நிர்வாக சபைத் தெரிவு அண்மையில் நடைபெற்றது.

இதில் தலைவராக தே.தயாளன், செயலாளராக மு.வைத்திலிங்கம், பொருளாளராக ச.செபஸ்தியான் ஆகியோரும் நிர்வாக குழு உறுப்பினர்கள் 9 பேரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (ம-313)

## பதவியுயர்வு

தென்மராட்சி, நவ.4

தென்மராட்சி பிரதேச செயலகத்தில் உத விப் பிரதேச செயலராகக் (நிதி) கடமையாற்றிய கில்பேட் குணம் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்துக்கு பிரதம கணக்காளராகப் பதவியுயர்வு பெற்றுக் கடந்த வாரம் கடமைகளைப் பொறுப்பேற்றுள் ளார்.

இவரது இடத்துக்கு காரைநகர் உதவி அரச அதிபர் பணிமனையில் கணக்காள ராகக் கடமையாற்றிய அரசரத் தினம் மோகன்ராஜ் இடமாற்றம் செய்யப்பட்டு கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார். (ம-207)

## கௌரவிப்பு



யாழ்ப்பாணம், நவ.4

வவுனியா மாவட்டத்தில் கடந்த 10 வருடங்களாகக் கல்விச் சேவையில் கடமையாற்றிய சி.இராசநாயகம் வவுனியா தேசிய கல்லூரியால் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் 18 ஆவது கல்லூரி தினம் கடந்த மாதம் இடம்பெற்றது.

இதில் கல்விச் சேவையில் ஈடுபட்டவர்கள் 5 பேரை கௌரவிக்கும் போது ஓய்வு பெற்ற அதிபர் சி. இராசநாயகமும் கௌரவிக்கப்பட்டார்.

வவுனியா மாவட்டத்தில் கடந்த 10 வருடங்களாக சேவையாற்றிய கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் கடமையாற்றி மகா இறாம்பைக்குளம் அ.த.க. பாடசாலையின் அதிபராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-421)

## நியமனம்

யாழ்ப்பாணம்,நவ.4

யாழ்.மாவட்ட நெல்சிப் பிரத்தியேக அபிவிருத்தித் திட்டத்தை முன்னகர்த்த பொறியியலாளர் எந்திரி.எஸ்.ஸ்றெயிலிதரன் புதிதாக நியமனம் பெற்றுள்ளார்.

வடக்கு மாகாண பிரதம செயலாளர் ஆ.சிவசுவாமி புதிய பொறியிலாளருக்கான நியமனக் கடிதத்தை வழங்கியுள்ளார். (ம-302)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித நேயத்தைத் தவறவிட்டு தானம் செய்வதில் பயனில்லை

அரச பஸ் வருகுது என்றால் போட்டிக்கு ஓடும் தனியார் பஸ்ஸை ஒவ்வொரு நாளும் பிரதான வீதிகளில் பார்க்க முடியும். இந்த ஓட்டப் போட்டி நடுவர் ஒருவரும் இல்லாமல் எவரும் விசில் அடிக்காமல் ஓடும் ஓட்டமாகும். இந்தப் போட்டியில் வெற்றி, தோல்வி இரு பஸ்காரர்களுக்கும் கிடைக்கப் போவதில்லை. ஆனால் ஓடாமல் இரு பஸ்களில் ஏறும் மக்கள் தான் பாவம். எத்தனை தடவை இப்படியாகப் போட்டிக்கு ஓடி தடம் புரண்டாலும் எத்தனை பேரை அடித்துக் கொன்றாலும் இரு பஸ்களின் ஓட்டப் போட்டி இப்போதும் குறையவில்லை பாருங்கோ. இந்த ஓட்டப் போட்டியால் தனியார் பஸ்களில் பயணம் செய்பவர்கள் ஏமாற்றம் அடையும் சம்பவம் அடிக்கடி இடம் பெறுகிறது. ஏன் தனியார் பஸ்களில் பயணம் செய்ய விரும்புகிறார்கள் என்று பார்த்தால் இறங்க வேண்டிய இடத்திலேயே இறங்க முடியும்.

அரச பஸ்களில் ஏறினால் பஸ் தரிப்பிடத்திலே தான் இறங்க முடியும் என்பதால் தனியார் பஸ்களில் அநேகர் ஏறுகின்றனர். ஆனால் அரச பஸ்களில் இருக்கை இல்லாவிட்டாலும் விசாலமாக நின்று கொண்டு பயணம் செய்யக் கூடியதாக இருக்கும்.

அடுத்தபடியாக அரச பஸ்களில் கூட்டம் அதிகமாக இருந்தாலும் களைப்பு இல்லாமல் ஏறி இறங்க முடியும். ஆனால் தனியார் பஸ்களில் ஏறினால் கூட்டத்தில் நெரிந்து அவிந்து சட்டை எல்லாம் கசங்கி, வேர்க்க விறுவிறுக்க வந்து இறங்க வேண்டும்.

என்ன சண்முகம் அரச பஸ், தனியார் பஸ் என ஏதோவெல்லாம் வேறுபாடு பார்க்குது என்று பார்க்கிறியளா? கடந்த 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அரச பஸ்ஸில் ஒரு சம்பவம் நடந்திருக்கு பாருங்கோ. பருத்தித்துறை அரச பஸ் ஒன்று யாழ்ப்பாணம் நோக்கி காலை 8 மணிக்கு வந்து கொண்டிருந்தது. அல்வாய் பகுதியில் இருந்து அந்த அரச பஸ்ஸில் எனது நண்பன் ஏறி யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்தான். அப்பொழுது அந்த பஸ்ஸில் நடந்த சம்பவம் ஒன்றைச் சொன்னான் பாருங்கோ. எனக்கு பகீர் என்று இருந்தது. அந்தச் சம்பவத்தை உங்களுக்குச் சொல்லுகிறேன் கேளுங்கோ.

அதே அரச பஸ்ஸில் சிறுப்பிட்டி அம்மன் கோயிலடியில் இருந்து ஒரு மூதாட்டி தள்ளாடி தள்ளாடி பஸ்ஸில் ஏறினார். கதிர்காமர் கோயில் படி ஏறினது போல் அந்தப் பாட்டி கஷ்ரப்பட்டு பஸ்ஸில் ஏறி ஒருவாறு ஒரு இருக்கையில் அமர்ந்தார். பஸ்ஸில் ஏறின களைப்பு அந்தப் பாட்டியின் மூச்சின் சத்தத்தில் இருந்து தெரிந்தது. பஸ் நடத்துனரோ அந்தப் பாட்டியின் பக்கம் சென்று ரிக்கெட்டுக்குப் பணம் கேட்டார். அந்தப் பாட்டி தன்னிடம் 2 ரூபா தான் இருப்பதாகக் நடத்துநருக்கு எடுத்துக் காட்டி இருக்கிறார். நடத்துனரோ ஓடிக் கொண்டிருந்த பஸ்ஸை நிறுத்தி அந்தப் பாட்டியை இறக்க முற்பட்டார். பாட்டியோ தான் இறங்க வேண்டிய இடம் கோப்பாய் என்று சொல்லி கோப்பாய் பிரதேச செயலகத்துக்கு முன்னால் இறக்கி விடும்படி நடத்துநரிடம் மன்றாடினார். நடத்துநரும் விட்ட பாடில்லை. எப்படியாவது இறக்கிவிட வேண்டும் என்ற முடிவோடு பாட்டியை இறங்குமாறு வற்புறுத்திக் கொண்டிருந்தார். இதற்கிடையில் சாரதியோ, கிழவியை இழுத்து வெளியே விடு என்று நடத்துனரிடம் காட்டுக் கத்துக் கத்தினார். நடத்துனரோ பாட்டியின் கையைப் பிடித்துப் பாட்டி இருந்த இருக்கையில் இருந்து வலுக்கட்டாயமாக இழுத்து பஸ்ஸில் இருந்து இறக்கி விட்டார். பஸ்ஸில் அனைவரும் ஏதோ சினிமாப் படம் பார்ப்பது போல பார்த்துக் கொண்டிருந்தனர். எமக்கும் இதுக்கும் தொடர்பில்லை என்று ரசித்துக் கொண்டிருந்தனர். பாவம் அந்தப் பாட்டி என்று அதே பஸ்ஸில் பயணம் செய்த எனது நண்பன் பஸ் நடத்துனரும், சாரதியும் நடந்து கொண்ட மனித நேயமற்ற செயலைச் சொல்லி இருந்தார். நான் அவனைப் பார்த்துக் கேட்டேன், உனக்கு மனித நேயம் இருக்கா? என்று. அவன் எந்தவிதப் பதிலும் இல்லாமல் மௌனமாக நின்றிருந்தான்.

அந்த அரச பஸ் நடத்துனர், சாரதி தொடக்கம் அந்த பஸ்ஸில் பயணம் செய்த அனைவரும் மனித நேயம் அற்றவர்கள். நடத்துனர் ரிக்கெட் எடுக்காமல் ஆள்களை பஸ்ஸில் ஏற்றினால் அவரது வேலை பறிபோகும் என்று பார்த்து அந்தப் பாட்டிக்கு உதவி செய்யாமல் விட்டு மனித நேயத்தை தவறவிட்டார்.

சிறுப்பிட்டியில் பஸ்ஸில் ஏறி கோப்பாயில் இறங்குவதற்கு 13 ரூபா ரிக்கெட் எடுத்தால் போதும். அந்தப் பாட்டியிடம் 2 ரூபாய் இருந்தது. மீதி 11 ரூபா. அந்த பஸ்ஸில் பயணம் செய்தவர்கள் ஆளாளுக்கு ஒரு ரூபா போட்டிருந்தால் அந்தப் பாட்டி அதே பஸ்ஸில் பயணம் செய்து கோப்பாய் பிரதேச செயலகத்துக்கு முன்னால் இறங்கி இருப்பார். அந்த பஸ்ஸில் பயணம் செய்த அனை வரும் மனித நேயமற்றவர்களாக இருந்துள்ளனர். அந்தப் பாட்டிக்கு அதே பஸ்ஸில் பயணம் செய்த - மனிதாபிமானம் பற்றிக் கதைக்கும் - எனது நண்பனே உதவி செய்யாத போது எப்படி அந்த நடத்துனர் உதவி செய்வார்? இதே கேள்வியை எனது நண்பனிடம் கேட்டபோது தனது பிழையை ஒப்புக் கொண்டு மனம் வருந்தினான்.

எவருமே அந்தப் பாட்டிக்கு உதவி செய்ய முன்வராமல் விட்டு விட்டு மற்றவரை எப்படி குறை கூறமுடியும்? மனித நேயமற்றவர் என்று சொல்ல முடியும்? அந்த பஸ்ஸில் ஒருத்தராவது அந்தப் பாட்டிக்கு உதவி செய்துவிட்டு மற்றவர்களை மனித நேயமற்றவர்கள் என்று சொல்லி இருந்தால் பாராட்டத்தக்கது. பஸ் போக்குவரத்தில் நாளாந்தம் வயோதிபர்கள் ஏறி இறங்குகிறார்கள். இவர்களில் எவர் ஒருவருக்காவது எவ்வளவு பணம் எடுத்து வரவேண்டும் என்றும் தெரியாமல் இருக்கலாம். அல்லது பணமே இல்லாமல் இருக்கலாம். மூன்று தசாப்த போரில் தமது பிள்ளைகளை இந்த மண்ணுக்காக இழந்தும் இருக்கலாம். இப்படிப்பட்டவர்களுக்கு நாங்கள்தான் உதவி செய்ய வேண்டும்.

## கோப்பாய் சண்முகம்

கதையோடு செய்தி

முதியவர்கள் பஸ்ஸில் ஏறும்போது எங்கள் இருக்கையை அவர்களுக்குக் கொடுப்போம். அவர்களின் பயணத்துக்கு எத்தனை ரூபாக்களை எங்களால் இழக்க முடியும். எங்கள் பாட்டன், பாட்டி போல அவர்களையும் கவனிப்போம். நாளை நாங்கள் பாட்டி, பாட்டனாக வரும் போது எப்படி இருப்போம் என்று நினைத்துப் பார்க்க முடியாது. ஆகவே எங்கள் கண்முன்னே எப்போதாவது ஒரு தடவை தான் இப்படிப்பட்ட ஒரு சம்பவம் நடக்கும். அப்பொழுது நாங்கள் செய்யும் உதவி எங்கள் வாழ்நாளில் ஒரு உதவியாகக் கூட இருக்கலாம். பிறருக்கு உதவி செய்யாமல் விட்டு விட்டு வாழ்நாள் முழுவதும் அதையே நினைத்து நினைத்து கவலைப்படுவதில் எந்தப் பயனும் இல்லை பாருங்கோ. இந்தப் பஸ்ஸில் ஏறின பாட்டியின் நிலைமையை கொஞ்சம் நினைத்துப் பார்ப்போம். அந்தப் பாட்டியின் மனநிலை எப்படி இருந்திருக்கும்? அந்த பஸ்ஸில் பயணம் செய்த அனைவரும் கல் நெஞ்சுக்காரர்களா..? ✱

# தரவேற்றல் செயலமர்வு பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம், நவ.4

நல்லூர் கோட்டத்தைச் சேர்ந்த பாடசாலைகளின் ஆசிரியர்களுக்கான தொகை மதிப்பீடு கணினி தரவேற்றல் செயலமர்வு பிற்போடப்பட்டுள்ளது என்று நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி.மாணிக்கராசா தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் 37 ஆவது வருடாந்த மாநாடு நடைபெறவுள்ள காரணத்தாலேயே இது பிற்போடப்பட்டுள்ளது. இந்துச்செயலமர்வானது இன்று வெள்ளிக்கிழமை யாழ். கொக்குவில் இந்தக் கல்லூரியில் நடை பெறவிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம- 311)

## விவசாயக் கடன்

கெருடாவில் நவ.4

வல்வெட்டித்துறை இலங்கை வங்கிக் கிளையின் ஊடாக 2011 ஆம் ஆண்டு பெரும்போக விவசாயச் செய்கைக்கு இருநூறுக்கு மேற்பட்ட விவசாயிகளுக்கு ஆறுமாத விவசாயக் கடன் வழங்கப்பட்டு வருகிறது.

கூடிய வட்டிக்கு பணம் எடுக்கும் நிர்ப்பந்தம் விவசாயிகளுக்குஇல்லை. ஆறு மாத காலத்துள் கடனைக் கட்டி முடிக்க வேண்டும் எனவும் கூறப்பட்டது. (ம- 253)


## 5 ஆம் ஆண்டு நினைவலைகள்

### அமரர் செல்லையா தியாகராஜா



மண்ணுலகில் 18 04 1928

விண்ணுலகில் 30 10 2006

ஐந்தாண்டு சென்றதுவோ எமைவிட்டு நீங்கள் சென்று
பாசத்தின் உறைவிடமே பண்பின் இலக்கணமே
சலனமின்றி இறைவனிடம் சென்றதன் மாயமென்ன
நித்தம் துடிக்கும் எம் இதயம்
உங்களை நினைக்கத் தவறவில்லை
சீர்பெற்ற உங்கள் வாழ்வு, சொர்க்கத்திலும் சிறக்கட்டும்.

ஈஞ்சடி, சுதுமலை வடக்கு, மானிப்பாய்.

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## கண்ணீர் அஞ்சலி

எமது கழக உறுப்பினரும்
சூரன் ரேடஸ் உரிமையாளருமாகிய வேலுப்பிள்ளை பொன்னம்பலம் அவர்களின் மறைவைக் கேள்வியுற்று துயரடைகின்றோம். அவரின் இழப்பால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இல: 165, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். யாழ்ப்பாணம் வணிகர் கழகம்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர் சின்னப்பு இளையதம்பி



தோற்றம் 02.03.1922

மறைவு 15.11.2010



திதி: 04.11.2011

ஓர் ஆண்டு ஆனதுவே
உங்கள் முகம் கண்டு
ஆறவில்லை நம் இதயம்
அன்பும் பாசமும் நிறைந்த
பொக்கிஷம் நீங்கள்
நித்தம் புலம்புகின்றோம்
உங்கள் திருமுகம் காணாமல்
ஆறவில்லை எங்கள் துயர்
உங்கள் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்

உங்கள் நினைவுடன்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப் பிள்ளைகள்.

மஞ்சவனப்பதி வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.




770, 772, கே.கே.எஸ்.வீதி,
(தட்டாதெருச் சந்தி), யாழ்ப்பாணம்.
TP: 021 222 0421, Fax: 222 0421

526, 528, ... நல்லூர் (பின் வீதி), யாழ்ப்பாணம்.
TP :021 222 1723.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Annual Scientific Session - 2011
# Jaffna Medical Association

## *Message from President Jaffna Medical Association*



It is indeed a great pleasure to welcome you to the Annual scientific Session of the Jaffna Medical Association 2011.

The theme of this year is the ***"Blind Spots in Contemporary Medical Practice"***.

There will be several Guest Lectures, Free Papers and Pre – Congress Workshops during the sessions which relate directly or indirectly to the theme.

I hope all these activities will contribute at least in a small measure in enhancing the knowledge of the people who serve in medical field.

On behalf of my office bearers and the members of the Jaffna Medical Association I welcome the Chief Guest, Guest of Honour, Guests and all others to the Annual Scientific Session 2011 of the Jaffna Medical Association.

*Dr. S. Raviraj,*
*President, Jaffna Medical Association.*

## *Message from Director, Teaching Hospital, Jaffna*



I would like to state with pleasure and pride that the Jaffna Medical Association (JMA) is taking utmost interest in holding annual scientific session which would certainly enlighten the doctors to home their medical thinking for the benefit of common man. Further the development of this nature in the medical field is capable of promoting communal harmony as well. Hence I profoundly appreciate the noble endeavour of the Jaffna Medical Association to serve the society through medical channel.

I do sincerely wish that this kind of harmonious atmosphere prevails for ever.

*Dr. (Mrs.). Bhavani Pasupathirajah*
*Director, Teaching Hospital, Jaffna*

## *Message from Dean Faculty of Medicine, University of Jaffna*



It gives me great pleasure to give this message of felicitation to Jaffna Medical Association for its annual Scientific Session 2011 to be inaugurated on 04.11.2011.

The Jaffna Medical Association has been in existence since 1941 and contributed towards development of good medical practice in and around Jaffna through its members by conducting academic sessions and publication of Jaffna Medical Journal. Ever since the establishment of the Faculty of Medicine in 1979, the JMA has involved in teaching medical students and provided library facilities for the students at the Teaching Hospital.

The JMA has continued its commitment to better medical services and assistance to medical students even during the most difficult periods without a break with only a marginal reduction in the scale and variety of activities. I am sure that the people of Jaffna and all medical graduates will honour the good work done by the JMA.

I wish that the JMA rises to the glorious years of the past, grows beyond to become a recognized organization nationally and internationally and continues to provide wide variety of learning experiences through its academic programs. And exposure to distinguished personalities in the field of medicine to medical students and trainees of the Postgraduate Institute of Medicine while enlightening the doctors in Jaffna about the current developments in the field of medicine and publishing the research done here through the Jaffna Medical Journal.

**Prof. K. Sivapalan,**
*Dean, Faculty of Medicine, University of Jaffna.*

## *The Jaffna Medical Association*

The Jaffna Medical Association is one of the oldest Professional bodies existing today in the regional capital cities of Sri Lanka

The "Jaffna Clinical society" was established in 1941 for the advancement of Medical knowledge in the Northern Region of Sri Lanka. It is claimed that this is the first regional medical Association in Ceylon (Sri Lanka). Its first President was Dr. S Subramaniam, who was the Provincial surgeon at that time. The Jaffna Clinical society changed its name to "The Jaffna Medical Association" in 1969.

Since its establishment, the Jaffna medical Association has been functioning from the Jaffna Teaching hospital. Its activities and growth has been entwined with the growth of the Jaffna Teaching Hospital.

In 1850 the Jaffna Hospital was started as a Friend-in-need hospital, administered by the Friend-in-need Society. A plaque indicating that the Hospital was opened in 1850 by Ackland Dyke, Government agent Jaffna was available in the canteen of the hospital until the canteen was broken down for reconstruction.

This was the office of the Provincial Surgeon (Dr. S Subramaniam). Prof Milroy Paul in one of his publications recalls having seen this plaque in 1931, when he visited his office. We trust this plaque is preserved and re-fixed when the new constructions are completed

The Friend-in-need society ran the hospital on a Voluntary basis with a grant from the Government, until it was handed over to the Government in 1907, and renamed "The Jaffna Civil Hospital" as it was taken over by the "Civil Medical Department" of the Government at that time. With the establishment of the Medical Faculty at the University of Jaffna in 1978, it transformed itself into the "Jaffna Teaching Hospital"

Dr. Samuel Green, who was an American medical Missionary, was the first Visiting Surgeon to the Friend in need Hospital from 1850. He continued to work until he left the country in 1873. During the early years of the establishment of the Hospital, the medical students trained by Dr. Green at the Manipay Medical School, and subsequently qualified, worked at the Friend-in-need hospital.

Several giants in the Medical field have worked in the Jaffna Hospital starting from Dr. S F Green, and several of his students like Dr. William Paul (Grand Father of Prof. Milroy A Paul). Others who have served in the Jaffna hospital & Jaffna Medical association include: Prof Milroy Paul, Prof R A Navaratne, Dr. S A Cabraal, Dr. T Visvanathan, Dr. R S Thanabalasundaram, Prof M Sivasuriya, Dr. P Sivasubramanaiam, Prof S R Kottegoda, Prof N Sreeharan, Dr. A T S Paul, and many more.

**Dr. N. Sivarajah,** *Consultant Coordinator, WHO – Jaffna*

## Annual Scientific Session 2011
# *Jaffna Medical Association*
## AGENDA

**PRE CONGRESS WORKSHOPS**
**04.11.2011 at 9.00am College of Nursing**
- Laparoscopic Surgery
- Therapeutic Relationship
- Dealing with feelings
- Quality Assuarance& Safety in Healthcare

**INAUGRATION**
**04.11.2011 at 4.30pm**
Kailasapathy Auditorium, University of Jaffna
- Address by the President JMA – Dr. S. Raviraj
- Address by the Chief Guest – Prof. Rezvy Sheriff
- Address by the Guest of Honour – Dr. K. U. R. A. Banagala
- Cultural Show

**SESSIONS' BANQUET**
**05.11.2011 at 7.00pm**
- Tilko Jaffna City Hotel

**SESSION ONE**
05.11.2011 at 8.00am
Public Library Auditorium

**SESSION TWO**
05.11.2011 at 2.00pm
Public Library Auditorium

**SESSION THREE**
06.11.2011 at 8.30am
Public Library Auditorium

**SESSION FOUR**
06.11.2011 at 1.00pm
Public Library Auditorium

*Sponsored by*
*Rabaxy (Sporidex)*
MeadJohnson Nutritionals

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எச்சாட்டியில் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ள நாவலர் பாடசாலையின் இரண்டாவது வகுப்பறை

*(சென்றவாரத் தொடர்ச்சி)*

சுதுமலை, ஈஞ்சடி நாவலர் பாடசாலையில் கல்விகற்கும் மாணவர்களின் பெற்றோரின் ஆர்வத்தால் கற்றலை மேலும் வலுப்படுத்துவதாக அமைந்ததுடன் ஆசிரியர்களின் ஆர்வத்தையும் வலுவூட்டுவதாக அமைந்தது. அர்ப்பணிப்பான ஆசிரியர்களின் உழைப்பின் காரணமாக வருடாவருடம் வெளியேறும் மாணவர்கள் உயர்ந்த பாடசாலைகளுக்கு கல்வி கற்பதற்குச் செல்லக்கூடியதாகவும் அமைந்தது.

ஆசியர்கள் பாடங்களை மட்டுமல்லாது இணைபாடவிதான செயற்பாடுகளிலும் மாணவர்கள் திறமையுடையவர்களாக விளங்குவதற்கும் வழிகாட்டிகளாக அமைந்தனர்.



இணை பாடவிதான செயற்பாடுகளில் தமிழ் மொழிசார் போட்டிகள், கலைசார் போட்டிகள், விளையாட்டு போட்டிகள் போன்ற சகல போட்டிகளிலும் மாணவர்கள் பங்குபற்றி வெற்றிபெறுவதற்கு பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரியர்களின் தன்னல மற்ற செயற்பாடே காரணமாகும் பாடசாலைகளில் கற்கும் மாணவர்களின் சத்துணவுகளையும் குடிபான வகைகள் இவற்றை மகாலிங்கம் மயூரன் வழங்கிவரு கின்றமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் போரூட் நிறுவனம் ஜே. ஆர்.எஸ். நிறுவனம் என்பன பாடசாலைக்கு தேவையான உபகரணங்கள் சிலவற்றையும் வழங்கியமை குறிப்பிடத்தக்கது. எனினும் பாடசாலைக்கென நவீன கற்பித்தல் உபகரணங்கள், கற்றல் கற்பித்தல் உபகரணங்கள், மலசல கூடம் போன்றவை காணப்படாமை மிகவும் அத்தியாவசிய தேவைகளாக உள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

அத்துடன் பாடசாலையில் கற்கும் முன்பள்ளி மாணவர்களின் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு பல்வேறு செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

குறிப்பாக மாணவர்களிடையே சேமிப்புப் பழக்கத்தை ஏற்படுத்தும் முகமாக வங்கிகளில் நிரந்தர வைப்புப் பணத்தை வைப்பதற்கு ஊக்குவித்தல்.

அத்துடன் சுதுமலைப் பிரதேசத்தில் க.பொ.த. உயர்தரம் கற்று விட்டு இருக்கும் மாண வர்களை முன்பள்ளி டிப்ளோமாபயிற்சி நெறிக்கு அனுப்பி அவர்கள் மூலம் பாட சாலையை மேலும் தரம் உயர்த்து வதற்கு நடவடிக்கைகள் எடுப்பதுடன் பாடசாலையில் மாணவர்கள் தொகையை அதிகரிக்கவும் செய்து வருகின்றது.

பாடசாலையின் வளர்ச்சியில் பெரிதும் பங்கு கொள்வது அந்தப் பகுதி மக்கள் என்று தான் கூற வேண்டும்.

ஏனெனில் பாடசாலையில் இடம் பெறும் அனைத்து செயற்றிட்டங்களையும் அரச அரச சார்பற்ற நிறுவனங்களை எதிர் பார்க்காமல் பொது மக்களின் ஒத்துழைப்புடன் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஈஞ்சடி நாவலர் பாடசாலையின் இதர செயற்பாடுகளாக சிறந்த முறையில் விழாக்களை நடத்தல்; ஊர்சார் தகவல்களுடன் நூல்களை வெளியிடுதல் ஊரின் சமூக மற்றும் சேவைகளை ஆற்றிய பெரியோர்களைக் கௌரவித்தல் போன்ற செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது.

அத்துடன் எதிர் காலத்தில் பாடசாலையில் நடத்துதல்; சமூகத்துக் குத் தேவையான கருத்தரங்குகளை நடத்துதல் கலை, இலக்கிய, கல்விசார் காலாண்டு சஞ்சிகைகளை வெளியிடுதல் போன்ற செயற்றிட்டங்களையும் மேற்கொள்ள உள்ளமை குறிப்பிடத்தக்கது.

சுதுமலைப் பிரதேசத்தைச் சேர்ந்த முன்பள்ளிச் சிறார்கள் பயன் பெறக் கூடிய வகையில் உருவாக்கப்பட்ட ஈஞ்சடி நாவலர் பாடசாலை மேலும் தனது சேவையை விரிவுபடுத்தும் நோக்குடன் சுதுமலை தெற்கு பிரதேசத்தில் இன்னொரு பாடசாலையை தை மாதம் [illegible] நடவடிக்கைகளை மேற்கொண்டு வரு கின்றது.

ஈஞ்சடி நாவலர் பாடசாலையுடன் இணைந் ததாக இரண்டாவது வகுப்பறையாக ''எச் சாட்டி நாவலர் பாடசாலை'' என்னும் பெயருடன் இந்தப் பாடசாலை ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

ஈஞ்சடி நாவலர் பாடசாலையின் தலைவராக உள்ள இ.பேரின்பநாயகம் முழுமையாக தனது நிதியுடன் இந்தப் பாடசாலையை அமைப்பதற்கான பணிகளை மேற்கொண்டுள்ளார்.

எச்சாட்டிப் பிரதேசத்தைச் சேர்ந்த முன்பள்ளி மாணவர்கள் இந்தப் பாடசாலையில் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர். முற்றிலும் இலவசமாக இதன் சேவைகள் விரிவுபடுத்தப்படவுள்ளது.

**சோபனா**

40 அடி நீளமும் 19 அடி அகலம் கொண்டதாக பாடசாலையின் கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது.

மனிதனுடைய வாழ்க்கையில் முன்பள்ளிக் கல்வி மிகவும் பிரதானமானது என உணர்ந்து நாவலர் காட்டிய வழியில் இந்தப் பாடசாலையில் உள்ள நிர்வாகக்குழுவினர் சேவையினை வழங்கு கின்னார்.

இவ்வாறு ஒவ்வொரு பிரதேசங்களையும் சேர்ந்த மக்கள் தமது சமூக சேவைகளை நல்லெண்ணத்துடன் செய்தால் எதிர் காலத்தில் சிறந்த சமூகத்தை உருவாக்க முடியும்.

சுதுமலைப் பிரதேசத்தில் அதிகமான வறிய முன்பள்ளி மாணவர்கள் பெரிதும் பயன்பெற்று இந்தப் பாடசாலையின் பணிகளை மேலும் விரிவுபடுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றன.

(முற்றும்)


## நன்றி நவிலலும்

41 ஆம் நாள் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்

மலர்வு: 1957.02.14
உதிர்வு: 2011.09.27





### அமரர் துரைராஜா சுகுமாரன்

கிராம அலுவலர் (குமரபுரம், பரந்தன்)

கடந்த 27.09.2011 இறைபதமடைந்த எமது அன்புத்தெய்வத்தின் செய்தி கேட்டு உடன் வந்து உதவிய அயலவர், உற்றார், உறவினர் மற்றும் இறுதி நிகழ்விலும் திருப்பலியிலும் கலந்துகொண்டவர்கள், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்களை வெளியிட்டோர், பதாகைகள் வெளியிட்டோர், பத்திரிகையில் பிரசுரித்தோர், மலர்வளையங்கள், மலர் மாலைகளால் அஞ்சலி செய்தோர், இரங்கல் உரை நிகழ்த்தியோர், மின்னஞ்சல் மூலம் தொலைபேசி தந்தி, கடிதமூலம் ஆறுதல்களைத் தெரிவித்தோர் இன்றுவரை எமக்குப் பல்வேறு வகைகளிலும் ஆறுதலும் ஒத்தாசையும் வழங்கிய அனைவருக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவிப்பதோடு நாளை மறுதினம் (06.11.2011) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தனிப்பட்ட அழைப்புக் கிடைக்கப்பெறாதோர் இந்த [illegible] அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு மிகவும் தயவாகக் [illegible]

குமரபுரம், பரந்தன். குடும்பத்தினர்

## விற்பனைக்கு



செங்கல், கருங்கல், சீமெந்து கல்,
அத்திவார கற்கள், சல்லி கற்கள்,
நிலப்பதிப்புக் கற்கள், பூவடிவ கற்கள்,
கொங்கிறிட் கதிரை செட்
கருங்கல் தூள்

**பிரணவன் என்ரபிறைசஸ்**

பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
(சங்கிலியன் சிலைக்கு முன்)
077 3818799

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
இராசையா
கார்த்திகேசு



தோற்றம்:
01.02.1939

மறைவு:
15.11.2010

தாங்கள் எம்மைவிட்டுப் பிரிந்து
ஆண்டு ஒன்று ஆனாலும்
என்றும் உம் நினைவுகளுடன் நாம்
தங்கள் ஆத்ம சாந்திக்காகப்
பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

இல.72, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச பஸ், ரயில் கட்டணங்களை அதிகரிக்கும் நோக்கம் இல்லை

## போக்குவரத்துத்துறை அமைச்சர் கூறுகிறார்

கொழும்பு, நவ.4

இலங்கை போக்குவரத்துச் சபை பஸ்களினதும், ரயில்களினதும் கட்டணங்களை அதிகரிக்கும் நோக்கம் இல்லை என்று போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கம கடந்த செவ்வாய்க்கிழமை அமைச்சில் நடந்த ஊடகவியலாளர் மாநாட்டில் தெரிவித்துள்ளார்.

ரயில், பஸ் கட்டணங்கள் அதிகரிக்கப்படுமா என்று நிருபர்கள் கேட்ட கேள்விக்குப் பதில் அளித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

ரயில், பஸ் கட்டணங்களை உயர்த்தும் அதிகாரம் என்னிடமில்லை. தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவே அதைத் தீர்மானிக்கும். டீசல் விலை அதிகரிப்பால் இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு நாளாந்தம் 22 லட்சம் ரூபா மேலதிக செலவு ஏற்படுகின்றது.

மிகவும் சிரமத்துக்கு மத்தியிலேயே இலங்கைப் போக்குவரத்து சபை நிர்வகிக்கப்படுகின்றது. மொத்த வருமானத்தில் 50 சதவீதம் டீசலுக்குச் செலவாகிறது. ரயில்வே திணைக்களத்துக்கு திறைசேரியின் நிதியுதவி கிடைக்கிறது. ஆனால் இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குக் கிடைத்த நிதி படிப்படியாகக் குறைக்கப்பட்டு வருகின்றது.

இந்த முறை டீசல் விலை அதிகரிப்பால் கட்டண அதிகரிப்பு 3.2 வீதமாகக் கணிக்கப்பட்டுள்ளது. டீசலின் விலை 4 சதவீதமாக அதிகரித்தால் மட்டுமே கட்டண அதிகரிப்பைச் செய்ய முடியும் - என்றார். (ச)

## கூட்டுறவு ஊழியருக்கு ஒழுக்காற்று நடவடிக்கை பயிற்சிப் பட்டறை


யாழ்ப்பாணம், நவ.4

வடமாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் ஒழுக்காற்று நடவடிக்கை தொடர்பான பயிற்சிப்பட்டறை எதிர்வரும் 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமையும் மறுநாள் சனிக்கிழமையும் நடைபெறவுள்ளது.

கடந்த காலங்களில் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளைப் பரிசீலித்த ஆணைக்குழு சில சங்கங்களில் ஒழுக்காற்று நடவடிக்கைகள் உரிய முறையில் கடைபிடிக்கப்படாததால் அபிவிருத்தியில் பின்னடைவு ஏற்பட வாய்ப்பளிக்கின்றது. இதனைக் கருத்திற்கொண்டு கூட்டுறவு ஊழியர்களுக்கு பயிற்சி வழங்கும் முகமாக இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கத்திலிருந்து 2 பேர் கலந்து கொள்ளவேண்டும் என்று வடமாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் செயலாளர் கே.பிரபா தெரிவித்துள்ளார். (ச-311)

## அனுராதபுரம் ஆஸ்பத்திரி முன்பாக சம்பள உயர்வு கோரி ஆர்ப்பாட்டம்



கொழும்பு, நவ.4

சம்பள அதிகரிப்பை மேற்கொள்ளுமாறு கோரி பல வைத்தியசாலைகளைச் சேர்ந்த சிற்றூழியர்கள் அனுராதபுரம் போதனா வைத்தியசாலைக்கு முன்பாக நேற்று முன்தினம் புதன்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அனுராதபுரம், பொலநறுவை, பதவியா உள்ளிட்ட பல வைத்தியசாலைகளைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான சிற்றூழியர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆண்டுக்கான வரவு, செலவுத் திட்டத்தில் 7,500 ரூபா சம்பள அதிகரிப்பை மேற்கொள்ளுமாறு வைத்திய சாலை சிற்றூழியர்கள் கோரிக்கை விடுத்துள்ளதுடன் தமக்குக் கிடைக்க வேண்டிய பதவி உயர்வை வேண்டுமென்றே திட்டமிட்டு பிற்போடுவதாகவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் தெரிவித்துள்ளனர். (ச)

# திறைசேரியில் இல்லைப் பணம்; விவசாய ஓய்வூதியம் நிறுத்தம்

கொழும்பு, நவ.4

திறைசேரியிலிருந்து பணம் கிடைக்காத காரணத்தினால் விவசாய ஓய்வூதியங்களை முற்றாக நிறுத்தவேண்டிய நிலை உருவாகியுள்ளது என்று விவசாய சேவைகள் அமைச்சின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

விவசாய ஓய்வூதியங்கள் அனைத்தும் மாதத்தின் முதல் வாரத்தில் தபாலகங்கள் மூலம் வழங்கப்பட்டு வந்தன. 1987 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க சட்டத்தின் பிரகாரம் விவசாயிகளுக்கு ஓய்வூதியங்கள் வழங்கப்படுகின்றன.

இதனடிப்படையில் நாட்டிலுள்ள சுமார் ஒரு லட்சம் ஓய்வு பெற்ற விவசாயிகளுக்கு ஓய்வூதியம் வழங்கப்பட்டு வந்தது. இதற்காக மாதாந்தம் திறைசேரியால் 15 கோடி ரூபா வழங்கப்படுகின்றது. இதற்கு முன்னர் விவசாய ஓய்வூதிய நிதியத்தில் இருந்தே இந்தப் பணம் பெறப்பட்டு வந்தது. எனினும் காலப்போக்கில் அந்த நிதியம் செயலிழந்துபோனதால் திறைசேரி பணத்தை வழங்கியது. தற்போது திறைசேரியில் இருந்தும் பணம் கிடைக்காத காரணத்தால் வேறுவழியின்றி விவசாய ஓய்வூதியங்களை முற்றாக நிறுத்த வேண்டிய இக்கட்டு நிலை ஏற்பட்டுள்ளது.

விவசாய ஓய்வூதிய நிதியத்திற்கு ஒன்பது லட்சம் அங்கத்தவர்கள் உள்ளனர். எனினும், நிதியத்திலிருந்து ஓய்வூதியம் வழங்கப்படாததால் அந்த அங்கத்தவர்கள் பல்வேறு சிரமங்களுக்கு முகம் கொடுத்துள்ளனர் - என்றார். (ச)

**பணிப்பெண் தேவை**

யாழ்ப்பாண வீட்டில் தங்கியிருந்து வீட்டு வேலை செய்யக்கூடிய 30 வயதுக்கு மேற்பட்ட பணிப்பெண் தேவை
சம்பளம்: ரூபா 10,000/-
தொ.பே: 0771965666

**கடைவாடகைக்கு உண்டு**

கொழும்புத்துறை வீதியில், கணக்கர் சந்திக்கு அருகில் உள்ள மூன்று கடைத் தொகுதிகள் வாடகைக்கு உண்டு
தொ.பே: 0750403027

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் கந்தையா சுபாகரன்
(முகாமைத்துவ உதவியாளர், பிரதேச செயலகம், வேலணை - யாழ்ப்பாணம்)
திதி: பூர்வபக்க நவமி
அன்னை மடியில்
31.08.1969
ஆண்டவன் அடியில்
27.10.2009

அன்புக்கும் பண்புக்கும் இலக்கணமாய் இருந்து
அமரர் ஆகிவிட்ட எங்கள் தெய்வமே
அன்பெனும் அமுதூட்டி பாசத்தால் பாதுகாத்து பண்பினால் வழிநடத்திய
எமதன்புத் தெய்வமே உடலால் நீங்கள் எம்மைவிட்டுப் பிரிந்து ஈராண்டு சென்றுவிட்டாலும் இப்புவியில் நாமுள்ளவரைக்கும்
எம் உள்ளங்களில் உங்கள் நினைவுகள் என்றும் அழியாது
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

20B, சச்சமோட்டை வீதி,
யாழ்ப்பாணம்.

மனைவி,
பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

### திருமதி தெய்வேந்திரம் பாமினி (பொம்மி)



நவாலி தெற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தெய்வேந்திரம் பாமினி (பொம்மி) கடந்த (31.10.2011) திங்கட்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகசுந்தரம் மற்றும் - நாகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - அன்னலட்சுமி தம்பதியரின் மருமகளும் தெய்வேந்திரத்தின் அன்பு மனைவியும் மிதுலா (மானிப்பாய் மகளிர் கல்லூரி), மதுசா,ருசாந்தன் (மானிப்பாய் விவேகானந்த வித்தியாசாலை) ஆகியோரின் பாசமிகு தாயும் பாஸ்கரன், பிரபாகரன் (பிரான்ஸ்), சுமதினி (பிரான்ஸ்), வாகீசன் (பிரான்ஸ்), றஜனி ஆகியோரின் அன்புச் சகோதரியும் இந்திராணி, கெனடி (பிரான்ஸ்), கீதா (பிரான்ஸ்), வஸ்னி (பிரான்ஸ்), ஈசன், தேவராசா (கொலண்ட்), சண்முகராசா, தியாகராசா, செல்வரஞ்சினி, மஞ்சுளா, சுபாசினி (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (04.11.2011) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக நவாலி ஆரியம்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கொத்துக்கட்டி வீதி,
நவாலி தெற்கு, மானிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்.

## இரட்டைக்கொலை வழக்கில் மூவருக்கு மரணதண்டனை

கொழும்பு, நவ.4

எஹெலியகொட பிரதேசத்தில் அண்ணனையும், தங்கையையும் வெட்டிக் கொலை செய்தனர் என்ற குற்றச்சாட்டின் பேரில் வழக்குத் தொடரப்பட்டிருந்த மூவருக்கு அவிசாவளை மேல் நீதிமன்ற நீதிவான் திருமதி.எஸ். எல்.தென்னகோன் மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளார்.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாய், மகன், நண்பன் ஆகிய மூவருக்குமே இந்தத் தண்டனை வழங்கப்பட்டது.

2003 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 26 ஆம் திகதி இவர்கள் ஸ்வர்ணஜயந்தி குமாரி என்ற பெண்ணையும், பிரசன்ன பிரியலால் என்ற இளைஞனையும் கொலை செய்தனர் என்று குற்றம் சாட்டப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

**வாகன சாரதிக்கான விண்ணப்பம் கோரல்**

நோர்த்சீ லிமிட்டெட்
பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு கைத்தொழில்கள் முயற்சி அபிவிருத்தி அமைச்சு

A தர வாகன சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளோரிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றது.

1. வயதெல்லை : 25 - 35 வயதுக்கு உட்பட்டோர்.
2. அனுபவம் : 5 வருட வாகன ஓட்டுநராக இருத்தல் வேண்டும்.
3. மேலதிக தகைமைகள்: மின்னியல் அல்லது இயந்திரம் தொடர்பான அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

மேற்படி வேலைவாய்ப்பினை பெறவிருப்பமுடையவர்கள் தங்கள் சுயவிவரக் கோவை, பிறப்புச் சான்றிதழ், அடையாள அட்டை என்பவற்றுடன் 07.11.2011 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு கீழ்க்காணும் முகவரிக்கு நேரில் சமுகம் தரவும்.

கணக்காளர்,
நோர்த்சீ லிமிட்டெட்,
குருநகர்,
யாழ்ப்பாணம்.

தொ.பேசி: 021 222 2733
தொ.நகல்: 021 222 0713
மின்னஞ்சல்:
northsealtd@sltnet.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐரோப்பிய யூனியனின் செழிப்பை இந்தியா விரும்புகிறது - மன்மோகன்

ஐரோப்பிய நிதி நெருக்கடிகளுக்கு தீர்வுகாண கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்வது அவசியம் என்று பிரதமர் மன்மோகன் சிங் வலியுறுத்தியுள்ளார்.

ஜி-20 நாடுகள் அமைப்பின் உச்சி மாநாடு பிரான்ஸ் நாட்டின் கேன்ஸ் நகரில் நேற்று ஆரம்பமாகியது. தொடர்ந்து இன்றும் நடைபெறுகிறது. அதில் பங்கேற்க இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் நேற்றுமுன்தினம் டில்லியில் இருந்து புறப்பட்டு கேன்ஸ்ஸுக்குச் சென்றார்.

முன்னதாகப் பத்திரிகையாளர்கள் சந்திப்பில் பிரதமர் கூறுகையில்:

கேன்ஸ் ஜி20 மாநாடு குறித்து உலகம் முழுவதும் எதிர்பார்ப்பு உள்ளது. வலிமையான மற்றும் ஒருங்கிணைந்த நடவடிக்கைகள் மூலம் பொருளாதாரத்தை சரியான பாதையில் மீண்டும் நிலைநாட்ட இந்த மாநாடு பயன்பட வேண்டும்.

ஐரோப்பிய நாடுகளிலும், வேறு சில இடங்களிலும் இப்போது நிலவும் பொருளாதாரச் சவால்களைச் சமாளிக்க கடினமான முடிவுகள் எடுக்க வேண்டியது உடனடி அவசியமாக வுள்ளது.

தற்சமயம் கடன் நெருக்கடிகளுக்குத் தீர்வு காண எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் அதிகம் உள்ளன. உலக சந்தைகளில் நம்பிக்கையை ஏற்படுத்தும் வகையில் அந்தத் தீர்வு அமைய வேண்டும்.

ஐரோப்பிய யூனியனின் செழிப்பை இந்தியா விரும்புகிறது. ஏனெனில் ஐரோப்பாவின் வளர்ச்சி இந்தியாவின் செழிப்புடன் இணைந்தது. சர்வதேச நிர்வாக நடைமுறைகள்



மற்றும் சீர்திருத்தங்களை முன்னெடுத்துச் செல்வதில் ஏனைய நாடுகளுடன் இணைந்து பணியாற்ற இந்தியா தயாராக உள்ளது.

மேலும் ஜி20 மாநாட்டில் முக்கிய விடயங்கள் பற்றி இந்தியா தனது கருத்துக்களை தெளிவாக எடுத்துரைக்கும் என்றும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

## காஷ்மீர் விவகாரம்: இந்தியாவிடம் மன்னிப்பு கேட்டது துருக்கி

ஐ.நா. பொதுச்சபையில் காஷ்மீர் விவகாரத்தை எழுப்பிய தற்காக இந்தியாவிடம் துருக்கி மன்னிப்பு கேட்டுள்ளது.

இந்தியாவின் அதிருப்தியை இஸ்தான்புல் மாநாட்டில் வெளியுறவு அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா துருக்கி வெளியுறவு அமைச்சர் அகமது டவுடோக்லுவிடம் தெரிவித்தார்.

காஷ்மீரைக் குறிப்பிட்டுப் பேசிய துருக்கி பிரதமரின் பேச்சு குறித்து இந்தியா அதிருப்தியையும், ஆச்சரியத்தையும் வெளியிட்டது.



உத்தரப்பிரதேச மாநிலத்துக்குச் சென்ற ஜனாதிபதி பிரதீபா பாட்டீலை, அந்த மாநில முதல்வர் மாயாவதி லக்னோ விமான நிலையத்தில் வரவேற்றார். அருகில் ஆளுநர் பி.எல்.ஜோஷி நிற்கின்றார்.

## கனிமொழியின் பிணை நிராகரிப்பு தி.மு.கவினர் பெரும் ஏமாற்றத்தில்



டில்லி, நவ.4

2 ஜி வழக்கில் கைது செய்யப்பட்டு திகார் சிறையில் உள்ள கனிமொழியின் பிணை மனு நேற்று சி.பி.ஐ. சிறப்பு நீதிமன்றத்தினால் 4 ஆவது முறையாக நிராகரிக்கப்பட்டுள்ளது.

கனிமொழி உட்பட இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட 5 பேரின் பிணை மனுவுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கப் போவதில்லை என்று முன்னர் சி.பி.ஐ. தெரிவித்ததால், நேற்று நிச்சயம் அவருக்கு பிணைகிடைத்துவிடும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

இதையடுத்து கனிமொழி விடுதலையாகக் கூடும் என்று தி.மு.கவினர் மத்தியிலும் எதிர்பார்ப்பு அதிகரித்ததுடன், நேற்று முன்தினம் தி.மு.க. பொருளாளர் மு.க.ஸ்டாலின் மற்றும் அழகிரி உட்பட தி.மு.க. பிரமுகர்கள் பலர் டில்லியில் வந்து முகாமிட்டிருந்தனர்.

நீதிமன்றத்திற்கு கனிமொழியின் கணவர் அரவிந்தன், மகன் ஆதித்யா, தி.மு.க. மாநிலங்களவை உறுப்பினர்களான டி.ஆர். பாலு, திருச்சி சிவா ஆகியோர் வருகை தந்திருந்தனர்.

இந்தநிலையில் கனிமொழி உள்ளிட்ட அனைவரினதும் பிணை மனுக்களையும் சி.பி.ஐ. நீதி மன்றம் நிராகரித்து விட்டது. 8 பேரின் பிணை மனுக்களை தொடர்ந்து நீதிபதி ஷைனி விசாரித்தார். பின்னர் அனைத்து பிணை மனுக்களையும் நிராகரிப்புச் செய்வதாக அறிவித்த அவர், 2ஜி வழக்கின் விசாரணை எதிர்வரும் 11 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தார்.

இது தி.மு.கவினர் இடையே பெரும் ஏமாற்றத்தையும், அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஏற்கனவே மூன்று முறை பிணை மனுக்கள் நிராகரிக்கப்பட்டு பல மாதங்களுக்கு மேலாக அவர் சிறையில் இருப்பது குறிப்பிடத்தக்கது.

## உயர் நீதிமன்றில் விரைவில் தி.மு.க. மேல் முறையீடு

டில்லி சி.பி.ஐ. சிறப்பு நீதிமன்றம் கனிமொழியின் பிணை மனுவை நிராகரிப்புச் செய்து விட்டதை எதிர்த்து டில்லி உயர்நீதிமன்றத்தில் தி.மு.க. மேல்முறையீடு செய்யவுள்ளது. கனிமொழிக்கு எவ்வாறெனினும் பிணை கிடைத்து விடும். அவரை கையோடு சென்னைக்கு அழைத்துச் சென்று விடலாம் என்ற நீண்ட நம்பிக்கையில் டில்லியில் முகாமிட்டிருந்தனர் தி.மு.க. தலைவர்கள்.

ஆனால் கனிமொழியின் பிணை மனு நிராகரிக்கப்பட்டதால் அனைவரும் பெரும் அதிர்ச்சி அடைந்தனர். ராசாத்தி அம்மாள் கண் கலங்கி அழுதார். கனிமொழியும் கூட தீர்ப்புக்கு முன்பு வரை உற்சாகமாக காணப்பட்டார். பின்னர் அவரும் சோகமாகி விட்டார்.

இதற்கிடையே, கனிமொழியின் பிணை மனு நிராகரிப்பை எதிர்த்து டில்லி உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவுள்ளது தி.மு.க. அங்கும் ஒரு வேளை நிராகரிக்கப்பட்டால் உச்சநீதிமன்றத்தை நாடவும் தி.மு.க. முடிவு எடுக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## டில்லியில் தீவிரவாதிகள் ஊடுருவல்: நாடாளுமன்ற வளாகத்தில் பாதுகாப்பு தீவிரம்

புதுடில்லியில் மிகப் பெரிய நாசவேலை திட்டத்துடன் பாகிஸ்தானில் இயங்கும் லஷ்கர்-இ-தொய்பா தீவிரவாதிகள் ஊடுருவி இருப்பதாக உளவுத்துறை எச்சரித்துள்ளது. மெட்ரோ ரயில் உட்பட மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள பல இடங்களில் அவர்கள் கைவரிசை காட்டக் கூடும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது. இதனால் டில்லியில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

டில்லியில் நாடாளுமன்றம் மீது கடந்த 2001 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 13 ஆம் திகதி தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினார்கள். அந்த நாளில் மீண்டும் ஒரு பெரிய தாக்குதலுக்கு திட்டமிட்டே பாகிஸ்தான் தீவிரவாதிகள் ஊடுருவி இருப்பதாக சந்தேகம் எழுந்துள்ளது.

இதையடுத்து நாடாளுமன்றத்துக்கு பாதுகாப்பு பல மடங்கு அதிகரிக்கப்பட்டுள்ளது. நவீன சோதனைக் கருவிகளுடன் பல இடங்களில் பாதுகாப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. முக்கியஸ்தர்களுக்கு வழங்கும் அடையாள அட்டைகளில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

தீவிரவாதிகள் கார்களில் மிக வேமாக வந்து நாடாளுமன்றத்துக்குள் நுழைய முயற்சி செய்யலாம் என்று உளவுத்துறை எச்சரித்துள்ளது. நாடாளுமன்ற வளாகத்துக்குள் வரும் கார்கள் 10 கி.மீ. வேகத்தில் தான் வரவேண் டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. ஒரு காருக்கும், மற்றொரு காருக்கும் 5 அடி இடைவெளி இருக்கும் வகையில் பின் தொடர வேண்டும் என்றும் சாரதிகளுக்கு அறிவுறுத்தி சுற்றறிக்கை விடப்பட்டுள்ளது.

## திரிணமுல் கட்சி தலைவராக மம்தா

திரிணமுல் காங்கிரஸ் கட்சியின் தேசிய தலைவராக மம்தா பானர்ஜி ஒரு மனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார் என்று, அந்தக் கட்சியின் பொதுச் செயலரும், மத்திய அமைச்சருமான முகுல் ராய் அறிவித்துள்ளார்.

மேற்கு வங்க மாநிலத்தில், கடந்த மே மாதம் நடந்த சட்டசபைத் தேர்தலில், 34 ஆண்டுகள் நடந்த இடது முன்னணி ஆட்சியை வீழ்த்தி, திரிணமுல் காங்கிரஸ் கூட்டணி அமோக வெற்றி பெற்றது.

இதனையடுத்து, திரிணமுல் காங்கிரஸ் தலைவர் மம்தா பானர்ஜி 54, முதல்வராக பொறுப்பேற்றுக் கொண்டார். இந்நிலையில், திரிணமுல் காங்கிரஸ் கட்சியின் தேசிய தலைவராக மம்தா பானர்ஜி ஒரு மனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக, அந்தக் கட்சியின் பொதுச் செயலரும், மத்திய அமைச்சருமான முகுல் ராய் அறிவித்துள்ளார்.

## அண்ணா நூற்றாண்டு நூலகம் மாற்றம் தமிழறிஞர்கள் அதிர்ச்சி தெரிவிப்பு

சென்னை, நவ.4

சென்னை, கோட்டூர்புரத்தில் உள்ள அண்ணா நூற்றாண்டு நூலகத்தை குழந்தைகள் நல மருத்துவமனையாக மாற்றப்பட இருப்பது அதிர்ச்சியளிப்பதாக மூத்த எழுத்தாளர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக சாகித்ய அகாதெமி விருது பெற்றவர்கள், மூத்த எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள், தமிழறிஞர்கள் ஆகியோர் நேற்று முன்தினம் புதன்கிழமை வெளியிட்ட கூட்டறிக்கையில் கூறியிருப்பதாவது:

அண்ணா நூற்றாண்டு நூலகம் இடம்மாற்றப்பட்டு குழந்தைகள் மருத்துவமனையாக்கப் போவதாக தமிழக முதல்வர் அறிவித் திருப்பதை அறிந்து அதிர்ச்சியடைகிறோம். உயர் சிறப்பு குழந்தைகள் நல மருத்துவமனை அமைப்பது குறித்து மகிழ்ச்சியடையும் அதேநேரத்தில் ஏற்கெனவே உருவாக்கப்பட்ட அண்ணா நூற்றாண்டு நூலகத்தை இடமாற்றுவதைக் கைவிட்டு, அதே இடத்தில் அந்த நூலகம் சிறப்பாக இயங்க ஆவன செய்ய வேண்டும்.

இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

சா. கந்தசாமி, அசோகமித்திரன், பொன்னீலன், இந்திரா பார்த்தசாரதி, நாஞ்சில் நாடன், பிரபஞ்சன், சிற்பி பாலசுப்பிரமணியம், எஸ். ராமகிருஷ்ணன், ஞாநி, ச. தமிழ்ச்செல்வன், மேலாண்மை பொன்னுச்சாமி, ஆசிவசுப்பிரமணியன், வாஸந்தி, இரா. நடராசன், மனுஷ்ய புத்திரன், கீரனூர் ஜாகிர்ராஜா, சு. வெங்கடேசன் ஆகியோர் கூட்டறிக்கையில் கையெழுத்திட்டுள்ளனர்.

## உலக யோகா போட்டியில் தமிழக மாணவிக்கு தங்கம்

இலங்கையில் நடந்த உலக யோகா போட்டியில், ஸ்ரீவில்லி புத்தூர் மாணவி யாமினி தேவி தங்கப்பதக்கம் பெற்றுச் சாதனை படைத்துள்ளார். இவர், விருதுநகர் மாவட் டம் ஸ்ரீவில்லிபுத்தூர் வள்ளுவர் மெட்ரிக் பாடசாலையில் ஏழாம் வகுப்பு படித்து வருகிறார்.

கடந்த மாதம் இலங்கையில் நடந்த உலக அளவிலான, யோகா சாம்பியன் ஷிப் போட்டியில், தங்கப்பதக்கம் பெற்று இந்தியாவிற்கு பெருமை சேர்த்துள்ளார்.

"முதல் முறையாக ஜப்பான், இலங்கை, சீனா உட்பட பல நாடுகளின் வீரர்கள் பங்கேற்ற போட்டியில் நானும் பங்கேற்று முதல் பரிசை பெற்றுள்ளது மகிழ்ச்சியளிக்கிறது" - என்றார் யாமினி தேவி.

## நோய்த்தடுப்பு மருந்துக்குப் பதிலாக அசிட்; பிறந்த குழந்தைகள் பல இறப்பு

### மேற்கு வங்க மருத்துவமனையில் சம்பவம்

மேற்கு வங்காளத்தில் கர்ப்பிணிப் பெண்களுக்கு நோய் தடுப்பு மருந்துக்குப் பதிலாக அசிட் வழங்கிய காரணத்தால் அங்கு 25 இற்கும் மேற்பட்ட குழந்தைகள் அண்மையில் இறந்துள்ளதாகத் தெரிய வந்துள்ளது.

மேற்கு வங்க மாநிலத்தில் உள்ள அரசு மருத்துவமனைகளில் பிறந்த 25 இற்கும் மேற்பட்ட குழந்தைகள் அடுத்தடுத்து உயிரிழந்த சம்பவம் அங்கு பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் மருத்துவர்கள் பிரசவத்தின்போது கர்ப்பிணிப் பெண்களுக்கு நோய்த் தடுப்பு மருந்துக்குப் பதிலாக அசிட்டைப் பயன்படுத்தியது தெரியவந்துள்ளது.

கடந்த திங்கட்கிழமை மூர்ஷிதாபாத் அரசு மருத்துவமனையில் ஷிகா பீபி என்பவருக்கு ஆண் குழந்தை பிறந்தது. அப்போது மருத்துவர்கள் அந்தப் பெண்ணுக்கு நோய்த் தடுப்பு மருந்துக்குப் பதிலாக அசிட் கொடுத் துள்ளது விசாரணையில் தெரிய வந்துள்ளது. இது தொடர்பாக தீவிர விசாரணை நடைபெற்று வருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிகிச்சைக்காக இந்தியாவுக்கு அழைத்து செல்வதாகக் கூறி கடத்தப்பட்டார் பெண்

## கண்டி வைத்தியசாலையில் சம்பவம்

கொழும்பு,நவ.4

புற்றுநோய்க்கான சிகிச்சைகளுக்காக இந்தியாவுக்கு அழைத்துச் செல்வதாகக் கூறிப் பெண்ணொருவர் கடத்தப்பட்ட சம்பவமொன்று நேற்றுமுன்தினம் இடம் பெற்றுள்ளது.

தம்புள்ளை - இப்பன்கடுவ பிரதேசத்தைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தயாரான ஈ.சி.காந்தி என்பவர் கடந்த மாதம் 18ஆம் திகதி கண்டி பொது வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காகச் சென்றிருந்தார்.

தம்மை வைத்தியர்களாக இனங்காட்டிக்கொண்ட சிலர் இவரின் நோயைக் குணப்படுத்துவதற்காக இந்தியாவுக்கு அழைத்துச் செல்வதாக உறுதியளித்தமையை அடுத்தே அவர் அங்கு சென்றுள்ளார்.

அதன்பின்னர், நோயாளர் அம்புலன்ஸ் ஒன்றில் தன்னை 4 பேர் கொண்ட குழு கொழும்பு நோக்கி அழைத்து வந்தனர் என்று அவர் தெரிவித்துள்ளார்.

கேகாலை - வரக்காபொல பிரதேசத்தை அண்மித்தபோது திரவ பால் பைக்கற் ஒன்றைத் தனக்கு வழங்கினர். அதன் பின்னர் தாம் மயக்கமுற்றுப் பின் சுய நினைவுக்குத் திரும்பிய வேளையில் வேறு உடை அணிவிக்கப்பட்டு தனிமையான அறையொன்றில் வைக்கப்பட்டிருந்தார் என்று அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், தன்னிடம் இரத்தம் பெறப்பட்ட பின்னர் விருப்பத்துக்கு ஒவ்வாத வகையில் தலைமுடியும் வெட்டினார்கள் என்று அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கண்டி பொது வைத்தியசாலை போன்ற பிரதான வைத்திய சாலையொன்றில் இவ்வாறான சம்பவம் இடம்பெற்றது என்று கூறுவது நம்பத் தகுந்த விடயம் அல்ல என்று மத்திய மாகாண சுகாதார பணிப்பாளர் சாந்தி சமரசிங்க தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவத்துடன், வைத்திய சாலை தொடர்புபட்டுள்ளது என்று இது வரை உறுதிப்படுத்தப்படவில்லை.

கண்டி பொதுவைத்தியசாலை வளாகத்திலேயே குறித்த வைத்தியர்களாக இனங்காட்டிய சிலரைச் சந்தித்ததாகப் பாதிக்கப்பட்ட பெண் தெரிவித்திருக்கிறார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் துரிதமாக ஆராய்ந்து ஊடகங்களுக்கு அறிவிக்கப்படும் என்று மத்திய மாகாண சுகாதாரப் பணிப்பாளர் உறுதியளித்துள்ளார். (ச-சி)

# தேரர்களைப் பிளவுபடுத்தும் நடவடிக்கையில் ஐ.தே.கட்சி

## ஜோதிரத்ன தேரர் குற்றச்சாட்டு

கொழும்பு, நவ .4

தேரர்களைப் பிளவுபடுத்தும் செயற்பாட்டையே ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவம் மேற்கொண்டு வருகின்றது என்று அமரபுர மகாநிக்காய பீடத்தின் தலைவர் கொடுகொட ஜோதிரத்ன தேரர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

தேரர்கள் கட்சியின் ஒரு உயிரூட்டமுள்ள பிரிவினர் என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனுப்பியுள்ள மகஜரிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

தேரர்கள் இல்லாமல் ஐக்கிய தேசியக்கட்சி வெற்றி பெற்ற ஒரு சந்தர்ப்பத்தை சுட்டிக்காட்ட வேண்டும்.

கட்சிக்காகச் செயற்பட்ட ஐக்கிய பிக்குகள் முன்னணியின் தலைவர் மீடியாகொட குணரத்ன தேரர் போன்றோரை நீக்கியுள்ள விடயம், சுற்றியுள்ள மாற்று மத அழுத்தங்களின் பெறுபேறின்றி ஒரு பிரதிபலன்.

எனவே மீடியாகொட குணரத்ன தேரர் உள்ளிட்ட தேரர்களுடன் கலந்துரையாடி கட்சியை முன்னோக்கிக் கொண்டு செல்லக் கூடிய திட்டம் ஒன்றை உருவாக்க வேண்டும்- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-சி)

# கரந்தெனிய சம்பவத்தில் கைதானோருக்கு விடுதலை

கொழும்பு,நவ.4

காலி - கரந்தெனிய பகுதியில் ஏற்பட்ட அமைதியின்மை தொடர்பில் கைதுசெய்யப்பட்ட ஐந்து சந்தேக நபர்களும் தலா ஒரு லட்சம் ரூபா சரீரப் பிணையில் நேற்று முன்தினம் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இந்த சந்தேகநபர்கள் நேற்று முன்தினம் அல்பிட்டிய நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டபோது சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்டனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், பொலிஸ் அத்தியட்சகருமான அஜித் ரோஹண தெரிவித்தார்.

மற்றுமொரு சந்தேகநபர் மக்களை ஒன்றுதிரட்டிய குற்றத்தை ஒப்புக்கொண்ட காரணத்தினால் 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட மேலும் இரண்டு சந்தேக நபர்கள் தொடர்பிலான வழக்கு விசாரணை எதிர்வரும் 21ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (ச-சி)

# நல்லூர் பிரதேசத்துக்கு வெற்றிக் கேடயம்

யாழ்ப்பாணம், நவ.4

உள்ளூராட்சி அமைச்சாலும் திணைக்களத்தாலும் 2009- 2010 ஆம் ஆண்டுக்கான முகாமைத்துவப் போட்டியில் மாகாண மாவட்ட மட்டத்தில் முதலிடம் பெற்ற நல்லூர் பிரதேச சபைக்கான வெற்றிக் கேடயத்தை ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி வவுனியா நகர சபை மண்டபத்தில் வைத்து வழங்கியுள்ளார்.

வட மாகாண உள்ளூராட்சி சபைகளுக்கான கண்காட்சி மற்றும் மகா நாட்டின் இறுதி நாள் நிகழ்வின்போதே இதனை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இம்முறை இடம்பெற்ற மாகாணக் கண்காட்சி போட்டியிலும் நல்லூர் பிரதேச சபை முதலிடத்தைப் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

# சிகரெட் விலையை 50 வீதத்தால் அதிகரிக்க கோருகின்றது புகையிலை அதிகாரசபை

கொழும்பு,நவ.4

சிகரெட் பாவனையைக் கட்டுப்படுத்துவதற்காக சிகரெட் விலையை 50 சதவீதத்தினால் அதிகரிக்குமாறு புகையிலை, மதுபானம் தொடர்பான தேசிய அதிகார சபையானது அரசிடம் வலியுறுத்தியுள்ளது.

சிகரெட் விலையை அதிகரிப்பதனால் அரசுக்கு புகையிலைப் பொருள்கள் மூலமான வரி 16 பில்லியன் ரூபாவால் அதிகரிக்கும் என்று புகையிலை, மதுபானம் தொடர்பான தேசிய அதிகார சபையின் தலைவர் கார்லோ பொன்சேகா தெரிவித்துள்ளார்.

சிகரெட் விலை அதிகரித்தால் மொத்த புகைத்தல் பொருள்களின் பாவனை குறைவடைவது உலகெங்கும் நிரூபிக்கப்பட்டுள்ளது என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார். சிகரெட் பாவனையாளர்களில் பெரும்பாலானோர் குறைந்த வருமானம் பெறும் குழுக்களைச் சேர்ந்தவர்கள். சிகரெட் விலை 10 சதவீதத்தினால் அதிகரிக்கும் ஒவ்வொரு தடவையும் சிகரெட் பாவனை 5 சதவீதத்தால் குறைவடைகிறது என்று அவர் கூறியுள்ளார்.

20 ரூபாவாக இருந்த சிகரெட் விலை கடந்த வாரம் 3 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டது. அதை 30 ரூபாவாக அதிகரிக்க வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

மக்களின் வாங்கும் சக்தி அதிகரிக்கும் நிலையில் சிகரெட் விலையும் அதிகரிக்கப்பட வேண்டும். ஆனால் அது நடைபெறுவதில்லை என்று அவர் கூறியுள்ளார். தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப் பாட்டுச் சபையின் புள்ளிவிவரங்களின்படி கடந்த வருடம் அரசுக்கு புகைத்தல் பொருள்கள் மூலம் 725 பில்லியன் ரூபா வரி கிடைத்துள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச-சி)

# எங்களுக்கேன்...

(14 ஆம் பக்கத் தொடர்ச்சி)

''குழந்தைகளைப் பராமரிப்பதற்கு சர்வதேச சட்ட விதிமுறைகளின்படி தேவையான பராமரிப்பாளர்கள் அங்கு நியமிக்கப்படவில்லை. ஒரு பராமரிப்பாளர் இரண்டு குழந்தைகளை மிஞ்சி மிஞ்சி மூன்று குழந்தைளையே பராமரிக்க முடியும் ஆனால் இங்கு ஒருவர் 10 குழந்தைகளைப் பராமரிக்கும் நிலை. அங்கு ஈக்கள் மொய்திருந்ததைப் பார்த்த போது மிக அருவருப்பாக இருந்தது. இல்லத்துக்குச் சென்று அந்தக் குழந்தைகளைப் பார்வையிட்டு சிகிச்சையளிக்கும் படியோ அங்குள்ள பராமரிப்பாளர்களுக்கு குழந்தைகளைப் பராமரிப்பது பற்றிய பயிற்சிகளை வழங்கும் படியோ அதற்குப் பொறுப்பானவர்கள் வைத்திய சாலைத் தரப்பினரிடம் இதுவரை கோரிக்கை முன்வைத்திருக்கவில்லை. அவர்கள் கோரிக்கை விடுக்கும் பட்சத்தில் பராமரிப்புப் பற்றிய பயிற்சிகளை வழங்கமுடியும்.

அங்குள்ள மூன்று வயதுக்குழந்தையொன்று உரிய கவனிப்பின்றி மன வளர்ச்சி குன்றிய நிலையில் காணப்படுகின்றது. மன ஆற்றலை வளப்படுத்துவதற்கான பயிற்சிகள் அந்தக் குழந்தைகளுக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை.

இல்லத்திலிருந்து சுகயீனம் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட குழந்தை இறந்து விட்டது. அந்தக் குழந்தை பிறந்து 45 நாள்களாகியும் 100 கிராம் நிறை மட்டுமே அதிகரித்திருக்கிறது இது பராமரிப்பின் குறைபாட்டைத் தெளிவாகக் காட்டுகிறது'' என்கிறார். இந்த இல்லம் மாவட்ட நன்னடத்தைச் சிறுவர் பராமரிப்புத் திணைக்களத்தின் கீழேயே வருகிறது. அந்தத் திணைக்கள வடமாகாண ஆணையாளர், மாவட்ட அதிகாரி ஆகியோரைத் தொடர்பு கொண்டுகேட்டபோது கைவிரித்து விட்டார்கள். எங்கள் அதிகாரத்தில் ஊடகங்களுக்கு நாங்கள் கருத்துத்தெரிவிக்க முடியாது என்று அவர்கள் கூறிவிட்டார்கள்.

வடமாகாணப் பிரதம செயலாளர் ஆ.சிவசுவாமியுடன் தொடர்புகொண்டு இதுபற்றி உதயன் கேள்வி எழுப்பியது. முதலில் தொடர்புகொண்டபோது விவரங்களைத் தொலைநகலில் அனுப்புகின்றோம்- என்றார். சில நாள்கள் கழித்துத் தொடர்பு கொண்டபோது இதில் கருத்துத் தெரிவிக்க எதுவும் இல்லை என்றார்.

இந்த இல்லத்தில் இருந்த குழந்தையின் இறப்புக்கான காரணம் தொடர்பாக போதனா வைத்தியசாலைச் சட்ட வைத்திய அதிகாரி எஸ்.சிவரூபனுடன் தொடர்பு கொண்டுகேட்டபோது, கருத்துத் தெரிவிக்க அவரும் மறுத்துவிட்டார். இந்த குழந்தையை அச்சுவேலியைச் சேர்ந்த பெண் ஒருவர் பெற்றெடுத்த பின்னர் அரச இல்லத்தில் ஒப்படைத்தார். குழந்தையின் தந்தையால் ஏமாற்றப்பட்டதால் அதனை வளர்க்க அவர் விரும்பி இருக்க வில்லை. அதனால்தான் குழந்தை அரச சிறுவர் இல்லத்தில் சேர்க்கப்பட்டது. அங்குள்ள ஒவ்வொரு குழந்தைக்குப் பின்னாலும் இது போன்ற ஒரு கதையுண்டு. இந்தப் பிறப்புக்காக அந்தக் குழந்தைகள் ஏங்க வில்லை. பின்னர் அரச இல்லம் வர வேண்டும் என்று அவை அடம் பிடிக்கவும் இல்லை. பின்னர் ''ஏன் எங்களுக்கு இந்த நகர வாழ்க்கை'' என்று கேட்கின்றன குழந்தைகள். எந்த அதிகாரி இதற்குப் பதில் சொல்வார்?

## ஐந்தாவது பிறந்ததின வாழ்த்துக்கள்

சித்தன்கேணி சிவன் கோயில்
ஸ்ரீ. ஸ்ரீமதி. சபா. வாசுதேவக்குருக்கள்
சாருலதா தம்பதியரின் செல்வப்புதல்வி



### சிவாத்மிகா

இன்று [04.11.2011] ஐந்தாவது பிறந்த தினத்தை சிவசிதம்பரேஸ்வரரின் அருளுடனும் பெரியோர்களது ஆசியுடனும் தனது இல்லத்தில் கொண்டாடுகின்றார். இவர் பல்கலையும் கற்று நீடூழி காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்
அன்புத்தங்கை ஸ்ரீநயா,
அப்பா, அம்மா, தாத்தாமார், பாட்டிமார்,
மாமாமார், அத்தைமார் பெரியப்பாமார்,
பெரியம்மாமார், சித்தப்பா, சித்தி,
மைத்துனன்,மைத்துனிமார்,
அண்ணாமார், அக்காமார்,
தங்கைமார், தம்பி, பூட்டன், பூட்டி

சிவன்கோயில்,
சித்தன்கேணி

## நீதிவான் நீதிமன்றம்- யாழ்ப்பாணம்

### அறிவித்தல்

07.11.2011 திங்கட்கிழமை பொது விடுமுறை தினமாகப் பிரகடனப்படுத்தப்பட்டதால் அன்றையதினம் கூப்பிடப்பட வேண்டிய வழக்குகள் அனைத்தும் 12.12.2011 ஆம் திகதி திங்கட்கிழமை கூப்பிடப்படும் என் பதை நீதிவான் நீதிமன்றப் பதிவாளர் அறிவித்துள்ளார்.

பதிவாளர்

## ஆள் தேவை

கல்லுடைக்கும் ஆலை ஒன்றுக்கு காவலாளி தேவை. 45வயதுக்கு மேற்பட் டவராக இருத்தல் விரும்பத்தக்கது. சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப் படும்.

தொடர்பு: 0212240286

## திருத்தி வாசிக்கவும்

நேற்று (03.11.2011) வியாழக்கிழமை பக்கம் 28 இல் பிரசுரமாகிய திசைகாட்டி விளம்பரத்தில் 0212229016 என்னும் தொலைபேசி இலக்கத்தை 0212219016 எனத் திருத்தி வாசிக்கவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லிபியாவுக்குப் பின் ஈரானைக் குறிவைத்துள்ள அமெரிக்கா



**கிலாரி கிளின்ரனின் பேட்டியில் அம்பலம்**

வட ஆபிரிக்க நாடான லிபியாவைத் தங்களின் கட்டுக்குள் கொண்டு வந்துவிட்ட அமெரிக்காவின், கவனம் தற்போது ஈரான் மீது திரும்பியுள்ளது. ஈரான் அதிபரான அகமது நிஜாத் அமெரிக்க மேற்குலக எதிர்ப்புக் கொள்கை கொண்டவர் என்பதாலேயே இப்போது அவரைக் குறிவைத்துள்ளது அமெரிக்கா.

கடாபியின் மரணம் குறித்த வெற்றிச் செய்தி தொடர்பாக பெர்ஷியன் தொலைக் காட்சி ஒன்றுக்கு வழங்கிய பேட் டியில் அமெரிக்க வெளிவிவாகரத் துறை அமைச்சர் ஹிலாரி கிளின்டன் ஈரான் மீதான தமது கவனத்தை வெளிப்படையாகவே தெரிவித்துளள்ளார்.

அந்தப் பேட்டியில் இது தொடர்பாக அவர் தெரிவித்ததாவது ;

அதிபர் ஒபாமா ஆட்சிக்கு வந்த உடனேயே ஈரானிய ஆட்சியாளர்களுடன் பேசுவ தற்கும் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்வதற்கும் முயற்சி எடுக்கத் தயார் என்பதைத் தெளிவு படுத்தியிருந்தார். ஆனால் அந்த நாட்டில் யார் முக்கியமான முடிவுகளை எடுக்கிறார்கள் என்பதையே புரிந்து கொள்ள முடியாமல் இருக்கிறது. ஆதலால் அதிபர் ஒபாமா முயன்றிருந்தும் பலன் ஏற்படவில்லை என்று கிளின்டன் குறிப்பிட்டார்.

இத்துடன் ஈரான் ஓர் இராணுவ சர்வாதிகாரக் கட்டமைப்பாக உருமாறிவருகிறது என்று தான் நினைப்பதாக அவர் கூறியுள் ளார். மேலும் ஈரானிய அரசுடன் உறவாட முயன்றும் பலன் தராத நிலை யில், ஈரானிய மக்களுடன் வேறு வழிகளில் உறவாட அமெரிக்கா முயற்சிகள் எடுத்துவருவதாக அவர் தெரிவித்தார். அந்த நோக்கத்தில் ஈரானிய மக்களுக்கென இணையத்தில் அமைந்திருக்கக்கூடிய தூதரகம் ஒன்றை இந்த வருஷக் கடைசிக்குள் அமெரிக்கா ஏற் படுத்த இருப்பதாகக் குறிப்பிட்ட ஹிலாரி ஈரானிய அரசுக்கு எதிராக இனி அந்த நாட்டில் சீர்திருத்தப் போராட்டம் செய்ய விரும்புவோர் முன்கூட்டியே சர்வதேச உதவிகளை நாடுதல் நலம் என்றும் தெரிவித்துள்ளார். (ந)

# நகைச்சுவைப் பத்திரிகை அலுவலகம் மீது பிரான்ஸில் பெற்றோல் குண்டு வீச்சு

பிரான்ஸின் பிரபல நகைச்சுவைத் தாக்குதல் நடத் தும் பத்திரிகையான 'சார்லி ஹெப்டோ' மீது இனந்தெரியாத நபர்கள் நேற்று பெற்றோல் குண்டு வீசித் தாக்குதல் நடத்தியுள்ளனர். இதனால் அலுவலகத்திலிருந்த அனைத்து பெறுமதியான பொருள்களும் நாசமாகியுள்ளதாகவும், இனி மேல் எந்தவித பதிப்பும் பிரசுரிக்கமுடியாத நிலை தோன்றியுள்ளதாகவும் குறித்த பத்திரிகை அலுவலகம் தெரிவித்துள்ளது.

தமது அடுத்த பிரதிக்கு, முஹம்மது நபி அவர்களே, எழுத்து இயக்குநராக இருப்பார் என நகைச்சுவையுடன், நேற்றுமுன்தினம் சார்லி ஹெப்டோ வாராந்திர பத்திரிகையில் ஒரு தகவல் வந்திருந்தது. இதற்கு மறுதினம் இவ்வாறான பெற்றோல் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

துனிசியாவில் இஸ்லாமிய கட்சி சட்டமன்றத் தேர்தலில் பெற்ற மாபெரும் வெற்றியை குறிப்பிட்டே இப்பத்திரிக்கை இப்படி நகைச்சுவையாகத் தகவல் வெளியிட்டிருந்தது. மேலும் அட்டைப்படத்தில், நீங்கள் சிரித்து சிரித்து இறக்காவிடின் உங்களுக்கு 100 கசையடிகள் என நபி கூறுவது போலவும் உள் பக்கங்களில், கோமாளிகளின் சிவப்பு மூக்கு அடையாளங்களுடன் நபியைக் குறிப்பிட்டு வரையப்பட்ட கார்ட்டூன்களுமே, இந்தத் தாக்குதலுக்கு காரணமாக இருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.


எனினும், இது ஊடக சுதந்திரத்துக்கு எதிரான தாக்குதல் எனப் பிரான்ஸ் பிரதமர் தனது கடும் கண்டனத்தை வெளியிட்டுள்ளார். (ந)

## பான் கீ - மூன் முதன் முதலாக லிபியா பயணம்

திரிபோலி, நவ.4

முன்னாள் அதிபர் கடாபியின் சர்வாதிகார ஆட்சி முடிவுக்கு வந்ததையடுத்து ஐ.நா. பொது செயலாளர் பான்கிமூன் முதன்முறையாக தனது லிபியப் பயணத்தை மேற்கொண்டுள்ளார் .

இவரது இந்தப்பயணம் குறித்து ஐ.நா.செய்தி தொடர்பாளர் மார்ட்டின் நெஸிர்கி தெரிவித்ததவது; லிபியப் பயணம் மேற்கொண்டுள்ள செயலாளர் பான்கீ மூன் முதலில் அங்குள்ள தேசிய புரட்சிப் படையினரை சந்தித்து பேசவுள்ளார்.இந்தப் பேச்சு லிபியாவை வலிமைமிக்க புதியதொரு வர்த்தக தேசமாக மாற்றும் என்பதில் சந்தேகமில்லை என்றார். (ந)



லிபியாவுக்கு வருகை தந்த ஐ.நா.பொதுச் செயலர் பான் கீ - மூன் (இடது) திரிபோலியில் நடந்த பத்திரிகையாளர் கூட்டத்தில் கலந்துகொண்டார். அருகில் லிபிய இடைக்காலக் கவுன்சில் அரசின் தலைவர் முஸ்தபா அப்துல் ஜலீல்.

## அகதிகளுடன் சென்ற படகு கவிழ்ந்து 6 பேர் சாவு: 20 பேரை காணவில்லை

ஆஸ்திரேலியாவுக்கு அகதிகளுடன் சென்றுகொண்டிருந்த படகு கவிழ்ந்ததில் இரண்டு குழந்தை கள் உட்பட 6 அகதிகள் உயிரிழந்தனர். 20 பேரைக்காணவில்லை . இந்தத் தகவலை இந்தோனேசிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பாக மேலும் தெரிய வருவதாவது:

70 பேருடன் ஆஸ்திரேலியா நோக்கிச் சென்றுகொண்டிருந்த படகு ஜாவாவின் கரையோரத்தில் கவிழ்ந்தது. இதில் கப்பலில் இருந்த 46பேர் கடலில் தத்தளித்து கொண்டிருந்த போது மீட்கப்பட்டுள்ளனர் காணமற்போன வர்களை தேடும் பணியில் மீட்புப் படையினர் ஈடுபட்டுள்ளனர் . என்றும் தெரிய வருகிறது. ஆப் கானிஸ்தான், ஈராக், ஈரான் மற்றும் பாகிஸ்தான் நாடுகளை சேர்ந்தஅகதிகளுடன் கிறிஸ்மஸ் தீவை நோக்கிச் சென்று கொண்டிருந்த படகே கடலில் மூழ்கியதாகவும் பொலிஸ் ஆணையாளர் பற்மா நோயர் தெரிவித்தார். (ந)

## 30 துண்டுகளாகப் பிளந்த மண்டையோட்டை வெற்றிகரமாகப் பொருத்திய மருத்துவர்கள்



வாகன விபத்தொன்றில் 30 துண்டுகளாகப் பிளவடைந்த இளைஞர் ஒருவரது மண்டையோட்டை மிகவும் சிக்கலான அறுவைச் சிகிச்சை மூலம் மருத்துவர்கள் மீளப் பொருத்திய சம்பவமொன்று பிரிட்டனில் இடம்பெற்றுள்ளது.

இதுதொடர்பாக மேலும் தெரியவருவதாவது:

9 ரைட்டானியத் தடுகள் 33 திருகாணிகள் என்பவற்றைப் பயன்படுத்தி 5 மணி நேர சிக்கலான சிகிச்சையை மேற்கொண்டு ஜக் மார்ரின் டேல் என்ற இளைஞரின் மண்டையோட்டை லண்டன் றோயல் மருத்துவமனையைச் சேர்ந்த மருத்துவர்கள் ஒருங்கிணைத்துள்ளனர்.

இந்தச் சிகிச்சையில் ஈடுபட்ட மருந்துவர் சிமொன் ஹொல்மஸ் கூறுகையில்:

அந்த அறுவைச் சிகிச்சையை அடுத்து 3 மாதங்கள் கோமா நிலையிலிருந்த ஜக் 9 மாதங்கள் இடம்பெற்ற மருத்துவக் கவனிப்பையடுத்து பூரணமாகக் குணமாகியுள்ளார் எனத் தெரிவித்துள்ளார். (ந)

# வெள்ளத்தில் பாய்ந்தது மின் 50 பேர் துடிதுடித்துச் சாவு

**தாய்லாந்தில் துயரம்**

பாக்கொக்,நவ.4

வெள்ளப் பெருக்கில் உயிரையும் உடைமையையும் காத்துக் கொள்ள சூழ்ந்திருக்கும் வெள்ள நீரையும் பொருள் படுத்தாமல் கசிந்திருந்த மின்சாரத்தைப் பற்றியும் அறியாமல் அதனூடே நடந்து சென்றவர்களில் 50 பேர் மின்சாரம் தாக்கியதில் மரணம் அடைந்துள்ளனர். இந்தத் தகவலை நோய் தடுப்புத்துறை தலைமை அதிகாரி கூறியுள்ளார்.

இதன்காரணமாக வெள்ளநீரின் வழியாக நடந்து செல்வோர் கூடுதல் கவனமுடன் செல்லுமாறு அவர் அறிவுறுத்தியுள்ளார்.

நேற்று முன்தினம் தாய்லாந்து வெள்ளப்பெருக்கால் 385 பேர் மரணமடைந்ததாக கூறப்பட்டிருந்த நிலையில் தற்போது வந்துள்ள தகவலால் மேலும் 42 பேர் வெள்ளத்துக்கு பலியாகி இருப்பது தெரிய வந்துள்ளது.

இந்தநிலையில் மதகுகளில் எவ்வளவு நீரைத் திறந்து விடுவது என்பது குறித்து தாய்லாந்து பிரதமர் யிங்லக்ஷின வத்ர மற்றும் பாங்கொக் அதிகாரிகள் இடையே மோதல் வெடித்துள்ளது.

நாட்டில் அவசர நிலை பிரகடனம் செய்ய வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் விடுத்த கோரிக்கையையும் பிரதமர் ஷினவத்ர நிராகரித்து விட்டார். அவசர நிலை பிரகடனம் செய்ய நேர்ந்தால் பெரும்பான்மை யான அதிகாரங்கள் ராணுவத் திடம் சென்றுவிடும் முக்கிய அதிகாரங்கள் ராணுவத்தினரி டம் சென்றுவிட்டால் நாட்டில் நிச்சயமற்ற பதற்றமான சூழ் நிலை உருவாகும் என்பதால் பிரதமர் யிங்லக் இந்தக் கோரிக் கையை ஏற்றுக் கொள்ளவில்லை என்று கூறப்படுகிறது.

இதேவேளை இந்த மோசமான வெள்ளப் பேரிடரில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 427 ஆக உயர்ந்துள்ளது. (ந)

## எரிவாயு நிலையம் அருகே குண்டு நிரப்பிய வாகனம் வெடிப்பு

சீனாவின் தென்மேற்குப் பகுதியில் உள்ள குய் மாகா ணத்தில் எரிவாயு நிலையம் அருகே வெடிபொருள்கள் நிரம்பிய இரண்டு வாகனங்கள் வெடித்ததில் 7 பேர்உயிரிழந்துள்ளனர்; 200 பேர் காயமடைந்தனர்.

நேற்று ஏற்பட்ட இந்த விபத்தில் காயமடைந்த 200 பேரும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதில் 20 பேரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாக சீன அதிகாரிகள் தெரிவித்தனர்.

70 மெட்ரிக் தொன் வெடிபொருள்களுடன் வந்த இரண்டு வாகனங்கள் திடீரென வெடித்தனால் அருகிலிருந்த வீடுகள், கார்களும் கடும் சேதத்துக்குள்ளாகின. (ந)

## பிலிப்பைன்ஸ் நாட்டவருக்குத் தடை

பிலிப்பைன்ஸ் நாட்டு மக்கள் ஆப்கானிஸ்தான், லிபியா, ஈராக், சூடான், சாட், பாகிஸ்தான் உட்பட 41 நாடுகளில் பணியாற்றுவதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது. வெளிநாடுகளுக்கு பணிபுரியச் செல்லும் பிலிப்பனோ மக்களைக் காத்திடும் முறையான சட்டங்கள் இல்லாத நாடுகளாக அவை கருதப்பட்டதால்அங்குசென்று பணிபுரிய தடை விதிக்கப்பட்டுள்ளது. (ந)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
04 நவம்பர் 2011 வெள்ளிக்கிழமை

# ஆசிரியர்களிடையேயான போட்டியில் அளவெட்டி ஆசிரியர்களுக்கு பதக்கங்கள்

யாழ்ப்பாணம், நவ. 4

அகில இலங்கை ஆசிரியர்களுக்கான விளையாட்டு விழாவில் அளவெட்டி அருணோதயாக் கல்லூரி, அளவெட்டி அருணாசலம் வித்தியாலயம் ஆகியவற்றின் ஆசிரியர்கள் பதக்கம் பெற்றுள்ளனர்.



ஆர்.பாகீஸ்வரன் எஸ்.திருமாவளவன்

கல்வி அமைச்சு நடத்திய அகில இலங்கை ஆசிரியர்களுக்கான விளையாட்டு விழா கடந்த வாரம் நுவரெலியா பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

இதில் அளவெட்டி அருணோதயக் கல்லூரி ஆசிரியரான பாகீஸ்வரன் குண்டு போடுதல் போட்டியில் 9.77 மீற்றர் தூரத்துக்கு எறிந்து முதலாமிடத்தைப் பெற்று தங்கப்பதக்கத்தையும், பரிதி வட்டம் எறிதல் போட்டியில் 25 மீற்றர் தூரத்துக்கு எறிந்து முதலாமிடத்தைப் பெற்று தங்கப்பதக்கத்தினையும் ஈட்டி எறிதல் போட்டியில் 40 மீற்றர் தூரத்துக்கு எறிந்து இரண்டாமிடத்தையும் பெற்றுள்ளார்.

இவர் 2009, 2010 ஆம் ஆண்டு இடம்பெற்ற ஆசிரியர்களுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டிகளிலும் குண்டு, ஈட்டி, தட்டு எறிதல் போட்டியில் தங்கப் பதக்கம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

அளவெட்டி அருணாசலம் வித்தியாலய ஆசிரியரான எஸ். திருமாவளவன் நீளம் பாய்தல் போட்டியில் 5.90 மீற்றர் தூரத்துக்குப் பாய்ந்து தங்கப் பதக்கத்தையும் 4x400 மீற்றர் அஞ்சல் ஓட்டப்போட்டியில் தங்கப்பதக்கத்தையும் உயரம் பாய்தல் போட்டியில் 1.65 மீற்றர் உயரத்துக்குப் பாய்தும், முப்பாய்ச்சல் போட்டியில் 11.80 மீற்றர் தூரத்துக்குப் பாய்ந்து வெள்ளிப் பதக்கத்தையும் பெற்றுக் கொண்டார்.

இவர் 2010 ஆம் ஆண்டு நடைபெற்ற ஆசிரியர்களுக்கான போட்டியில் 4x400 மீற்றர் அஞ்சல் ஓட்டப் போட்டியிலும், தங்கப் பதக்கத்தையும் கரப்பந்தாட்டப்போட்டி, உயரம்பாய் தல், முப்பாய்ச்சல் போட்டிகளில் வெள்ளிப்பதக்கங்களையும் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ம-23)

# மத்தியஸ்தர்களுக்கான பரீட்சை டிசெம்பரில்

யாழ்ப்பாணம், நவ. 4

டிசெம்பர் மாதம் 17 ஆம் திகதி உதைபந்தாட்ட மத்தியஸ்தர்களுக்கான பரீட்சை இடம்பெறவுள்ளது.

இந்தப் பரீட்சையில் பங்குபற்றவுள்ளோருக்கான ஆயத்த வகுப்புக்கள் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு புனித சாள்ஸ் மகா வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளன.

ஆகவே ஆயத்த வகுப்பில் பங்கு கொள்ளவுள்ளோர் நேரகாலத்துடன் ஆயத்த வகுப்புக்குச் சமுகம் தருமாறும் கடந்த உதைபந்தாட்ட மத்தியஸ்தர் பரீட்சையில் சித்தியடைந்த மத்தியஸ்தர்களையும் தவறாது சமுகம் தருமாறும் உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்க செயலாளர் அஜித்குமார் கேட்டுள்ளார். (ம-23)

# மாற்றுவலுவுள்ளோர் கரப்பந்தாட்டம்

யாழ்ப்பாணம், நவ. 4

மத்திய விளையாட்டுத்துறை அமைச்சால் கிளிநொச்சியில் மாற்று வலுவுள்ளோர்களுக்கான கரப்பந்தாட்டம் (சிற்றிங் வொலிபோல்) பயிற்சி முகாம் 5, 6 ஆம் திகதிகளில் கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலகத்துக்கு முன்பாகவுள்ள உள்ளக விளையாட்டரங்கில் இடம்பெறவுள்ளது.

இதில் 5 ஆம் திகதி காட்சி போட்டிகள் காலை 8 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணிவரை இடம்பெறும்.

6 ஆம் திகதி விளையாட்டு உத்தியோகத்தர்கள் பயிற்றுநர்களுக்கான பயிற்சி காலை 8 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணிவரை இடம்பெறவுள்ளது என்று நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (ம-23)

# உலகக் கிண்ணக் கபடிப் போட்டி இந்தியாவின் பஞ்சாப் நகரில் ஆரம்பம்

## 13 நாடுகளின் அணிகள் மோதுகின்றன



உலகக்கிண்ணக் கபடிப்போட்டி கடந்த செவ்வாய்க்கிழமை இந்தியாவின் பஞ்சாபின் பத்தின்டா நகரில் ஆரம்பமாகியது.

செவ்வாய்க்கிழமை ஆரம்பமான கபடிப்போட்டி எதிர்வரும் 20 ஆம் திகதி வரை இடம் பெறவுள்ளது. இந்தப்போட்டியில் இலங்கை, இந்தியா, ஆர்ஜென்ரீனா, பாகிஸ்தான், அமெரிக்கா, கனடா, இங்கிலாந்து, இத்தாலி, நோர்வே, ஆப்கானிஸ்தான், ஆஸ்திரேலியா, ஜேர்மனி, ஸ்பெயின் போன்ற 13 நாடுகளின் அணிகள் பங்கு பற்றுகின்றன. முதலாம் இடத்தைப் பெறும் அணிக்கு 2 கோடி ரூபாவும் இரண்டாமிடத்தைப் பெறும் அணிக்கு ஒரு கோடிரூபாவும் மூன்றாமிடத்தைப் பெறும் அணிக்கு 51 லட்சம் ரூபாவும் இந்திய ரூபாவில் பரிசாக வழங்கப்படவுள்ளது.

இதைத்தவிர போட்டியில் பங்கு கொள்ளும் அணிகளுக்கு 10 லட்சம் ரூபா வழங்கப்படவுள்ளது. முன்னர் முதல் இடத்தை பெறும் அணிக்கு ஒருகோடி ரூபாவே வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்ட பின்னர் அது மேலும் அதிகரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-23)



மாற்று ஆற்றலுடைய மாணவர்களுக்கான மாவட்ட மட்ட விளையாட்டுப் போட்டி கிளிநொச்சி மத்திய கல்லூரியில் கடந்த வாரம் இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் மாணவர் ஒருவருக்கு பரிசில் வழங்கிக் கௌரவிக்கிறார். (ம-23)

# கறுப்புப்பட்டிக்கான தேர்வு



யாழ்ப்பாணம், நவ. 4

இலங்கைக் கராத்தே சம்மேளனத்தால் யாழ். மாவட்டத்தில் நடத்தப்பட்ட முதலாவது தேசிய கறுப்புப்பட்டித் தேர்வு கடந்த மாதம் யாழ். அடைக்கல அன்னை ஆலய மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்தத் தேர்வில் தோற்றிய யாழ். பல்கலைக்கழக மாணவர்களான வி.நவநீதன், எம்.துஷ்யந்தன், ஆர்.கருணாநிதி, கே.விஜிகரன் ஆகியோர் விசேட சித்தி அடைந்துள்ளனர். (ம-23)

# முன்பள்ளி மாணவரின் போட்டிகள்

யாழ்ப்பாணம், நவ.4

வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களில் உள்ள முன்பள்ளி மாணவர்களிடையே "விளையாட்டல்ல விளையாட்டு" சிறுவர்கள் விளையாட்டு விழா கடந்த வாரம் வவுனியா தமிழ் மகா வித்தியாலயத்தில் வடமாகாணக் கல்வி அமைச்சின் பிள்ளைப்பராய அபிவிருத்தி உதவிக் கல்விப் பணிப்பாளர் செல்வி ஜெ.தம்பையா தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக வர்த்தக மற்றும் தொழில்துறை அமைச்சர் றிசாட் பதியுதீன், வடமாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி ஆகியோர் கலந்து கொண்டனர்.

சிறப்பு விருந்தினராக வடமாகாண ஆளுநரின் செயலாளரும் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளருமான இ.இளங்கோவன் கலந்து கொண்டார்.

இந்த நிகழ்வில் வவுனியா, மன்னார் மாவட்டங்களைச் சேர்ந்த 600 இற்கு மேற்பட்ட சிறுவர்கள் கலந்து கொண்டனர். (ம-23)

# கராத்தே சம்மேளனப் போட்டியில் வெண்கலம் வென்ற யாழ். வீரன்




இலங்கைக் கராத்தே சம்மேளனத்தால் நடத்தப்பட்ட தேசிய மட்ட கராத்தே சுற்றுப்போட்டியில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த எஸ்.சிவராசா வெண்கலப் பதக்கத்தைப் பெற்றுக்கொண்டார்.

கடந்த வாரம் கொழும்பு சுகததாஸ விளையாட்டு உள்ளக அரங்கில் இடம்பெற்ற இந்தப் போட்டியில் இவர் 18 வயதுப் பிரிவுப் போட்டியில் பங்குபற்றி வெண்கலப்பதக்கத்தைப் பெற்றுக் கொண்டார். இருபாலை சிறுவர் கிராமம் விடுதியில் பயிற்சியைப் பெற்று வருவதோடு மேலதிக பயிற்சியை சுண்டுக்குளி கிறின் பீல்ட் கராத்தே கழகத்தில் சென்சேய் எஸ்.விஜயராஜிடம் பெற்று வருகின்றார். (ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கா, டில்ஷானின் ஆட்டத்தில் இலங்கை வலுவான நிலையில்

இலங்கை, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான மூன்றாவது டெஸ்ட் ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடி வரும் இலங்கை அணி அணித்தலைவர் டில்ஷான் மற்றும் முன்னாள் அணித்தலைவர் சங்ககார இருவரது அபார ஆட்டத்தின் மூலம் வலுவான நிலையை அடைந்தது. நேற்றைய ஆட்டநேர முடிவின் போது இலங்கை அணி தனது முதலாவது இன்னிங்ஸிற்காக 2 இலக்குகளை இழந்து 245 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டுள்ளது.

இலங்கை பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான மூன்று டெஸ்ட் ஆட்டங்கள் கொண்ட தொடர் இடம்பெற்று வருகின்றது. முதலாவது டெஸ்ட் சமநிலையிலும் இரண்டாவது டெஸ்டில் பாகிஸ்தான் அணியும் வெற்றி பெற்றிருந்தது. இந்த நிலையில் தொடரைச் சமப்படுத்த இலங்கை அணி வென்ாக வேண்டிய கட்டாயத்தில் களம் புகுந்தது. சார்ஜா மைதானத்தில் நேற்றைய தினம் மூன்றாவது டெஸ்ட் ஆட்டம் ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணியின் தலைவர் டில்ஷான் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார்.

இலங்கை அணியின் துடுப்பாட்ட வரிசை மாற்றம் செய்யப்பட்டே நேற்று களமிறக்கப்பட்டது. ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக பரணவிதாரன மற்றும் அணித்தலைவர் டில்ஷான் களமிறங்கினர். உமர் குல் வீசிய முதலாவது பந்து பரிமாற்றத்தின் மூன்றாவது பந்தில் இலங்கை சார்பில் பரணவிதாரன முதலாவது நான்கு ஓட்டத்தை விளாசி கணக்கைத் தொடக்கி வைத்தார். இருப்பினும் ஐந்தாவது பந்து வீச்சிலேயே பரணவிதாரன யுனிஸ்கானிடம் பிடிகொடுத்து வெளியேறினார்.

வழமை போன்று சறுக்கலுடன் ஆரம்பமானது இலங்கையின் துடுப்பாட்டம். தொடர்ந்து நுழைந்த சங்ககார பொறுப்புணர்வுடன் டில்ஷானுடன் இணைந்து துடுப்பெடுத்தாடினார். இவர்களது நிதான ஆட்டத்தின் மூலம் இலங்கை அணி மேலதிக இலக்குகள் எதனையும் இழக்காது ஓட்டங்களைச் சேர்த்தது. தேநீர் இடைவேளை வரை சிறப்பாக ஆடிய இந்த ஜோடி, 170 ஓட்டங்களை அணிக்காகப் பெற்றுக் கொடுத்திருந்தது. டில்ஷான் 90, சங்கா 72 ஓட்டங்களுடனும் களத்திலிருந்தனர்.



தேநீர் இடைவேளை முடிந்து ஆட்டம் ஆரம்பமான சிறிது நேரத்தில் துரதிஷ்டவசமாக டில்ஷான் ஆட்டமிழந்தார். இரண்டாவது இலக்குக்காக 173 ஓட்டங்கள் பகிரப்பட்ட நிலையில் டில்ஷான் 92 ஓட்டங்களுடன் வெளியேறினார். மறுமுனையில் தனது போராட்டத்தை தொடர்ந்த சங்ககார 232 பந்துகளில் தனது 27 ஆவது டெஸ்ட் சதத்தை பூர்த்தி செய்தார். தொடர்ந்து கடந்த ஆட்டங்களில் ஏமாற்றி வந்த மஹேல களம் புகுந்தார். நேற்றைய தினம் வெகுநிதானமாக ஓட்டங்களைச் சேர்த்தார்.

இறுதியில் நேற்றைய ஆட்டநேர முடிவில் 86 பந்து பரிமாற்றங்களில் இலங்கை அணி 2 இலக்குகளை இழந்து 245 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டுள்ளது. சங்ககார 112 ஓட்டங்களுடனும், மஹேல 32 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். பந்து வீச்சில் உமர் குல், சயிட் அஜ்மல் தலா ஒரு இலக்கினை சரித்தனர். (15)

# தில்ஹார பெர்னான்டோ, அப்ரிடி அணிக்குத் திரும்பினர்

இலங்கைக்கு எதிரான ஒருநாள் தொடரில் விளையாடும் இலங்கை அணியில் தில்ஹார பெர்னான்டோவும், பாகிஸ்தான் அணியின் முன்னாள் அணித்தலைவர் அப்ரிடி இருவரும் அணியில் மீண்டும் இடம்பிடித்துள்ளனர்.

32 வயதான பெர்னான்டோ இறுதியாக இந்த வருட ஆரம்பத்தில் மேற்கிந்தியத்தீவுகளுடனான தொடரில் விளையாடியிருந்தார். தொடர்ந்து இடம்பெற்ற உலகக் கிண்ணத் தொடரில் அணியில் இடம்பெற்றிருந்த போதும் ஒரு ஆட்டத்தில்கூட விளையாட வாய்ப்புக் கிடைக்கவில்லை. இதன் பின்னர் இலங்கை அணி, இங்கிலாந்துக்கு சுற்றுப் பயணம் செய்து விளையாடிய போதும், இலங்கைக்கு, ஆஸ்திரேலியா சுற்றுப் பயணம் செய்து விளையாடிய போதும் அணியில் இடம்பெறவில்லை. இந்த நிலையில் பாகிஸ்தானுக்கு எதிரான ஒரு நாள் தொடரில் இணைக்கப்பட்டுள்ளார்.

அப்ரிடி, கடந்த மே மாதம் நடைபெற்ற மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான டெஸ்ட் தொடரின் போது, பயிற்சியாளர் வக்கார் யுனிசுடன் ஏற்பட்ட மோதலையடுத்து அணித் தலைவர் பதவியில் இருந்து நீக்கப்பட்டார் அப்ரிடி. அதன் பிறகு கிரிக்கெட் சபை நிர்வாகிகளுடன் மோதல் ஏற்பட்டதால் ஓய்வுபெற்றார்.

இந்த நிலையில் கிரிக்கெட் சபை நிர்வாகிகள் மாற்றப்பட்டு புதிய நிர்வாகிகள் நியமிக்கப்பட்டனர். இதையடுத்து சபையின் புதிய தலைவரான ஜகா அஷ்ரப்பை, அப்ரிடி புதன்கிழமை சந்தித்தார். இதைத் தொடர்ந்து மீண்டும் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சூதாட்டப் புகாரில் வஹாப் ரியாஸிடம் விசாரணை நடத்தப்படலாம் என்று தகவல் வெளியானதால் அவர் அணியில் இருந்து கழற்றிவிடப்பட்டுள்ளார். தான் அணிக்கு மீண்டும் அழைக்கப்பட்டுள்ளது குறித்துப் பேசிய அப்ரிடி, மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது. நான் சபைத் தலைவர் அஷ்ரப்பை சந்தித்த போது அவர் மிகவும் அன்போடும், ஊக்கப்படுத்தும் வகையிலும் பேசினார்.

நான் பாகிஸ்தானுக்காக விளையாட விரும்புகிறேன். அணித் தலைவராக யார் இருந்தாலும் அவர்களுக்கு கீழ் விளையாடுவதில் எனக்கு எந்த பிரச்சினையும் இல்லை. இப்போதைய அணித்தலைவர் மிஸ்பாவுடன் எனக்கு நல்லுறவு உள்ளது. அவருக்கு ஆதரவாக இருப்பேன் என்று தெரிவித்துள்ளார்.

இலங்கை அணி விவரம்: திலகரட்ன டில்ஷான் ( அணித்தலைவர்), அஞ்சலோ மத்தியூஸ் ( உப தலைவர்), உபுல் தரங்க, மஹேல ஜெயவர்தன, குமார் சங்ககார, தினேஷ் சன்டிமால், ஜீவன் மெண்டிஸ், குலசேகர, லசித் மலிங்க, தில்ஹார பெர்னான்டோ, சுரங்க லக்மால், தம்மிக்க பிரசாத், சுராஜ் ரந்தீவ், திமுத் கருணாரட்ண, சீகுகே பிரசன்ன

பாகிஸ்தான் அணி விவரம்: மிஸ்பா உல் ஹக் (அணித்தலைவர்), இம்ரான் பர்கத், மொஹமட் ஹபீஸ், யுனிஸ்கான், உமர் அக்மல், ஷபிக், மலிக், அப்ரிடி, ரசாக், அஹமது, ஜூனைத்கான், குல், சீமா, தன்வீர், ரெஹ்மான், சயீட் அஜ்மல். (15)

# பந்து வீசிய கைகள் கம்பி எண்ணுகின்றன

கிரிக்கெட் சூதாட்டத்தில் ஈடுபட்ட பாகிஸ்தான் வீரர்கள் சல்மான் பட், முகமது ஆசிப், முகமது ஆமிர் மற்றும் சூதாட்ட முகவரான மஸார் மஜீத் ஆகியோருக்கு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு நடந்த லோர்ட்ஸ் டெஸ்டில், பாகிஸ்தான் அணியின் அப்போதைய அணித்தலைவர் சல்மான் பட் (வயது-27), வேகப்பந்து வீச்சாளர்கள் முகமது ஆசிப் (வயது-28), முகமது ஆமிர் (வயது-19), ஆகியோர் 'ஸ்பொட் பிக்சிங்கில்' ஈடுபட்டு பிடிபட்டனர். சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி.) சார்பில், சல்மான் பட் (10 ஆண்டுகள்), முகமது ஆசிப் (7 ஆண்டுகள்), முகமது ஆமிர் (5 ஆண்டுகள்) ஆகியோருக்கு ஆட்டங்களில் பங்கேற்க தடை விதிக்கப்பட்டது.

**குற்றம் நிரூபனம்**

இந்த மூன்று வீரர்கள் மீதும் சதிசெய்து ஏமாற்றுதல், லஞ்சப்பணம் பெறுதல் போன்ற பிரிவுகளில், லண்டனில் உள்ள 'சவுத்வொர்க் கிரவுன்' நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டது. குற்றத்தை ஒத்துக் கொண்ட முகமது ஆமிரிடம் விசாரணை நடக்கவில்லை.

**சிறைக்குள் அடைப்பு**

மூன்று வீரர்களுக்கும் லண்டன் நீதிமன்றம் நேற்று சிறைத்தண்டனை விதித்தது. அதிகபட்சமாக சூதாட்ட முகவரான மஸார் மஜீத்துக்கு 2 வருடங்கள் மற்றும் 8 மாதங்களும், பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர்களில் அணித்தலைவரான சல்மான் பட்டுக்கு 2 வருடங்கள் மற்றும் 6 மாதங்களும், முகமது ஆசிப்புக்கு ஒரு வருடமும், முகமது ஆமீருக்கு 6 மாதங்களும் சிறைத்தண்டனை விதித்தது.

**பத்திரிகைக்கு பாராட்டு:**

இதுகுறித்து லண்டன் புலனாய்வுத் தலைமையாளர் மாட் ஹார்ன் கூறுகையில், இதுபோன்ற தீர்ப்புகளால், வீரர்கள் உண்மையான உணர்வுடன் போராடுவார்கள். இந்த சூதாட்டத்தை வெளியே கொண்டு வர உதவிய 'த நியுஸ் ஒப் த வேர்ல்ட்' பத்திரிகையின் செயல் பாராட்டத்தக்கது, என்றார்.

**கம்ரானிடம் விசாரணை:**

இந்த வழக்கின் போது பொலிஸ் தரப்பில் வாதாடிய சட்டத்தரணி அப்தாப் ஜாபர்ஜீ கூறுகையில், சூதாட்ட சர்ச்சையில் கம்ரான் அக்மல், வகாப்ரியாஸ் ஆகியோரது நடவடிக்கைகள் மிக ஆழமாக சந்தேகத்தை ஏற்படுத்தியது, என்றார்.

இதுகுறித்து ஐ.சி.சி., வெளியிட்ட அறிக்கையில், கம்ரான் அக்மல், வகாப் ரியாஸ் இருவரும் சூதாட்ட முகவர் மசார் மஜீத்துடன் இணைத்து பேசப்பட்டனர். இதுவரை இவர்கள் மீதான புகார் குறித்து புதிய விசாரணை நடத்த ஐ.சி.சி. முடிவு செய்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்னாள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திகதி நிச்சயம் தனக்கு விடுதலை கிடைக்கும் என்றும் சரத் பொன்சேகா தெரிவித்தார் என்று பண்டார எம்.பி. கூறினார்.

சர்வதேச மட்டத்தில் இலங்கை அரசு மீது அதிருப்தி ஏற்பட்டிருக்கின்ற நிலையில் முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என்.சில்வாவை பழிவாங்குவதற்கு அரசு முயற்சித்து வருகின்றமை இலங்கை மீதுள்ள சர்வதேசத்தின் அதிருப்தியை மேலும் அதிகரிக்கச் செய்துள்ளது.

பெருந்தொகையிலான நிதியை செலவிட்டு அமைக்கப்பட்ட நுரைச்சோலை அனல் மின் நிலையத்திற்காக இன்று எரிபொருள் வீண்விரயம் செய்யும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறானதொரு சூழ்நிலையில் முன்னாள் பிரதம நீதியரசர் மீது குற்றச்சாட்டுகள் சுமத்தி வருகிறது அரசு.

சிறந்த பிரதம நீதியரசர் என்ற சான்றிதழ் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என். சில்வாவுக்கு வழங்கப்பட்டது. இன்று ஜனாதிபதி மஹிந்த தலைமையிலான அரசு சரத் என்.சில்வாவுக்கு எதிராக நாடாளுமன்றத்தின் ஊடாக தெரிவுக்குழு ஒன்றை அமைக்க தீவிரமாகச் செயற்பட்டு வருகின்றது.

அரசுக்குச் சவாலாக இருந்த என்னை சிறையில் அடைத்ததுபோல, முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என்.சில்வாவையும் சிறையில் தள்ள அரசு முயற்சி செய்துவருகிறது.

- இவ்வாறு முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தன்னிடம் கூறினார் என பாலித ரங்கே பண்டார தெரிவித்தார். (த-சி)

## லஞ்சம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மட்டக்களப்பு அட்டாளைச்சேனையை சொந்த இடமாகக் கொண்ட ஒருவர் குறித்த கிராம அலுவலர் பிரிவில் திருமணம் செய்து வசித்து வருகிறார். அவருக்குச் சொந்தக் காணி இல்லாமையினால் மீளக்குடியமர்வு பதிவு செய்வதில் சிக்கல் நிலை இருந்தது. அவ்வாறு பதிந்து தருவதானால் 8 ஆயிரம் ரூபா பணமும் ஒரு சாராயப் போத்தலும் வாங்கித்தரவேண்டும் என்று குறித்த கிராம சேவையாளர் அவரிடம் கேட்டுள்ளார்.

அதற்குக் குறித்த நபர் சம்மதித்துவிட்டு இலஞ்ச ஊழல் தடுப்புப் பிரிவுக்கும் தகவல் வழங்கியுள்ளார். குறித்த கிராம சேவையாளருக்கு வழங்கச் சம்மதித்தன் பிரகாரம் துணுக்காய் உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் வைத்துக் கிராம சேவையாளரிடம் வழங்கியுள்ளார். அப்போது இலஞ்ச ஊழல் தடுப்புப் பிரிவினர் கையும் மெய்யுமாகக் குறித்த கிராம சேவையாளரைக் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட கிராம சேவையாளர் மாங்குளம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்து நேற்றையதினம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டார். இதன்போது இலஞ்ச ஊழல் தடுப்பு அதிகாரி சுகத் குமார, மேற்படி நபரைக் கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யக் கேட்டுக் கொண்டதன் பிரகாரம் எதிர்வரும் 15 ஆம் திகதி கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றில் ஆஜர் செய்யக் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் பெ.சிவகுமார் உத்தரவிட்டார். (த-15-6)

## தேச வழமை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேசுவதில்லை. போராடவும் மாட்டார்கள்.

எனினும், வடக்கில் அனைத்து வளங்களும் தமிழ் மக்களுக்கு மட்டும் என்று சிலர் நினைக்கிறார்கள். அவ்வாறு நாங்களும் நினைத்தால் எங்களது பிரதேசத்திலுள்ள தமிழ் மக்கள் எங்கே போவார்கள்? நாங்கள் அப்படிச் செய்வதுமில்லை.

கலாசாரம், பரம்பரை இரகசியங்களைப் பாதுகாப்பது அனைவரது உரிமைகளாகும். அதில் எவரும் தலையிட முடியாது. ஆனால், தமிழ் - சிங்கள வேறுபாட்டுடன் செயற்படும் தமிழ்க் கட்சிகள் தங்களது வரட்டு கௌரவத்தை தணித்துக்கொள்ளவேண்டும் - என்றார். (த-சி)

## குடாநாட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிபர் தெரிவித்துள்ளார். அத்துடனே பொலிஸ் நிலையங்களுக்கு முறைப்பாடு செய்யச் செல்லும் பெண்களைப் பொலிஸார் தொலைபேசி இலக்கங்கள் கேட்பது தொடர்பிலும் தெரிவித்தேன். இந்த விடயங்கள் தொடர்பில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்வதாகவும் பதில் பிரதிப் பொலிஸ் மா அதிபர் உறுதியளித்ததாக அரச அதிபர் குறிப்பிட்டார்.

இதேவேளை நீதிமன்றங்களும், பெண்களுக்கு எதிரான வன்முறையை ஒழிப்பதற்கு அரச அதிபர் என்ற ரீதியில் நான் மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு ஆதரவளிப்பதாகத் தெரிவித்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். (த-15)

# நல்லூர் பிரதேச சபை, கொக்குவில்.
## 2012 ஆம் ஆண்டுக்கான
## கேள்வி அறிவித்தல்

நல்லூர் பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட கீழ்க்காணும் சந்தைகள், இறைச்சிக்கடைகள் என்பவற்றை 2012 ஆம் ஆண்டு தைமாதம் முதலாம் ஆம் திகதி தொடக்கம் மார்கழி 31 ஆம் திகதி வரை குத்தகைக்கு விடுவதற்கான கேள்விகள் 18.11.2011 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணிவரை நல்லூர் பிரதேச சபை தலைமைக்காரியாலயத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அன்று பிற்பகல் 2.00 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். அத்தருணம் கேள்விக்காரரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமூகமளிக்கலாம்.

கேள்விப்பத்திரங்கள் மூன்று பிரதிகளில் தயாரிக்கப்பட்டு, மூலப்பிரதியுட்பட இரு பிரதிகளை **தலைவர், நல்லூர் பிரதேச சபை, 14/5, கருவப்புலம் வீதி, கொக்குவில்** என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு, தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு, பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும், அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்துக்கு முன் இடுதல் வேண்டும். [எக்காரணம் கொண்டும் அன்று முற்பகல் 10 மணிக்குப் பின்னர் சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது] மூன்றாவது பிரதியை **பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம்** என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் கீழ்க்குறிப்பிட்ட மீளளிக்கப்படாத படிவக்கட்டணமும், மீளளிக்கப்படக்கூடிய வைப்புப் பணமும் செலுத்திப் பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் 17.11.2011 ஆம் திகதி வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரங்களை பெறுபவர்கள் தமது அடையாள அட்டையைக் கொண்டு வருதல் வேண்டும்.

கூட்டுறவுச் சங்கங்கள் தவிர்ந்த, தனிப்பட்டவர்கள் திருநெல்வேலிச்சந்தை, கொக்குவில் சந்தை என்பவற்றுக்குரிய விண்ணப்பப் பத்திரங்களை பெற்றுக்கொள்ள விரும்பின், ஏதாவதொரு வங்கியில் தங்கள் பெயரில் முறையே ரூபா 1,500,000.00 க்கும் ரூபா 200,000.00 க்கும் குறையாது வைப்பில் உள்ளமைக்கான ஆதாரங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு பூரண அதிகாரம் உண்டு. ஏற்றுக்கொள்ளக்கூடிய குறைந்த கேள்வித்தொகையிலும் குறைவான கேள்வி கோருபவர்களின் கேள்வி வைப்புப்பணம் மீளளிக்கப்படமாட்டாது. தெரிவு செய்யப்படும் சந்தைக்குரிய கேள்விக்காரர் கேள்வித்தொகையின் 1/3 பகுதியையும் இறைச்சிக்கடைகளுக்குரிய கேள்விக்காரர் கேள்வித்தொகையின் 2/3 பகுதியையும் 02.12.2011 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினைச் செய்து கொள்ளவேண்டும். மேலதிக விவரங்களை தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

### 2012 ஆம் ஆண்டு சந்தைகள், இறைச்சிக்கடைகளுக்கான குத்தகை அட்டவணை

| இல. | சந்தைகள் (துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையத்துடன்), இறைச்சிக்கடைகள் | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த தொகை (வற்வரி தவிர்ந்த) |
|---|---|---|---|---|
| | **நல்லூர் உப அலுவலகம்** | | | |
| 1 | திருநெல்வேலிச் சந்தை (துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையத்துடன் | 1000.00 | 15000.00 | 15,070,660.00 |
| 2 | திருநெல்வேலிச் சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 500.00 | 5000.00 | 199,100.00 |
| 3 | திருநெல்வேலிச் சந்தை கோழி இறைச்சிக்கடை இல:1 | 500.00 | 5000.00 | 155,540.00 |
| 4 | திருநெல்வேலிச் சந்தை கோழி இறைச்சிக்கடை இல:2 | 500.00 | 5000.00 | 133,210.00 |
| | **கொக்குவில் உப அலுவலகம்** | | | |
| 1 | கொக்குவில்குளப்பிட்டிச் சந்தை (துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையத்துடன்) | 1000.00 | 10000.00 | 827,420.00 |
| 2 | கொக்குவில் சந்தை கோழி இறைச்சிக்கடை | 500.00 | 5000.00 | 330,550.00 |
| 3 | கொக்குவில் சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 500.00 | 5000.00 | 132,000.00 |
| 4 | கொக்குவில் உப அலுவலக மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 5000.00 | 375,660.00 |
| 5 | கொக்குவில் உப அலுவலக ஆட்டிறைச்சிக்கடை | 500.00 | 5000.00 | 45,100.00 |
| 6 | கோண்டாவில் ஸ்ரேஷனடி மரக்கறிச் சந்தையும் மாட்டிறைச்சிக்கடையும் | 500.00 | 5000.00 | 105,710.00 |
| 7 | கொக்குவில் உப அலுவலக இல. 329, பலாலி வீதி, ஆட்டிறைச்சிக்கடை | 500.00 | 5000.00 | 152,460.00 |

**நல்லூர் பிரதேச சபை,**
**கொக்குவில்.**

[illegible]
தவிசாளர் நல்லூர் பிரதேச சபை.

## டெங்கு ஒழிப்பு பிரதேச மட்டத்தில் போதாது

டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளின் பிரதேச மட்டத்திலான செயற்பாடுகள் திருப்தியளிக்கவில்லை என்று சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

குறிப்பாக உள்ளூராட்சி சபைகளும், பிராந்திய சுகாதாரப் பிரிவுகளும் இதன்பொருட்டு நேரடிப் பங்களிப்பை வழங்குவதில்லை என தொற்று நோய் ஆய்வுப் பிரிவின் மலேரியா மற்றும் டெங்கு தொடர்பான பணிப்பாளர் வைத்தியர் சரத் தெனியகே தெரிவித்தார்.

மழையுடனான காலநிலை காரணமாக டெங்குக் காய்ச்சல் மேலும் பரவக்கூடிய அவதானம் நிலவுகிறது என அவர் தெரிவித்தார்.

குப்பை கூளங்களை அகற்றும் நடவடிக்கைகளில் உள்ளூராட்சி சபைகள் இதனை விடக் கூடுதல் செயற்றிறனுடன் செயற்படுவதன் அவசியம் குறித்தும் வைத்தியர் சரத் தெனியகே சுட்டிக்காட்டினார்.

டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் தொடர்பாக மக்களின் ஆர்வம் மிகக் குறைந்த மட்டத்திலேயே நிலவுகிறது என மலேரியா மற்றும் டெங்கு தொடர்பான பணிப்பாளர் மேலும் கூறினார்.

## முதலாம் ஆண்டு நினைவு கூரல்



தோற்றம்
19.01.1937



மறைவு
15.11.2010

அமரர் திருமதி
### பொன்னுத்துரை அருளம்மா
**திதி: நிர்ணய வெண்பா**

ஆண்டு விகிர்தி ஐப்பசித் திங்கள்
இருபத்தியொன்பதில் வளர்பிறை
நவமி திதியில் - பதிவிரதையாம்
அருளம்மா பொன்னுத்துரை என்னும்
நல்லாள் புகுந்தாள் - விண்ணதனில்

பிள்ளைகள், மருமக்கள்,
திரு.திருமதி மோகன் ([illegible]),
திரு.திருமதி சூரசீலன் (பிரான்ஸ்),
திரு.திருமதி மதியழகன் (பிரான்ஸ்),
திரு.திருமதி திருச்செல்வம் (பிரான்ஸ்)

வலி.வடக்கு 86

## மரண அறிவித்தல்
*பொன்னம்பலம் தெய்வானைப்பிள்ளை*



மீசாலை மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் தெய்வானைப் பிள்ளை நேற்று (03.11.2011) வியாழக்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற இராசம்மா மற்றும் தம்பிப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும், இராசம்மா (கனடா), பரமேஸ்வரி ஆகியோரின் பாசமிகு தாயும், கார்த்திகேசு, கந்தசாமி ஆகியோரின் அன்பு மாமியும், ஜெயராணி, சற்குணசீலன், விஜயராணி, சத்தியசீலன், செல்வரஜனி, ரூபரஜனி, சசீலன், சிவணேசன், சிவகுமார், சகிலா, வித்யா, பிரதீபா, நித்யா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், சோபிகா, ஏதுஜன், சர்மிளன், அர்ச்சனா, தனஞ்சனா, ஜெயகீதன், சுகேசனா, ஜதுர்சன், தர்மிகா, சர்மிகா, ராகவி, கிருஷ்ணவி, மதுமாறன், லதுஷன், ஜஸ்மிகா, பிரணவன், நிக்ஷனா, கீர்த்தீஸ், நதிசா, அபூர்வா, நிரூஜா, வர்ஷா, அஸ்வின், தஸ்வின், தபேஷ் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (3.11.2011) வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்றது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வங்களா வீதி,
மீசாலை மேற்கு,
மீசாலை.

தகவல்:
குடும்பத்தினர்.

## ராஜா கிறீம் ஹவுஸின் புதிய கிளை

எமது புதியகிளை ஒன்று நல்லூர் பின் வீதியில் திறந்துவைக்கப்பட்டுள்ளது. என்பதனை வாடிக்கையாளருக்கு மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம். தரமான, சுவையான, சுத்தமான ஐஸ்கிறீம் வகைகள், சிற்றுண்டிகள், குளிர் பானங்கள் என்பவற்றுடன் மதிய உணவும் (சைவம்) பெற்றுக்கொள்ளலாம்.

இவைபவர் சுவைத்து மகிழ நாடுங்கள்

**ராஜா கிறீம் ஹவுஸ்**
இல.120, பருத்தித்துறை வீதி, நல்லூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சேல்ஸ் கேல்ஸ் தேவை

யாழ்ப்பாணம் பட்டணத்தில் உள்ள புடைவை நிறுவனத்துக்கு வியாபாரம் பழகிய பெண் பிள்ளைகள் தேவை. 0772850753

## மரண அறிவித்தல்



### வைத்திலிங்கம் - நாகமுத்து

நெடுந்தீவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் உருத்திரபுரம், எள்ளுக் காட்டில் வசித்தவருமாகிய காலஞ்சென்ற சின்னத்தம்பி - வள்ளியம்மை இணையரின் அன்பு மகளும் காலஞ்சென்ற நாகலிங்கம்-பொன்னம்மா இணையரின் அன்பு மருமகளும் அமரர் வைத்திலிங்கத்தின் (ஓய்வு பெற்ற பரிசாரகர்) பாசமிகு மனைவியுமான நாகமுத்து கடந்த (02.11.2011) புதன்கிழமை காலமானார்.

அன்னார் அமரர்களான வேலுப்பிள்ளை, கணபதிப்பிள்ளை ஆகியோரின் தங்கையும் சேதுப்பிள்ளை டெய்சியின் அன்பு அக்காவும் அமரர்களான சின்னத்துரை, தர்மலிங்கம் அன்னபூரணம் மற்றும் தங்கப்பிள்ளை ஆகியோரின் அன்பு மைத்துனியும் மகேந்திரராசா (குமரிவேந்தன் ஓய்வு பெற்ற மின் கண்காணிப்பாளர், இ.மி.சபை, முன்னாள் கிளி.மாவட்டத் தமிழ்ச் சங்கச் செயலர்), குகராசா (தலைவர்-கரைச்சிப் பிரதேச சபை, முன்னாள் கரைச்சி தெற்கு ப.நோ.கூ.சங்கத் தலைவர்) அமரர் அரியராசா (தொலைத் தொடர்பு பரிசோதகர்) மற்றும் பரமராசா (முன்னாள் கிளிநொச்சி பால்சபை முகாமையாளர்), கோணேசுவரி, சாந்தீசுவரி ஆகியோரின் அன்புத் தாயும் புனித லீலாவதி, லலிதாதேவி (கால்நடை அபிவிருத்தி போதனாசிரியர்), பவானி, காலஞ்சென்ற புவனேந்திரராசா (முன்னாள் விளையாட்டு அலுவலர்) மற்றும் சிறில் (பூக்கன்டு வாணிபம்) ஆகியோரின் பாசமிகு மாமியும் மருத்துவர் டானியல் புனிதராசா (முன்னாள் மருத்துவர் அரசினர் வைத்தியசாலை, வவுனியா), டேவிட் மதன்ராசா, ஜோன் தமிழ்ராசா, சுவேந்தினி (ஆசிரியை, கிளி/ கனகபுரம் ம.வி.), ஜெயந்தி (முன்னாள் வடபிராந்திய சுகாதார சேவைகள் திணைக்கள நிகழ்சித்திட்ட உதவியாளர்), ஓவியா, நித்திலன், யனார்த்தன், சயா, யொனதன், ரதீசியா, ரதீபன், ரதீபா, சங்கீர்த்தனா, கெல் சிகா, கமில்டன் ஆகியோரின் அன்புப் பாட்டியும் தளிரினி, இலக்கியன், விசாகன், கவின், ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிநிகழ்வுகள் இன்று (04.11.2011) வெள்ளிக்கிழமை மு.ப.10 மணிக்கு இல.677, கனகபுரம் வீதி, செல்வாநகர், கிளிநொச்சியில் நடை பெற்று, பூதவுடல் திருநகர் பொது மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*தகவல்:*
**குடும்பத்தினர்.**

## உமாதவா கல்வி நிலையம்
### (அல்லாரை வீதி, மீசாலை)

**தரம் 5 புலமைப் பரிசில் வெற்றியாளர்களுக்கான பாராட்டு விழா - 2011**

இடம் : உமாதவா கல்வி நிலையம்
காலம் : 06.11.2011 ஞாயிற்றுக்கிழமை
நேரம் : காலை 9 மணி

*தலைவர்:*
**திரு.க.கனகேஸ்வரன்**
*(தொழில் திணைக்கள பிரதி ஆணையாளர் - வட மாகாணம்)*

*பிரதம விருந்தினர்கள்:*
**வைத்திய கலாநிதி திரு.பி.அச்சுதன்** அவர்கள்
*(யாழ்.போதனா வைத்தியசாலை)*

**வைத்திய கலாநிதி திருமதி அ.வினோதா** அவர்கள்
*(யாழ்.போதனா வைத்தியசாலை)*

*சிறப்பு விருந்தினர்:*
**திரு.தி.ஸ்ரீஸ்கந்தராசா அவர்கள்**
*(உதவிக் கல்விப் பணிப்பாளர் - ஆரம்பக்கல்வி, வலயக் கல்வி அலுவலகம், தென்மராட்சி)*

*கௌரவ விருந்தினர்கள்:*
**திரு.வே.விநாயகமூர்த்தி அவர்கள்**
*(அதிபர்-யா/ மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம்)*

**திரு.இ.ரவீந்திரன் அவர்கள்**
*(அதிபர் - யா/கல்வயல் ஸ்ரீசண்முகானந்த வித்தியாலயம்)*

**மாணவர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**

*உமாதவா நிலைய விழாக்குழுவினர்.*

## காரைநகர் பிரதேச சபை பகிரங்க அறிவித்தல்

காரைநகர் பிரதேச சபையினால் பிடிக்கப்பட்ட உரிமை கோராப்படாத கட்டாக்காலி மாடுகள் எதிர்வரும் 11.11.2011 வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு குறித்த கால் நடைகள் ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

***வே. ஆனைமுகன்,***
***தலைவர்,பிரதேச சபை, காரைநகர்.***

குறிப்பு:
1. சின்னாலடி காரைநகரில் அமைந்துள்ள பராமரிப்பு நிலையத்தில் ஏலவிற்பனை செய்யப்படும்.
2. குறித்த தினத்தில் ஏலத்தில் விடப்படுகின்ற மாடுகள் பிரதேசத்திலிருந்து வெளியே கொண்டு செல்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

## அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

**SOND நிறுவனத்தினால் நடத்தப்பட்ட அதிர்ஷ்டலாப சீட்டிழுப்பில் வெற்றி பெற்ற இலக்கங்கள்:**

| | |
|---|---|
| 1 ஆம் பரிசு சீட்டை இல. | 8377 |
| 2 ஆம் பரிசு சீட்டை இல. | 4279 |
| 3 ஆம் பரிசு சீட்டை இல. | 5922 |

**ஐந்து ஆறுதல் பரிசுகளின் சீட்டு இலக்கங்கள்:**

1. 5757
2. 8502
3. 6868
4. 4125
5. 7758

மேற்படி இலக்கத்துக்குரிய அதிர்ஷ்டசாலிகள் எதிர்வரும் 20.11.2011 ஆம் திகதிக்குள் எமது அலுவலகத்துக்கு உரிய ஆவணங்களுடன் வந்து பெற்றுக்கொள்ளவும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



**இராசா மயில்வாகனம்**

எமது நண்பன் ரவிபாலா அவர்களின் தந்தையின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**Arrul Global Express,**
**International Courier & Cargo Service,**
**Jaffna.**

## மரண அறிவித்தல்

**தம்பிராசா மகேந்திரன்**



கண்டுக்குளி, கோயில் வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிராசா மகேந்திரன் நேற்று (03.11.2011) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கோயில் வீதி, கண்டுக்குளி.

தகவல்:
ஜெயம் (மைத்துனர்).

## புதிய பொருளியல் கல்லூரி

மணிக்கூட்டு வீதி, யாழ்நகர். (பெருமாள் கோவிலுக்கு அருகாமை)

**A/L 2013 , A/L 2012, Paper Class**

**கலை, வர்த்தகப் பிரிவு**

**வர்த்தகப் பிரிவு**

கணக்கீடு : B. பாலகஜன் — பொருளியல் : NB. கஜீதரன்
வணிகக்கல்வி : S.K பாலசுபேஷ். S. யசோ
புள்ளிவிபரவியல், இலகு கணிதம் : S. சயந்தன்

**கலைப் பிரிவு**

| | |
|---|---|
| தமிழ் : A.K. கீர்த்திராஜன் | அளவையியல் : P. கமல் |
| புவியியல் : S.R. பாலா | இந்துநாகரீகம் : T. ஸ்ரீஸ் |
| வரலாறு : R.R. ஆனந்தன் | அரசியல் : A.K. றொபின்சன் |
| நாட. ஆரங்கி: S.R.ரமேஸ் | விவசாயம் : S. கிரி |
| சித்திரம்: R.R.ராஜ் | கிறிஸ்தவம் : S. கஸ்ரோன் |

ஆரம்பம் : 05-11-2011
சனி காலை 8.00மணி

**A/L Day Class** ஆரம்பம் : 07-11-2011
திங்கள் காலை 8.00மணி


## இடி மின்னல் பாதிப்பை குறைக்க மக்களின் ஒத்துழைப்பு தேவை

கொழும்பு, நவ.4

அதிக மழையுடனான காலநிலை காரணமாக இடியால் ஏற்படும் பாதிப்புகளில் இருந்து விலகிக்கொள்ளும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ள பொதுமக்களின் ஒத்துழைப்பு கோரப்பட்டுள்ளது.

மின்சக்தி அமைச்சு இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளது.

இதுதொடர்பாக அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் மின்கம்பங்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் மரங்கள் காணப்படின் அதனை வெட்டி அகற்றுவதன் மூலம் உயிரிழப்புகளைத் தவிர்த்துக்கொள்ள முடியும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

மின்கம்பங்கள் மற்றும் மின்சார கம்பிகளில் மரம் முறிந்து விழுந்ததன் காரணமாக பல உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன என அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மின்கம்பிகளில் மரம் முறிந்து விழும் நிலையில் இருப்பினும் அதனை உரிய வகையில் வெட்டி அகற்றாத உரிமையாளர்கள் தொடர்பாக பொது மக்கள் முறைப்பாடுகள் செய்ய முடியும்.

அந்த வகையில் 1987 என்ற இலக்கத்திற்கோ அல்லது 1910 என்ற இலக்கத்திற்கோ அறிவிக்க முடியும் என மின்சக்தி அமைச்சு பொதுமக்களை கோரியுள்ளது.

## கஞ்சா வைத்திருந்த இருவர் கைது

சட்டவிரோத போதைப்பொருளான கஞ்சா வைத்திருந்த இருவரைக் கிளிநொச்சிப் பொலிஸார் கைது செய்து நேற்று வியாழக்கிழமை கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தினர்.

கிளிநொச்சி பாரதிபுரம் பகுதியில் 6 கிராம் கஞ்சாவினை வைத்திருந்த ஒருவரினையும், இரணைமடு சந்திப் பகுதியில் 4 கிராம் கஞ்சாவினை வைத்திருந்த ஒருவரினையும் கைது செய்த கிளிநொச்சி பொலிஸார் நேற்றைய தினம் நீதிமன்றில் ஆஜர் செய்தனர்.

குறித்த இரு வழக்குகளையும் விசாரித்த நீதிவான் பெ.சிவகுமார் சந்தேக நபர்களை எதிர்வரும் 17 ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (த-15-6)


## பதவி வெற்றிடம்

★ அலுவலக உதவியாளர் (Peon)
★ Data entry Operator

ஆகிய பதவிகளுக்கு வெற்றிடங்கள் உள்ளன. தகுதி உடையவர்கள் நாளை காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரை நேரில் வரவும்.

GATE WAY
**கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**அறிவித்தல்**
SLAS வகுப்புக்கள்
யாழ்ப்பாணக்கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவில் ஞாயிறு பி.ப 1.00 மணி வகுப்பு இவ்வாரம் நாளை சனிக்கிழமை பி.ப 1.00 மணி தொடக்கம் மாலை 5.00 மணிவரை நடைபெறும்.

**புதிய பொருளியல் கல்லூரி**
மணிக்கூட்டு வீதி, யாழ்.நகர் (பெருமாள் கோயிலடி அருகில்)

**வணிகக் கல்வி**
S.K.பாலசுபேஷ். (H.N.Dip.in Acc)

**A/L 2012**
புதிய தேர்ச்சிகள் ஆரம்பம்:

| வியாபாரம் | வணிக முகாமைத்துவம் |
|---|---|
| sat, sun, 7-8am | sat, sun, 11- 12 pm |

ஆரம்பம்: 1-05.11.2011 சனிக்கிழமை

**NEW ECONOMICS COLLEGE**
(மணிக்கூட்டு வீதி - பெருமாள் கோயில் அருகில்)

**கணக்கீடு** திரு. K. பாலகஜன்
H.N. Dip. in ACC

| A/L 2012 & Day | A/L 2013 |
|---|---|
| 8 - 9 a.m. தியரி<br>12 - 1 p.m. PAPER<br>1 - 2 p.m. மீட்டல் | 11 -12 noon தொடங்கல்<br>12 - 1 p.m. PAPER<br>2 - 3 p.m. மீட்டல் |

தூர இடத்து மாணவர்களின் வேண்டுகோளுக்கு அமைய சனி, ஞாயிறு வகுப்புக்கள்

ஆரம்பம்: 05.11.2011, சனி (நாளை)

மாணவர்களின் நலன் கருதி ஒவ்வொரு பிரிவுக்கும் ஆரம்ப அலகில் இருந்து கற்பிக்கப்படும்.

**புதியதோர் உலகம் செய்வோம்**
யாழ் நகரில் இரு இடங்களில்

**DCM**

| | |
|---|---|
| 1ம் குறுக்குத் தெரு,யாழ்நகர் (வேம்படி மகளிர் கல்லூரிக்கு அருகாமையில்) | மணிக்கூட்டு வீதி, யாழ்நகர் (வெலிங்டன் சந்திக்கு அருகாமையில்) BEACON கல்வி நிறுவனத்தில் |

**A/L - 2013** கலை,வர்த்தக பிரிவுகள்

**வர்த்தகப் பிரிவு**

| | |
|---|---|
| பொருளியல் | வரதராஜன் |
| கணக்கீடு | பகீரதன் |
| வணிகக்கல்வி | முரளி |

**கலைப் பிரிவு**

| | |
|---|---|
| பொருளியல் | வரதராஜன் |
| தமிழ் | சந்திரலிங்கம் |
| புவியியல் | குமரன் |
| அரசியல் | சுகாஷ் |
| வரலாறு | ஆனந்தன் |
| இந்துநாகரீகம் | ஸ்ரீஸ் |
| அளவையியல் | துரை |
| நாட. அரங்கியலும் | ரமேஷ் |

**நாளை** இரு இடங்களிலும் ஆரம்பம்
(05.11.2011) காலை 8.00 மணி

நிர்வாக இயக்குநர் S.வரதராஜன்

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்





மலர்வு: 24.11.1937
உதிர்வு: 06.10.2011

**அமரர் அருணாசலம் நடராசா**

கடந்த 06.10.2011 அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவரின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (05.11.2011) சனிக்கிழமை காலை 9 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும். இந்த நிகழ்வில் கலந்துகொள்வதுடன். நாளை மறுதினம் (06.11.2011) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நிகழும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*(இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்)*

*88/3, திருவையாறு, கிளிநொச்சி.* — குடும்பத்தினர்

**BRITISH COLLEGE OF HIGHER STUDIES**
BCHS
உயர் தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கு
**25% கட்டணக் கழிவு**

**BI Exam - Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது**
City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளை விட மிகவும் இலகுவானதுடன் இது G.C.E. (O/L) English இற்கு ஒப்பானது. இது British High Commission னால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றமுடியும்.
Duration : 2 Months

**Spoken English With Grammar - Quick Learning Course** (1 1/2 Month)
ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புவர்களுக்காகவே நடாத்தப்படுகிறது. தொழில் புரிபவர்களுக்கு பிற்பகல், சனி மற்றும் ஞாயிறு வகுப்புக்கள் உண்டு.
A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு இது மிகவும் சிறந்தது.
வகுப்புக்கள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாகவும் (Video & Audio Visuals) கூடுதலான பயிற்சிகளுடன் நடாத்தப்படுகிறது.

**Diploma In English** (2 Month)
ஒரு தொழில் தேடுவதாயினும் சரி உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தற்காலத்தேவையும் அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. இத்தேவைகேற்ப எமது பாடத்திட்டங்களும் வகுப்புக்களும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. தொழில் புரிவோர் மாணவர்களுக்கென வகுப்புக்கள் உண்டு.

**A1 Exm - Sponsor / Settlement Visa** மூலம் UK செல்பவர்களுக்கான பரீட்சை
- U.K. அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது
- எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கு தோற்ற முடியும்
- சான்றிதழின் வலிது கால எல்லை அற்றது.
- 2012 April இல் எதிர்பார்க்கப்படும் புதிய நடைமுறையின் கீழ் ஆங்கிலத்தின் தராதரத்தை B1 நிலைக்கு உயர்த்த முடிவு செய்திருப்பதால் அதற்கு முன் உங்களை பதிவு செய்யுங்கள்.
- நம்பிக்கைக்குரிய சர்வதேச பரீட்சை
- ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது

அனைத்துப் பிரிவுகளுக்கும் புதிய வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

| Head Office | Jaffna Branch | Vavuniya Branch |
|---|---|---|
| 30 -1/14, w.A.De Silva Mw. Colombo - 6 Tel: 2500207 | No. 15, Sirambiyady Lane, off Stanley Road, Jaffna.Tel: 021 222 4550 | No. 13A, Annai Teresa Lane, (Near Rambaikulam Girls Convent) Rambaikulam, Vavuniya. Tel: 024 324 5287 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 04.11.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.